




# தமிழரசு

டிசம்பர் 16-31, 1997 ரூ.3



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556.95

# இந்த இதழில்...


★ பெரியார், அண்ணா, பாரதியார்,
பாரதிதாசன் விருதுகள் வழங்கும் விழா ... 2

★ இளம்பிள்ளைவாத நோய் ஒழிப்பு ... 6

★ தமிழ்நாடு முதலமைச்சர்
காவல் பதக்கம் வழங்கும் விழா ... 8

★ நேதாஜி சிலைதிறப்பு விழாவில் முதலமைச்சர் உரை ... 9

★ நன்னீரில் இறால் வளர்ப்பு ... 15

★ தமிழ் இசைச் சங்கம் இசை விழா ... 17

★ கார்ட்டூன் கலை வடிவங்கள் ... 21

★ "காவலர்கள் என்றென்றைக்கும்
எங்கள் நண்பர்களே" -முதலமைச்சர் கலைஞர் ... 25

★ அழகன்குளம் தொல்பொருள் ஆய்வு ... 29

★ "மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு
வேறுபாடு பகைமை கூடாது"
- பேராசிரியர் அன்பழகன் ... 33

★ எங்கள் ஊர்ப் பிரச்சினை ... 36

★ புகையில் களையெடுக்கும் புதிய உத்திகள்
- டாக்டர் கே.பாலகுருநாதன் ... 40

★ தமிழ்நாடு அறிவியல் பட்டமளிப்பு விழா ... 41

★ தென்மாநிலப் போக்குவரத்துத்துறை அமைச்சர்கள்
மாநாட்டில் கலைஞர் உரை ... 46

★ நூல் நயம் ... 48



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2028
மார்கழி
டிசம்பர் 16-31, 1997
மலர்:28 இதழ்:12
விலை ரூ.3

# பெரியார், அண்ணா, திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் கொள்கைகளை உள்ளத்திலே ஏந்தி-அவர்களின் இலட்சியங்களை நிறைவேற்ற முனைப்போடு பாடுபடுவோம் - விருது வழங்கும் விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை.

இன்று நடைபெறுகின்ற இந்த விழா தந்தை பெரியாரை - தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களை - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை - கவிச்சக்ரவர்த்தி பாரதியாரை நினைவுகூர்கிற விழாவாக அமைந்திருப்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

### பொருத்தமான நேரத்தில்அமைந்துள்ள விருதுவழங்கும் விழா

இந்த நாளில் நாம் நினைத்துக் கொள்ள வேண்டிய கவிதை வரிகள்-புரட்சிக் கவிஞர் பாடிய "எமை நத்துவாய் என எதிரிகள் கோடி



இட்டழைத்தாலும் தொடேன்'' என்ற வரிகள்தான். அதைப்போலவே பாரதியாருடைய கவிதை வரி - "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரடி கிளியே; வாய்ச் சொல்லில் வீரரடி" என்ற இந்த வரிகளாகும். மொத்தத் தொகுப்பாக நினைத்துக்கொள்ள வேண்டிய வரி - ''நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" - என்ற வரிகளாகும். அத்தகைய கவிதை வரிகளை யெல்லாம் நினைவூட்டக்கூடிய விழாவாக இந்த விருதுகள் வழங்கும் விழா இந்த நேரத்திலே அமைந்திருப்பது மிக மிக பொருத்த முடையதாக நான் கருதுகிறேன்.

இந்த விருதுகளைப் பெறுகிறவர்கள் - தந்தை பெரியாருடைய விருதைப் பெற்றுள்ள என்னுடைய அன்புத் தோழர் தவமணிராசன்; தமிழ்த்தென்றல் திரு.வி.க.பெயரால் அமைந்துள்ள விருதைப் பெற்றுள்ள என்னுடைய அருமை நண்பர், இயக்கத்தின் நீண்டகாலக் காவலர் மா.சு.சம்பந்தன்; புரட்சிக் கவிஞருடைய விருதைப் பெற்றுள்ள - புரட்சிக் கவிஞரைப் பற்றி பல ஆய்வுகளை நடத்தி நூல்களை எழுதியுள்ள சகோதரி சரளா ராஜகோபாலன் - பாரதியார் விருதினை முதன்முதலாக அரசின் சார்பில் இன்றைக்குப் பெறுகின்ற திருவாரூர் தம்பி கவிஞர் மதிவண்ணன் ஆகிய அனைவரையும் நான் உங்கள் இதயத்தோடு இணைந்துநின்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.


நம்முடைய பேராசிரியர் அவர்கள் விருது பெற்றுள்ள ஒவ்வொரு நண்பரைப் பற்றியும், சகோதரியைப் பற்றியும் இங்கே விளக்கிக் கூறியிருக்கிறார்கள்; வாழ்த்தியிருக்கிறார்கள்; போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

கவிஞர் மதிவண்ணன் அவர்கள் பாரதியார் விருது பெறுகிறாரென்றால், விழாத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல் சில திங்களுக்கு முன் நடைபெற்ற பாரதியார் விழாவில் - எனக்கு முன் உரையாற்றிய ஆண்டாள் என்கின்ற ஒரு அருமைச்செல்வி கவிஞர் - இந்த விருதுகள் பட்டியலில் பாரதியார் பெயர் இடம் பெற வில்லையே, அரசு என்னுடைய வேண்டுகோளை ஏற்குமா என்று அந்த விழாவிலே கேட்டார்.

### முதன்முதலில் "பாரதியார் விருது"

நான் அப்போதே சொன்னேன். "ஆண்டாள் பாடி அரங்கநாதனே உடனடியாக வரம் தந்திருக்கும்போது நான வரம் தர மாட்டேன்'' என்று சொல்லி உடனடியாக அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு மதிவண்ணன் அவர்களுக்கு அந்த விருது வழங்கப் பட்டிருக்கின்றது. ஏற்கெனவே அவர் திருவாரூர்க்காரர் என்று தெரிந்து விருது அளித்ததாக நீங்கள் யாரும் தவறாக கருதிக்கொள்ளக் கூடாது. இன்றைக்குத்தான் விருது பெறுகிறவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை - இந்த மேடைக்கு வருவதற்கு முன்பு காரில் படித்துக்கொண்டு வந்தேன். அப்போதுதான் அவர் திருவாரூர்க்காரர் என்பதைப் புரிந்து கொண்டேன். ரெட்டிப்பு மகிழ்ச்சிதான் இது. இல்லை என்று மறைக்கவில்லை

எனக்கு ரெட்டிப்பு மகிழ்ச்சி என்றால் அதே மகிழ்ச்சி நம்முடைய பேராசிரியருக்கும் ஏற்படும். ஏனென்றால் நாங்கள் இருவருமே அடுத்தடுத்த திருவாரூரைச் சேர்ந்தவர்கள் தான். மதிவண்ணன் அவர்களுடைய பல பெயர்களில் ஒன்று இளம்பாரதி என்பதாகும். நிகழ்ச்சி ஒன்றில் அவரை உரையாற்ற அழைக்கும்போது - அவருடைய உரை ஏறத்தாழ ஒரு கவிதை உரையாகவே அமைந்திருந்த பாங்கினைக் கண்டு நான் என் உள்ளத்தைப் பெரிதும் அவர்பால் பறி கொடுத்தேன். அதனால்தான் இந்த ஆண்டு பாரதியார் விருது முதன்முதலாக யாருக்கு வழங்கலாம் என்ற சிந்தனை எழுந்தபோது அவருடைய பெயர் உடனடியாக நினைவிற்கு வந்தது. அந்த விருதினை உங்கள் அனைவரின் அன்பான வாழ்த்துக்களோடு அவர் பெற்றிருக்கிறார். அவரை நானும் வாழ்த்துகிறேன்.



அரசின் சார்பில் உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்படும் மறைந்த பெருந் தலைவர்களின் நினைவிடங்களில் அவர்களது மார்பளவுச் சிலைகளை நிறுவிட வேண்டுமென **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார். அதனடிப்படையில், மறைந்த **முதலமைச்சர் பாரத ரத்னா எம்.ஜி.ஆரின்** மார்பளவுச் சிலையை அவரது 10வது நினைவுநாளான 24.12.97 அன்று அரசின் சார்பில் **முதலமைச்சர் கலைஞர்** திறந்து வைத்தார்.

## புரட்சிக்கவிஞரைத் தன்பால் இழுத்து பெண்ணுரிமை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட சரளா இராஜகோபாலன்

சரளா இராஜகோபாலன் அவர்கள் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்ணுரிமை, பெண்களுக்கான நியாயங்களை எடுத்துச் சொல்கிற ஆய்வுக் கட்டுரைகள், அதற்குப் பக்கபலமாக பாரதிதாசன் போன்ற புரட்சிக் கவிஞர்களை தன்பால் இழுத்து, அந்தக் கவிதை வரிகளின் மூலமாக உயிர் தந்திருக்கின்ற அந்த உயர்ந்த பாங்கு இவைகளை எண்ணிப்பார்த்து, மேலும், மேலும் அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்ற ஊக்கத்தை வழங்குவதற்காக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பெயரால் இன்று விருது அவருக்கு வழங்கப் பட்டிருக்கின்றது.

## பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை அருகிலிருந்து உணர்ந்தவர் மா.சு.சம்பந்தன்

மா.சு. சம்பந்தன் அவர்கள் எனக்கும், பேராசிரியருக்கும், இந்த இயக்கத்திற்கும் நீண்ட காலமாக நெருங்கிய நண்பர். பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை அருகிலிருந்து உணர்ந்தவர். அவர்களோடு அளவளாவியவர். இந்த இயக்கத்தினுடைய ஒவ்வொரு அங்குல வளர்ச்சியையும் கண்டு அகம் மகிழ்ந்தவர், அகமகிழ்ந்து கொண்டிருப்பவர். அத்தகையவருக்கு தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களுடைய விருதை இன்றைக்கு வழங்கக் காரணம் நம்முடைய தமிழ்க்குடிமகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பெரியாரும், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் பல நேரங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் கூட பெரியாருடைய வாழ்க்கைவளத்தில், பெரியாருடைய கொள்கை வெற்றியில் திரு.வி.க. அவர்களுக்கு ஒரு நல்ல எதிர்பார்ப்பு இருந்தது என்பதை மறக்க முடியாது.

## பெரியாருக்கும் - திரு.வி.க.விற்கும் இருந்த வேறுபாடு - பாலும் தண்ணீரும் போன்றது

விழாத் தலைவர் தமிழ்க்குடிமகன் திரு.வி.க. அவர்களுக்கும் பெரியாருக்கும் முரண்பாடு என்று சொன்னார். முரண்பாடு வேறு; வேறுபாடு வேறு. முரண்பாடு என்பது எண்ணெயும் தண்ணீரும் போன்றது. வேறுபாடு என்பது பாலும் தண்ணீரும் போன்றது. பாலும், தண்ணீரும் இருந்தால் தனித்தனியாக ஒன்றோடொன்று இணையக்கூடிய அளவிற்கு - தனித்தனியாக இருக்கும்போது இது பால், இது தண்ணீர் என்று சொல்லிவிடலாம். ஆனால் இரண்டும் இணைந்துவிட்டால் அதைப் பிரிக்க முடியாது. அளவைப் பொறுத்து அதை சென்னையிலே பிரிக்க முடியுமோ, முடியாதோ எனக்குத் தெரியாது. ஆனால் பொதுவாக பாலும், தண்ணீரும் வேறுபாடு கொண்டவை; ஆனால் பிரிக்க முடியாது. எண்ணெயையும், தண்ணீரையும் என்னதான் நீங்கள் ஒன்றாக ஒரு கிண்ணத்தில் வைத்தாலும் எண்ணெய் கீழே இருக்கும். தண்ணீர் மேலே இருக்கும். ஒன்றோடொன்று இணையாது. அதுதான் முரண்பாடு.

பெரியாருக்கும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்கும் இடையே முரண்பாடு அல்ல - வேறுபாடு இருந்தது உண்டு. அந்த வேறுபாடு பாலும் தண்ணீரும் போல இருந்த காரணத்தினால்தான் அதே திரு.வி.க. கடலூரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் "திராவிட நாடு திராவிடர்க்கே! திராவிடநாடு திராவிடர்க்கே!" என்று அவருடைய வாழ்நாளின் இறுதிக் கட்டத்திலே தந்தை பெரியார் அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டு மூன்று முறை முழங்கிய அந்த முழக்கம் இன்னமும் என்னுடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றது. அது ஒலிக்கக் கூடாது-வேறு காரணத்தால்! ஆனால் தானாக வந்து காதுகளில் ஒலிக்கின்ற அந்த முழக்கத்தை ஒலிக்காதே என்று சொல்ல நான் யார்? நீங்கள் யார்? அப்படி திரு.வி.க. அவர்கள் அன்றைக்குப் பெரியாருடைய அந்தக் குறிக்கோளைக் கடைசிக் காலத்திலே ஏற்றுக் கொண்டார் என்பதிலேயிருந்து அவர்களுக்கிடையே இருந்தது முரண்பாடு அல்ல; வேறுபாடுதான் என்பது விளக்கமாக ஆகிவிட்ட ஒன்றாகும்.

அத்தகைய பெரியவர் திரு.வி.க.அவர்கள் பெயரால் அமைந்த அந்த விருதினை எங்களுடைய நண்பரும், பழம்பெரும் பகுத்தறிவுவாதியுமான மா.சு.சம்பந்தன் அவர்கள் பெற்றிருப்பது எங்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாகும்.

## பெரியாருடைய பாசறையில், நானும் தவமணிராசனும் ஒன்றாக இருந்தவர்கள்

பெரியார் விருதைப் பெற்றிருக்கின்ற தவமணிராசனைப் பற்றி நான் கொஞ்சம் சொல்லித்தான் தீரவேண்டும். அவர் இங்கே எனக்கு ஒரு கறுப்புத் துண்டை அணிவித்தார். இப்படியெல்லாம் குறும்புத்தனமாகச் செய்வார் என்று எனக்குத் தெரியும். ஏதோ அவர் அணிவித்தால் நான் அணிந்து கொள்ள மாட்டேன் என்று ஒருவேளை எண்ணினாரோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் கொஞ்சநேரம் தோளிலே அதைப் போட்டிருந்து அதை எடுத்தபோது அவர் சொன்னார் 'இல்ல, அந்தக் கற்பு (கறுப்பு) தோளிலேயே இருக்கட்டுமென்று' சொன்னார். அவர் சொல்லும்போது அவருக்கு எப்போதுமே கொச்சை மொழிதான் வரும். அதனால் அந்த கற்பு தோளிலேயே இருக்கட்டுமென்றார். "கற்பு

எங்கேயும் போகாது அப்படியேதான் இருக்கும்" என்று சொன்னேன். அது போகவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். எங்கெங்கே கற்பு எப்படியெல்லாம் போகிறது இந்தக் காலத்திலே உங்களுக்கெல்லம் தெரியும். அதனால் பெரியார் ஊட்டிய அந்தப் பகுத்தறிவுக் கொள்கை, அந்த கொள்கையை அண்ணா அவர்கள் எங்களுக்கு எந்த வகையிலே வகுத்துத் தந்தாரோ அந்த இலட்சியப் பற்று என்றென்றும் நாங்கள் செத்து சாம்பலாகின்ற வரையில் சாம்பலாகிப் போனபிறகும் கூட அது மணந்து கொண்டுதான் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியோடு உங்கள் முன்னிலையில் சூளுரைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

## நானும், தவமணிராசனும், என் ஆருயிர் நண்பர் கருணானந்தம், டார்பிடோ ஜனார்த்தனம் ஆகியோரும் பெரியார் குருகுலத்தில் ஒன்றாகப் பயின்றோம்

பெரியாருடைய பாசறையில் நானும் தவமணி ராசனும் ஒன்றாக இருந்தவர்கள். நான், தவமணி ராசன், டார்பிடோ ஜனார்த்தனம், என் ஆருயிர் நண்பர் கவிஞர் கருணானந்தம் - இவர்கள் எல்லாம் 1944-45ஆம் ஆண்டுகளில் பெரியாருடைய குருகுலத்திலே இருந்து பயின்றவர்கள். நான் தவமணி ராசனாலும், கருணானந்தம் அவர்களாலும் ''ஈரோடு குருகுலத்திற்குப் பெரியார் உன்னை வரச் சொல்கிறார்'' என்று அழைக்கப்பட்டு புதுவையிலே நடைபெற்ற ஒரு கொடுமையான தாக்குதல் நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தக் காயங்களோடு நான் ஈரோட்டிலே பெரியாருடைய குருகுலத்திலே 'குடியரசு' பத்திரிகையின் 'துணை ஆசிரியனாகப்' பொறுப்பேற்றுக் கொண்டு - அந்தத் துணை யாசிரியர் குழுவிலே நானும் தவமணியும், கருணானந்தமும் பணியாற்றிக் கொண்டிருந்த காலக்கட்டம், ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றாலுங்கூட மறக்க முடியாதது.

## "சூரியனைப்போல நிலைத்திருக்கக் கூடிய சில சம்பவங்கள் உண்டு"

வாழ்க்கையிலே பல சம்பவங்களை மறந்து விடுகிறோம். பல சம்பவங்கள் மேகங்களைப் போல மனதிலிருந்து கலைந்து போய் விடுகின்றன. ஆனால் சந்திரனைப் போலக் கூட அல்ல; சூரியனைப் போல நிலைத்திருக்கக் கூடிய சில சம்பவங்கள் உண்டு. அந்தச் சம்பவம்தான் குருகுலமான ஈரோட்டுப் பாசறையில் நானும் தவமணி போன்றவர்களும் இருந்த அந்தக் காலக் கட்டமாகும். ஏறத்தாழ ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுக் காலம் அங்கே நாங்கள் இருந்திருக்கிறோம்.

என்னுடைய துணையாசிரியர் பொறுப்புக்கு எனக்குச் சம்பளம் அப்போது மாதம் 40 ரூபாய். யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை; அதற்கு முன்பு - எனக்கு முன்னால் அங்கே வெளியிடப்பட்ட விடுதலைப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அண்ணாவிற்கு மாதம் 50 ரூபாய்தான் சம்பளம். அண்ணா அவர்கள் ஈரோட்டிலிருந்து சென்ற பிறகுதான் அங்கே சென்றேன். அப்போது விடுதலை ஏடு நடைபெறவில்லை. குடியரசு வார இதழ் நடைபெற்றது. என்னுடைய 40 ரூபாய் சம்பளத்தில், பிற்பகல் சாப்பாடு, இரவுச் சாப்பாடு இதற்கெல்லாம் போக மிச்சப்படுவது பத்து ரூபாய். அதிலே ஐந்து ரூபாய் ஈரோட்டில் எங்கள் செலவிற்காக வைத்துக் கொண்டு, ஐந்து ரூபாயை நான் என் வீட்டிற்கு, திருவாரூரிலே உள்ள என்னுடைய குடும்பத்தாருக்கு அனுப்பிக்கொண்டிருந்த காலம். அப்போது ஐந்து ரூபாய்க்கு என்ன மதிப்பு என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது ஐந்து ரூபாய்க்கு மதிப்பு மிக மிக மலிவான மதிப்பு. அன்றைக்கு இந்த ஐந்து ரூபாய் பெரும் மதிப்புள்ளதாகத்தான் இருந்தது. அப்போது காலைச்சாப்பாடு மாத்திரம் நானும், தவமணியும், கருணானந்தமும், ஜனாத்தனமும் குடியரசு அலுவலகத்திற்கு எதிரேயிருந்த ஒரு ஆப்பக்கார அம்மாவிடம் ஒவ்வொரு நாளும் வரவழைத்துச் சாப்பிடுவோம். ஒரே இலையில் இட்லி, ஆப்பம், தோசையெல்லாம் பரிமாறப் பட்டிருக்கும்.

## தந்தை பெரியாரிடமே அலட்சியமாகப் பேசும் தவமணி

தவமணி இப்போதிருப்பதைப் போலக் கூட இல்லை, இன்னும் அழுக்காக அப்போது இருப்பார். குடியரசு அலுவலகத்திலேயே என்ன பெரிய போராட்டம் என்றால் - பெரியாரிடம் சென்று என்னைப் பற்றிப் புகார் கூறுவார்கள். தவமணி பெரியாரிடம் அலட்சியமாகப் பேசுவார். முதல்நாள் நான் சென்றவுடன் பயந்துவிட்டேன். பெரியாரை விட இவர் பெரிய ஆளா இருப்பாரு போல இருக்கேன்னு. பெரியார் ஏதாவது முக்கியமான விஷயம் சொல்லும்போது - "போங்கய்யா உங்களுக்கு ஒன்னும் தெரியாதய்யா'' என்பார். ''என்னப்பா, சொல்'' என்று பெரியார் இவரிடம் பயந்துகொண்டே கேட்பார். அந்த அளவிற்கு இவர் பேசுவார். நானே கொஞ்ச நாள் தவமணியிடம் அடங்கித்தான் இருந்தேன்.

## குளிப்பது - என்னோடிருந்த இவர்களுக்கும் பிடிக்காது பெரியாருக்கும் பிடிக்காது

நான் அங்கே செய்த குற்றம் எல்லாம் ஒவ்வொரு நாளும் காலையிலே எழுந்தவுடன் குளித்துவிடுவேன். இது இவர்களுக்கெல்லாம் பிடிக்காது. குடியரசு அலுவலகத்தில் அந்தப் பத்திரிகையின் மேனேஜர் பொறுப்பையும் ஆசிரியர் பொறுப்பையும் பார்த்துக் கொண்டிருந்தவர் கரிவரதசாமி என்ற பெரியாருடைய சொந்தக்காரர். பத்திரிகையிலே ஆசிரியர், வெளியிடுபவர் என்றெல்லாம் கரிவரதசாமியின் பெயர்தான் இருக்கும். குடியரசு பத்திரிகையை யார் படிக்கிறார்களோ இல்லையோ - இது அச்சடிக்கப்பட்டு வெளியே போகும் நேரத்தில் ஈரோடு குடியரசு அலுவலகத்தின் திண்ணை யிலே உட்கார்ந்து அதிலே ஒரு வரியைக் கூட விடாமல் படிக்கக் கூடியவர் - அந்த ஆசிரியர் கரிவரதசாமிதான். ஏன் தெரியுமா? பெரியார் என்ன எழுதியிருப்பாரோ? ஏது எழுதியிருப் பாரோ? எந்தப் போலீஸ்காரன் வந்து மறுநாள் பிடிப்பானோ? என்ன ஆவோமோ? என்ற பயத்திலேயே கரிவரதசாமி அதைப் பூராவும் படிப்பார்.

அவரிடமும் உள்ள ஒரு கெட்ட பழக்கம் காலையிலே குளிப்பதுதான். குளிப்பது பெரியாருக்கும் பிடிக்காது; இவர்களுக்கும் பிடிக்காது. நாங்கள் காலையிலே 5 மணி, 6 மணிக்கெல்லாம் எழுந்து விடுவோம். எழுந்தவுடன் காலைக்கடன்களை முடிப்பதற் காக ஈரோடு அலுவலகத்திலே உள்ள அந்தப் பகுதிக்குச் சென்றால் கதவு தாளிடப் பட்டிருக்கும். என்னவென்று கேட்டால், கரிவரதசாமி (அவருக்கு வயது 70 இருக்கும், அவர் அங்கே குளிர்ந்த தண்ணீரிலே குளித்துக் கொண்டிருப்பார். அவர் குளித்த பிறகுதான் நான் உள்ளே நுழைய முடியும். ஆனால் இவர்கள் எல்லாம் அதைப்பற்றி கவலைப் படாமல் "நீயே குளித்துவிட்டு வா'' என்று சொல்வார்கள். நான் போய்க் குளித்துவிட்டு வருவேன். அதற்குப் பிறகு நாங்கள் அனைவரும் காலைச் சிற்றுண்டி அருந்துவோம். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து, எல்லோருடைய கையும் அந்த ஒரே இலைக்குள் இருக்கின்ற இட்லி, ஆப்பம், தோசை, இடியாப்பம் அத்தனை பேரும் சாப்பிடுவோம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் சுமார் 25,000 தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக உள்ளதாக அறியப்பட்டுள்ளது.
முதற்கட்டமாக,
10,000 கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கென
ரூ.10 கோடி நிதி ஒதுக்கி
முதலமைச்சர் **கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

## கல்மிஷமும், களங்கமும் இல்லாமல் உயிர்த்தோழர்களாகப் பழகினோம்

இதில் கருணானந்தம் குளிக்காவிட்டாலும் பல்லாவது விளக்குவார். இவர் "அதெல்லாம் வீண் வேலை" என்பார். அப்போது இவருக்கு பல் அப்படியே மஞ்சளாக இருக்கும். இப்போது பாருங்கள் பல் எப்படி இருக்கிறது என்று. அந்தப் பல்லோடு ஒரு இட்லியை எடுத்து கடித்துவிட்டு அப்படியே இலையிலே போட்டு விடுவார். ஆனால் அதைப் பற்றி எந்தவிதமான கல்மிஷமும் இல்லாமல் களங்கமும் இல்லாமல் உயிர்த்தோழர்கள் என்ற முறையில் அன்றைக்கு அந்த ஒரே குடும்பமாக நாங்கள் பழகிய காரணத்தினால் - அதை தவமணிராசன் கடித்துப்போட்டு விட்ட இட்லி என்று கூடக் கருதாமல், ஏதோ காதலி கொடுத்த பலகாரம் மாதிரி கருதி அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த காலம் அது. அதெல்லாம் பசுமையான காலம்.

அண்ணா சொல்வார் - "பெரியாருடன் வாழ்ந்த அந்தக் காலம் வசந்த காலம்" என்று; அப்படிப்பட்ட வசந்த காலம் அது.

பெரியாரிடமே போய் இவர்கள் எல்லாம் குறை சொன்னார்கள். "என்னப்பா ?" என்று கேட்டார். "இந்தக் கருணாநிதி செய்வது ஒன்றும் சரியாயில்லைய்யா என்றார்கள். என்ன என்றார். ''காலையிலே தினந்தோறும் குளிக்கிறான்யா'' என்றார்கள்.

ஒவ்வொரு நாளும் காலையிலே அலுவலகத்திலிருந்து நாங்கள் புறப்பட்டு-குளித்து விட்டு நானும், குளிக்காமல் அவர்களும் பெரியாரைச் சந்திக்கும் போது-அவருக்கு வந்திருக்கின்ற அத்தனை கடிதங்களையும் அடுக்கி வைத்திருப்பார்கள். அதை ஒவ்வொன்றாக எடுத்து எங்களிடம் கொடுத்து, தவமணியிடம் ஒரு கடிதம் கொடுத்து, அதற்கு இன்ன பதிலை எழுது என்றும், என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, இன்ன பதிலை எழுது, அதைப்போல ஒவ்வொரு வருக்கும் ஒரு வேலையைக் கொடுத்துவிட்டு - அந்த வேலைகள் எல்லாம் சரியாக நடக்கிறதா என்று பார்க்க பகல் 11 மணிக்கெல்லாம் ஒரு ரிக்ஷாவிலோ அல்லது ஒரு மாட்டு வண்டியிலோ ஏறிக் கொண்டு பெரியார் அவர்கள் குடியரசு அலுவலகத்திற்கு வந்த அந்தக் காட்சியெல்லாம் இன்றைக்கும் என் கண் முன்னால் பசுமையாக இருக்கின்றது.

## அச்சுக்கோத்து வரும் எதையும் பார்த்தவுடன் உடனடியாகப் பிழைதான் எனக்குத் தெரியும் - குடியரசு அனுபவம்

கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு சிந்தித்தால் ஈரோடு கச்சேரி ரோடு, குடியரசு அலுவலகம், அங்கே ரிக்ஷாவிலே வந்து இறங்குகின்ற **பெரியார்** - அந்த வெண்தாடித் தவழத் தவழ உள்ளே நுழைகின்ற காட்சி - உள்ளே நுழைந்து குடியரசு அலுவலகத்திலே உள்ள கடைசிச் சின்ன அறையிலே போய் உட்காருகின்ற அந்தக் காட்சி - உட்கார்ந்தவுடன் அங்கேயிருக்கின்ற பையனைக் கூப்பிட்டு எங்களைக் கூப்பிடச் சொல்கின்ற காட்சி - நாங்கள் போய், செய்த வேலைகளை எடுத்துச் சொல்கின்ற அந்தக் காட்சி - அவர் எழுதிய தலையங்கம் - அவருக்கே புரியாத அளவிற்கு அவருடைய எழுத்து இருக்கும் - அதை நாங்கள்



மழைவெள்ளத்தால்
பெரும் பாதிப்புக்குள்ளாகிப்
பழுதடைந்துள்ள சாலைகளைத்
துரிதமாகச் சீரமைத்திட
நிவாரணங்களை மேற்கொள்ள
ரூபாய் 55 கோடி நிதி ஒதுக்கி
முதலமைச்சர் **கலைஞர்** ஆணை

படித்துப் புரிந்து கொண்டோம். இன்றைக்கும் நான் ஒரு அழைப்பிதழோ, ஒரு கட்டுரையோ அல்லது ஒரு கதையோ அச்சுக்கோத்து என்னிடம் வந்தால், அதைப் பார்த்தவுடன் அதிலேயுள்ள பிழை உடனடியாக எனக்குத் தெரியும். காரணம் குடியரசு அலுவலகத்திலே 'ப்ரூப்' திருத்தி - பிழை திருத்தி எனக்கேற்பட்ட அனுபவம்.

## இயக்கத்தை வளர்க்க கடைசி மூச்சையும் தரத் தயாராயிருக்கும் தவமணிராசன்

இப்படியெல்லாம் பெரியாரிடத்திலே பயின்றவர்கள் நாங்கள். பெரியாரிடத்தில் பழகியவர்கள் நாங்கள். பெரியாருடைய மாணவர்களாக-பெரியாருடைய தொண்டர்களாக இருந்தவர்கள் நாங்கள், அந்தத் தொண்டர்களாக இருந்தபோது நாங்கள் எண்ணவில்லை. நான் முதலமைச்சராக வருவேன்; தவமணிராசன் பெரியாருடைய விருதைப் பெறுவார்; இப்படி விருது பெறுகின்ற இடம் - பெரியாருடைய கொள்கைகளை எல்லாம் இனிப்பில் மருந்து கலந்து தருவதைப் போலத் தந்த கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால் அமைந்த கலைவாணர் அரங்கமாக இருக்கும். அந்த அரங்கத்திலே நானும், ஒரு சாதாரண மத்திய தர குடும்பத்திலே பிறந்த பேராசிரியர் அன்பழகனார் அவர்களும், அதைப்போலவே ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த தமிழ்க்குடிமகனார் அவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே என்னைப் போலப் பிறந்த பன்னீர்செல்வமும் ஒரே மேடையில் இன்றைக்கு அமர்ந்து, இந்த இயக்கத்தை வளர்ப்பதற்காக தன்னுடைய கடைசி மூச்சையும் தரத் தயார் என்று உறுதியெடுத்துக் கொண்டுள்ள தவமணி ராசனுக்கு விருது வழங்குகிறோம் என்றால் இந்தக் காட்சியைக் காண இயற்கை பெரியாரை அனுமதிக்க வில்லையே, அண்ணாவை அனுமதிக்க வில்லையே; பாரதிதாசனை அனுமதிக்க வில்லையே என்ற கவலை எனக்கு இல்லாமல் இல்லை.

ஆனால் பிறந்தவர்கள் அனைவரும் ஒருநாள் மறைவது இயல்பு என்றாலுங்கூட, நம்முடைய ஏக்கம் அவர்கள் இப்போது இல்லையே என்பதுதான். அவர்கள் இல்லா விட்டாலும் அவர்களுடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்தி அவர்களுடைய இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டு மென்கின்ற அந்த முனைப்போடு நம்முடைய பயணம் நடைபெற வேண்டும். அந்தப் பயணம் நடைபெறும் என்ற உறுதியை இங்கே நான் எடுத்துச் சொல்லி-அந்தக் கொள்கைகளை மாத்திரமல்ல; புரட்சிக் கவிஞரும், கவிச் சக்கரவர்த்தி பாரதியாரும், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் எந்தத் தமிழ் மொழி வாழ வேண்டும், வளர வேண்டும், வலிமை பெற வேண்டுமென்று விரும்பினார்களோ அந்த விருப்பத்தையும் நிறைவேற்றுகின்ற விழாவாக இந்த விழா அமையட்டும் என்று கூறி விருது பெற்றவர்களை மீண்டும் மீண்டும் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

*(24.12.97 அன்று, தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் விருது வழங்கும் விழாவில்)*

★ ★ ★

# எதிர்காலத் தமிழகத்தில் 'இளம்பிள்ளை வாதநோய்' என்ற தொல்லைமிகு - கொடிய நோய், இல்லவே இல்லை என்ற இலக்கினை எய்திடுவோம்.!

சுற்றுப்புறத்திலுள்ள போலியோ நோய்க் கிருமிகளை அறவே ஒழித்திடும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் பல்ஸ் போலியோ எனும் தீவிர **போலியோ சொட்டு மருந்துத்** திட்டமாகும். இத்திட்டத்தைப் பின்பற்றி போலியோ நோய் 155 நாடுகளில் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. நமது நாட்டில் இத்திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. போலியோ நோய்க்கிருமிகள் குறைவாகப் பரவும் டிசம்பர், ஜனவ்ரி ஆகிய மாதங்களில் 5 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தை களுக்கும் ஒரே சமயத்தில் இரண்டு தவணை போலியோ சொட்டு மருந்து ஒரு மாத இடைவெளியில் வழங்கப்படுகிறது.

- **ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை களுக்குச் சொட்டு மருந்து அளித்து அனைத்து மாநிலங் களுக்கும் வழிகாட்டும் தமிழகம் !**

இந்தியாவில், ஏனைய மாநிலங்களில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே சொட்டு மருந்து கொடுக்கப் படுகிறது. ஆனால் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் போலியோ நோய் தாக்கும் அபாயம் இருப்பதைக் கருத்திற் கொண்டு, **தமிழகத்தில்** மட்டும் தான் ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தை களுக்கும் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். இவ்வகையில், தமிழகம் தான் அனைத்திந்தி யாவிலும் முன்னோடியாகத் திகழ்கிறது என்பது பெருமைக்குரிய ஒன்றே.

எனவே, மத்திய அரசு **தமிழகத்தின் இம்முறையைப் பின்பற்றி** அடுத்த ஆண்டிலிருந்து அனைத்து மாநிலங்களிலும் ஐந்து வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தை களுக்கும் சொட்டு மருந்து கொடுக்கும் திட்டத்தை அமல்படுத்தவுள்ளது.

- **ஏன் பல்ஸ் போலியோ திட்டம் !**


பல்ஸ் போலியோ திட்டம் குழந்தை களுக்கு முதலாண்டில் கொடுக்கப்படும் தடுப்பு மருந்துக்கு மாற்றுத் திட்டம் எனக் கருதிடல் கூடாது. போலியோ நோயிலிருந்து, குழந்தையைக் காப்பாற்று வதற்கு உரிய வயதில் வீரியமுள்ள சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்.

உலகச் சுகாதார நிறுவனம், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 4 முறை சொட்டு மருந்து கொடுக்க வேண்டும் என நிர்ணயித்துள்ளது. ஆனால் இந்தியக் குழந்தை நல மருத்துவக் கழகத்தின் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் 5 முறை போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் திட்டம் தீவிர இயக்கமாக முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

ஒரே சமயத்தில் 5 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பொழுது அதிலுள்ள நோயைத் தடுக்கும் நன்மை பயக்கும் உயிருள்ள வைரஸ், குழந்தையின் குடலில் வளர்ந்து பெருக்கமடைந்து, வெளியிலுள்ள நோயை உண்டாக்கும் கேடு பயக்கும் வைரஸை, சிறு குடலில் நுழையவிடாமல் தடுக்கின்றது. எனவே தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளின் குடலிலும் நோய் தடுக்கும் வைரஸ் பல்கிப் பெருகி உயிரோடு இருப்பதால் போலியோ நோய் உண்டாக்கும் கொடிய வைரஸ் உள்ளே நுழைய முடியாமலும் அதே நேரத்தில் சுற்றுப்புறத்தில் உயிர்வாழ முடியா நிலையிலும் இறந்து விடுகின்றது. தொடர்ந்து பல்ஸ் போலியோ திட்டத்தை மூன்று நான்கு ஆண்டுகள் செயல் படுத்துவதின் மூலம் போலியோக் கிருமிகளை இம்மண்ணிலிருந்து அறவே அழித்துவிட இயலும்.

- **பல்ஸ் போலியோ திட்டத்தின் சாதனைகள்**

தமிழ்நாட்டில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 65 இலட்சம் குழந்தைகள் கடந்த 2 ஆண்டுகளாக இத்திட்டத்தின் மூலம்



பயன்பெற்றனர். இது 100 சதவிகிதச் சாதனையாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

1996-97-ஆம் ஆண்டின் பல்ஸ் போலியோ சாதனையைச் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் ஆய்வு செய்தபொழுது கிராமப்புறங்களில் 99 சதவிகிதமாகவும் நகர்ப்புறங்களில் 94 சதவிகிதமாகவும் இருந்தது.

இளம்பிள்ளைவாத நோயா? அது எங்களின் மாடிவீட்டை என்ன செய்திடும் என்ற வசதி படைத்தவர்களின் - படிப்பறிவு இருந்தும், வீண் கவுரவ அலட்சியத்தால், நகர்ப்புறங்களில் 100 சதவிகிதச் சாதனையை எய்திட இயலவில்லை.

பல்ஸ் போலியோ தினங்களில் இச்சொட்டு மருந்து கொடுக்கப்படாக் குழந்தைகளே இப்போலியோ நோயைப் பரப்புவதற்குக் காரணமாகி விடுகிறார்கள்; இக்காரணத்தினாலேயே, புதிதாகப் பிறந்த குழந்தைகளை, தடுப்பு மருந்து பெறுவதற்கு முன்னரே, இப்போலியோ நோய்த் தொற்றிட ஏதுவாகி விடுகிறது. எனவே, பல்ஸ் போலியோ தினங்களில் தங்கள் குழந்தைகளுக்குத் தவறாமல் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நோயை ஒழிப்பதில் அவர்களுக்கும் பங்குண்டு என்பதை அனைத்துத் தரப்பு மக்களுக்கும், குறிப்பாக நகர்ப்புற மக்களும் உணர்ந்து விழிப்புணர்வுடன் விளங்க வேண்டும். அதாவது, இளம்பிள்ளைவாத நோய் மூலம் ஊனமுற்றவர்கள் என்ற நிலைமையை நம் குழந்தைகள் பெற்றிட இடம் தரலாகாது எனும் சமூக விழிப்புணர்வு ஏற்பட்டேயாக வேண்டும்.

- **பல்ஸ் போலியோ திட்ட ஏற்பாடுகள்**

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரகம் ஆறு மாதத்திற்கு முன்பிருந்தே முன்னேற்பாடுகளைத் தீவிரமாகத் திட்டமிட்டு, திட்டச் செயலாக்கம் முழுமையுடன் நிறைவேற்றப்பட முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. வீடுவீடாகச் சென்று, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 65 இலட்சம் எனக் கண்டறிந்து கணக்கிடப்பட்டது. விடுபடும் குழந்தைகளை எளிதில் கண்டறிவதற்காக, மேற்காணும் முறையில் கணக்கெடுக்கப்பட்ட பட்டியல்கள் தடுப்பு மருந்து மையங்கள் வாரியாகப் பிரிக்கப்பட்டன.

போலியோச் சொட்டு மருந்து தீவிர முகாம் நடைபெறவுள்ள ஓரிரு தினங்களுக்கு முன்பாகவே களப்பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு குழந்தைக்கும் அடையாளச் சீட்டை வழங்கினர். அச்சமயத்தில் பல்ஸ் போலியோ திட்டத்தின் முக்கியத்துவம் குறித்துப் பெற்றோர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

## மேலவையின் அவசியம்

ஏ.எல்.முதலியார் அவர்கள் மேலவை உறுப்பினராக இருந்தபோதே ஒரு முறை அந்த மேலவையைக் கலைத்தால் என்ன என்ற ஒரு குரல் எழுந்தது உண்டு. அப்பொழுது ஏ.எல்.முதலியார் சொன்னார்கள் - "இப்படிப்பட்ட ஒரு கருத்து நிலவிக்கொண்டிருக்கின்றது. மேலவைதான் ஒரு அரசுக்குத் தேவையான கருத்துக்களைச் சூடாக அல்ல; சுவையாக அல்ல சிந்திக்கத்தக்க வகையிலே எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு அங்கம். இதைக் கலைத்துவிடக் கூடாது. வயதை மாத்திரம் வைத்து இதை எண்ணக் கூடாது. அறிவு முதிர்ச்சி உள்ளவர்களும் அந்த அவைக்கு வருகிறார்கள் என்பதையெண்ணி இந்த அவையின் அவசியத்தை உணர வேண்டும்" என்று ஏ.எல்.முதலியார் அவர்கள் அன்றைக்குச் சொன்னது எனக்கு இன்றைக்கும் நினைவிலே இருக்கின்றது.

- ஏ.எல்.முதலியார் சிலை திறப்பு விழாவில் **கலைஞர்**

இந்த பல்ஸ் போலியோத் திட்டத்திற்குத் தேவையான தடுப்பு மருந்துகளும் அதன் வீரியம் குறையாமல் பாதுகாக்கத் தேவையான குளிர்ப்பதனச் சாதனங்களும் வழங்கப் பட்டுள்ளன.

இத்தடுப்பு மருந்தின் வீரியம் குறைவதை எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் வெப்பத்தினால் நிறம்மாறக் கூடிய இரசாயனக் கலவை பூசப்பட்ட தாள், மருந்து பாட்டில்களின் மேல் ஒட்டப்பட்டுள்ளது. தடுப்பு மருந்து வீரியக் குறைவைக் கண்டறியும் இம்முறைக்கு "வேக்ஸின் வயால் மானிட்டர்" என்று பெயர்.

மேலும் இத்தடுப்பு மருந்தின் வீரியத்தைக் கண்காணிப்பதற்காகப் பல தடுப்பு மருந்து மையங்களிலிருந்தும் தடுப்பு மருந்து மாதிரிகள் ஆய்வுக்காக சென்னை "கிங்" நிலையத்திற்கு பொதுச் சுகாதாரத் துறையால் அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் மூலம் பல்ஸ் போலியோ திட்டப்பணிகளின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

1,500 லிருந்து 2,000 மக்கட் தொகைக்கு ஒரு தடுப்பு மருந்து முகாம் என்ற கணக்கில் இவ்வாண்டில் 5 வயதுக்குட்பட்ட 65 இலட்சம் குழந்தைகளுக்காக 40,000 தடுப்பு மருந்து மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 2 இலட்சம் பேர், பல்ஸ் போலியோ திட்டத்தில் பங்கேற்கின்றனர். பல்ஸ் போலியோ திட்டத்தில் சுழற்சங்கங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நகராட்சி ஆணையாளர்கள், நகர் நல அலுவலர்கள், பொதுச் சுகாதாரக் களப்பணியாளர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தை விளக்குவதற்காகப் பணியரங்குகள் மூலம் பயிற்சி விளக்கங்கள் தரப்பட்டன.


தடுப்பு மருந்தைச் சிறப்பு மையங்களுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக மாவட்ட ஆட்சியாளர்களின் மூலம் பிற துறைகளின் வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டன. தடுப்பு மருந்து மையங்கள் காலை 7 மணிமுதல் மாலை 6 மணி வரை இடைவிடாது செயல்பட அறிவுறுத்தப் பட்டுள்ளன. தடுப்பு மருந்து மையங்கள் சரிவரச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்ட ஆட்சியர்களால் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இத்திட்டத்தில் ஏற்படும் குறைபாடுகளை அவ்வப்போது கண்டறிந்து களைய ஏதுவாக, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.


பல்ஸ் போலியோத் திட்டச் சாதனைகளை உடனுக்குடன் அனுப்ப தேசிய தகவல் இணைப்பு மையம் (NICNET) மூலம் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியம்மை, பிளேக், நரம்புச்சிலந்தி காலரா ஆகிய உயிர்க்கொல்லி நோய்கள் இத்தகு சிறப்பு முகாம்களின் தொடர்பணிகளால் தமிழ்நாட்டில் அறவே ஒழிக்கப்பட்டன என்பது அனைவரும் அறிந்ததாகும். மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து முயற்சிகள் அதோடு அரசுத்துறைகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் தொடர் முயற்சிகளின் முனைப்புமிகு தொடர் வினையாக்கங்கள், இவற்றோடு பொதுமக்களின் ஒட்டுமொத்த விழிப்புணர்வு ஒருமித்த ஒத்துழைப்பு ஆகியவற்றின் விளைவாகத் தமிழ்நாட்டில் கி.பி. 2000க்குள், இளம்பிள்ளைவாதம் எனும் கொடிய நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிடும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

**- டாக்டர் சையத் பியாஸ் பிரான், கூடுதல் இயக்குநர் (தாய் சேய் நலம்) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம், சென்னை - 6.**








## தமிழ்நாடு முதலமைச்சரின்
## ★ ★ ★ காவல்பதக்கம் வழங்கும் விழா ★ ★ ★

சிறந்த சேவை புரிந்ததற்கான காவல்துறையினருக்கான **முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா** சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் 29-12-97 அன்று நடைபெற்றது. **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுப் பதக்கங்களை வழங்கினார்.

இவ்விழாவில் - காவல்துறையைச் சேர்ந்த 5 பேர்களுக்கு வீரப்பதக்கமும், 63 பேர்களுக்குச் சிறப்புப்பணி பதக்கமும் தீயணைப்புப் படையைச் சார்ந்த ஒருவருக்கு வீரப்பதக்கமும், 7 பேருக்குச் சிறப்புப் பதக்கமும், சிறைத்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு வீரப்பதக்கமும், 9 பேருக்குச் சிறப்புப் பதக்கமும், ஊர்க்காவல் படையைச் சேர்ந்த ஐந்து பேர்களுக்குச் சிறப்புப் பதக்கமும் வழங்கி முதலமைச்சர் **கலைஞர்** சிறப்புரையாற்றினார். காவல்துறையினரின் வீரசாகசங்கள் நிறைந்த கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நிறைவுற்றது.





# "ஆளும் கட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும் விடுதலைப் போராட்ட வீரர்களை என்றைக்கும் மறந்ததில்லை; மதிக்கத் தவறியதில்லை".

**சென்னை காமராஜர் சாலையில் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் சிலையை 15.12.97 அன்று திறந்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை**

சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில், இந்தியத் திருநாட்டினுடைய வீரப்புதல்வர்-நாட்டு விடுதலைக்காக நாளெல்லாம் போராடிய மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய சிலையினைத் திறந்துவைக்கின்ற இந்த வைபவத்தில் கலந்துகொண்டு, அந்தச் சிலையினைத் திறந்துவைக்கும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மிகுந்த பெருமையடைகிறேன். இந்தக் காமராஜர் சாலையில்-உலகத் தமிழ் மாநாட்டின்போது எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழிகாட்டுதலின் நிலையில், பல அறிஞர்கள், பல தலைவர்கள், புலவர்கள் சிலைகள் எல்லாம் வைக்கப்பட்டு, அந்தச் சிலைகளுக்கிடையே இந்த நாட்டின் விடுதலைக்காகப் போர் நடத்திய நேதாஜியின் சிலையும் அமைவது சாலப் பொருத்தம் என்ற வகையில் இந்தச் சிலை இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது.

## ஜோதிபாசு மூலம் படம்பெற்று, அமைக்கப்பட்ட சிலை

நம்முடைய அப்பணன் அம்பலம் அவர்களும், பார்வர்டு பிளாக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தானம் அவர்களும், வல்லரசு அவர்களும் குறிப்பிட்டதைப் போல், சட்டப் பேரவையில் ஒரு நாள் சுதந்திரத் தினப் பொன்விழாவைக் குறித்து விவாதம் நடைபெற்றபோது, நேதாஜியின் சிலையைச் சென்னையிலே அமைப்பதற்கு முதலமைச்சர் அனுமதி தரவேண்டுமென்று கேட்டார்கள். நானும் உடனடியாக அனுமதி வழங்கப்படுமென்று குறிப்பிட்டேன்.

அனுமதி கேட்டார்கள்-அனுமதி வழங்கப்பட்டது. அவர்களே சிலை வைப்பார்கள் என்ற எண்ணத்தோடு அந்த அனுமதி வழங்கப்பட்டது. பிறகு அவர்களை நான் சந்தித்தபோது அனுமதி வழங்கிய நீதான் சிலையையும் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது என்னுடைய கடமை என்று நானே உணர்ந்த காரணத்தால் அதை நான் ஒரு அறைகூவலாகவே எடுத்துக்கொண்டு அந்தச் சிலையை உடனடியாக இங்கே நிறுவிட அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, சிலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, பல படங்கள் அந்தச் சிலைக்காக வந்தன என்றாலும்-அந்தப் படங்கள் எதுவுமே எனக்கு மனநிலைவைத் தராத காரணத்தால்-நான் டெல்லிக்குச் சென்றபோது டெல்லியில் நடைபெற்ற ஐக்கிய முன்னணி வழிகாட்டுதல் கூட்டத்திற்கு வந்திருந்த மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களைப் பார்த்த நேரத்தில், கல்கத்தாவிலே இருக்கின்ற சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சிலைகளில் ஒன்றை-அவற்றின் உருவ அமைப்புப் படத்தை எனக்கு அனுப்பி உதவுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவரும் அந்தப் படத்தை எனக்கு அனுப்பி வைத்தார். அந்தப் படம் இங்கே உங்கள் முன்னால் சிறப்பிக்கப்பட்ட சிற்பி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நான் எண்ணியவாறு-விரும்பியவாறு அந்தச் சிலை இங்கே நின்று கொண்டிருக்கின்றது.

நேதாஜியின் சிலையைச் சில நேரங்களில் ராணுவ உடை இல்லாமல், தலையிலே தொப்பி இல்லாமலே கூட காணக் கூடிய வாய்ப்பு அல்லது அந்தப் படங்களைக் காணக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஒரு சிலை எப்படி அமைய வேண்டும் என்பதற்குக் கூட சில கலைநுணுக்கங்கள் உண்டு. உதாரணமாக விவேகானந்தருடைய நினைவு வந்தால் நம்முடைய நெஞ்சிலே ஆழமாகப் பதிந்திருப்பது அவர் கட்டியிருக்கின்ற தலைப்பாகை, அவர் அணிந்திருக்கின்ற அந்தக் கம்பீரமான - அவருடைய கம்பீரத்தை மேலும் உயர்த்துகின்ற அந்தக் கோட்டு இவைகள்தான் விவேகானந்தருடைய உருவத்தை நம் கண் முன்னால் நிறுத்தும்.

இதே கடற்கரையில் விவேகானந்தருடைய சிலை ஒன்று இருக்கின்றது. இதுதான் விவேகானந்தர் என்று சொன்னால்தான் யாருக்கும் தெரியும். ஏனென்றால் தலையிலே தலைப்பாகை



இல்லாமல், கோட்டு இல்லாமல் நிறுத்தப்பட்டிருக்கின்ற விவேகானந்தர் சிலை அது. விவேகானந்தர் ஆன்மீகத்திலே கொண்டிருந்த நம்பிக்கையைப் பற்றினை வெளிப்படுத்துகின்ற வகையிலே அமைந்த உருவம் அந்த உருவம். அதைப்போலவே நேதாஜியின் உருவங்கள் கூட ஒரு சட்டையோடு, தலையிலே தொப்பியற்ற நிலையில் செதுக்கப்பட்டும் இருக்கின்றன; வரையப்பட்டும் இருக்கின்றன. ஆனால் அந்த உருவம் கம்பீரமான உருவமாக இருக்க வேண்டுமென்று நான் எண்ணிய காரணத்தால்-ஜோதிபாசு அவர்களிடத்திலே கேட்டு அவர் அனுப்பிய புகைப்படத்தை வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட-செதுக்கப்பட்ட சிலை இந்தச் சிலை.

**கடற்கரையிலே இந்தச் சிலை அமைந்திருப்பது பொருத்தமானது**

கடற்கரையிலே இந்தச் சிலை அமைந்திருப்பது மிகமிகப் பொருத்தமான ஒன்று. ஏனென்றால் கடற்கரையிலே உலவ வருகிறவர்கள்தான் சற்று நிதானித்துச் சிந்திக்க முடியும். ஏராளமான மக்கள் பார்க்கக் கூடிய போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் சிலை இருக்க வேண்டாமா என்று சிலர் எண்ணக்கூடும். அப்படிப்பட்ட இடங்களில் சிலை இருக்குமேயானால் தாங்கள் ஏற்றுக் கொண்ட பயணத்தை மேற்கொண்டு எப்படி நடத்துவது என்பதிலேதான் அந்த மக்களுடைய கவனம் இருக்குமேயல்லாமல், சிலையை உற்றுநோக்கவோ அதைப்பற்றிச் சிந்திக்கவோ அவர்களுக்கு நேரமோ நினைப்போ நிச்சயமாக இருக்காது.

எனவேதான், கடற்கரையிலே இந்தச் சிலை அமைக்கப்பட்டால் காலையிலே உலவ வருகின்றவர்கள், மாலையிலே காற்று வாங்க வருபவர்கள் இந்தச் சிலையைக் காணவும் இந்தச் சிலையைப் பற்றிப் பேசவும், சிலைக்கு உரியவர் யார் என்பதைப் பற்றிச் சிந்திக்கவும், அவர் இந்த நாட்டிற்காக சமுதாயத்திற்காக ஆற்றிய பணிகள் என்ன என்பதை அசைபோடவுமான ஒரு சூழல் ஏற்படும் என்பதற்காகத்தான் கடற்கரையிலே இந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது.

அமைக்கப்பட்டிருப்பது கடற்கரை என்றாலும் இது காமராஜர் சாலை. நாட்டிற்காகப் பலமுறை பல்வேறு தியாகங்களைப் பல்லாண்டு காலச் சிறைவாசத்தை ஏற்றுக்கொண்ட தியாகச் சுடர் காமராஜருடைய பெயரால் அமைந்துள்ள சாலை இந்தச் சாலை. அது மாத்திரமல்ல; நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் பகைத்துக் கொண்டாலும், மோதிக் கொண்டாலும் கூட, இவர்தான் என்னுடைய தலைவர், இவர்தான் நாட்டின் தந்தை என்று யாரை ஏற்றுக் கொண்டாரோ அந்தத் தேசப்பிதா காந்தியடிகளின் சிலை இருக்கின்ற சாலையும் இந்தச் சாலைதான். எனவே நேதாஜியின் சிலை இங்கே அமைவது மிகப்பொருத்தம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தேசத் தியாகிகளை நாங்கள் என்றைக்கும் மறந்ததில்லை**

இந்தச் சாலையின் ஓரத்திலேதான் இங்கே நம்முடைய முல்லைவேந்தன் குறிப்பிட்டதைப் போல அறிஞர் அண்ணா நினைவிடம் இருக்கின்றது. என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடம் இருக்கின்றது. அண்ணா அவர்களானாலும், எம்.ஜி.ஆர்.அவர்களானாலும், இன்றைக்கு இந்த ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற, நானானாலும் எங்களுடைய தலைவர்களை-எங்களுடைய இயக்கத்திலே இருந்த-இருக்கின்றவர்களை எந்த அளவிற்கு மதிக்கிறோமோ அந்த அளவிற்கு நாட்டிற்காகத் தியாகம் செய்தவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் அவர்களை மதிக்கக் கூடியவர்கள்.

நான் பெரியவர் செங்கல்வராயன் அவர்களை வைத்துக் கொண்டு ஒன்றைச் சொல்லித்தான் தீரவேண்டும். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள்-தி.மு.கழகத்தைச் சேர்ந்த நாங்களானாலும் அல்லது அந்தக் கழகத்திலிருந்து பிரிந்து தனிக்கட்சி கண்டு தமிழகத்தை ஏறத்தாழ ஒன்பது, பத்தாண்டு காலம் ஆண்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களானாலும் தேசத் தியாகிகளை, நாட்டிற்காகப் போராடியவர்களை, விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்களை என்றைக்கும் மறந்தது கிடையாது. ஆனால் இது இந்த மாநிலத்தை-இந்த நாட்டைப் பொறுத்த வரையில் ஒருவழிப்பாதையாகத் தான் இருக்கின்றது. இந்த ஒரு பரந்த எண்ணம் எல்லாக் கட்சிகளுக்கும் வரவேண்டும்.

பெரியாருடைய நினைவுநாளில், பிறந்தநாளில்-அவரும் இந்த நாட்டிற்காக, சமுதாயத்திற்காகப் பாடுபட்டார். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட-ஏன் மொத்த தமிழர்களின் விழிகளைத் திறக்க அவர் அரும்பணியாற்றினார் என்று சொல்கிறவர்கள்கூட, அவருடைய பிறந்தநாளிலோ நினைவு நாளிலோ அவரைப் போற்ற முன்வருவதில்லை. அதைப் போலவே அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளிலோ, நினைவு நாளிலோ மற்றக் கட்சிக்காரர்கள் அவர்களைப் பாராட்ட அண்ணாவைப் புகழ - போற்ற-அவருடைய சிலைக்கு ஒரு மாலை அணிவிக்க அவர்கள் வருவதில்லை.

ஆனால் நீங்கள் பார்த்தால், நாங்கள் ஆளுங்கட்சியிலே இருந்தாலும் அல்லது ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடிய வாய்ப்பற்றவர்களாக எதிர்க்கட்சியிலே இருந்தாலும் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வீர மறவர்களை என்றைக்கும் மறந்ததில்லை என்பதை நான் மார்தட்டிச் சொல்லிக்கொள்ள உரிமை உடையவன் என்ற முறையில்தான் இந்த மனப்பான்மை எல்லா கட்சியிலே உள்ளவர்களுக்கு வரவேண்டுமென்பதை



நான் எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நேதாஜி அவர்கள் இன்றைக்குச் சிலை வடிவத்திலே நிற்கின்றார். அய்யணன் அம்பலம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருடைய வரலாறு எழுதப்பட்டு, அது பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக வைக்கக் கூடிய சூழலில் என்ன காரணத்தாலோ தடுக்கப்பட்டு விட்டது என்று முன்பு நடந்ததைச் சொன்னார்கள். இப்படி நம்முடைய தலைவர்களுடைய வரலாறுகள் இளைய சமுதாயத்திற்கு நினைவுபடுத்தப்படாமல் ஆகிவிட்ட காரணத்தால்தான் இப்போதுகூட இந்தக் கூட்டத்திலே இருக்கின்ற பெரியவர்களை - வாலிபர்களை அழைத்து நேதாஜி எந்த வயதிலே மரணமடைந்தார் என்று கேட்டால் தெரியாது. அவருடைய உருவம்-அவருடைய வாழ்க்கை வரலாறு இதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் ஐம்பது அல்லது அறுபது வயதிற்கு மேற்பட்டவராகத்தான் நேதாஜி இருக்கவேண்டும் என்று யூகித்துச் சொல்வார்கள். ஆனால் அவர் மரணமடைந்தது 48-வது வயதில் என்பதை மறந்துவிடக்கூடாது.

### இளைய சமுதாயத்தைக் கூர் தீட்டக்கூடிய நிலையில் இருப்பவர் நேதாஜி

இந்த 48 வயதிற்குள்ளாக இந்த நாடு போற்றுகின்ற மாவீரனாக நேதாஜி அவர்கள் திகழ்ந்திருக்கிறார் என்பதை எண்ணும் நேரத்தில் இளைய சமுதாயம் எதிர்காலத்திற்காக ஆற்ற வேண்டிய பணிகளுக்குத் தங்களுக்குக் கூர்தீட்டக் கூடியநிலையிலே இருப்பவர் நேதாஜி என்பதை எண்ணிப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

எத்தனையோ தலைவர்கள் இளைஞர் களுக்கு எதிர்காலச் சமுதாயத்தினருக்கு வழிகாட்டக் கூடியவர்களாக விளங்கி யிருக்கிறார்கள். இன்றைக்கும் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

பசும்பொன் தேவர் திருமகன் முத்துராமலிங்கம் அவர்கள் நேதாஜி மரணமடையவில்லை உயிரோடு இருக்கிறார் என்றே-அவர் உயிரோடு இருந்த வரையிலே சொல்லிக் கொண்டுதான் இருந்தார். நேதாஜி மறையவில்லை என்பது உண்மையாக இருந்தால்கூட, இப்பொழுது இந்தக் காலத்தில் அவர் உயிரோடு இருக்க முடியாது.

ஏன் என்றால் அவர் விடுதலைப் போராட்டத்தினுடைய உச்சக்கட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இந்தியா விடுபட வேண்டுமென்பதற்காக இத்தாலி, ஜெர்மன் போன்ற நாடுகளோடு உறவு கொண்டு, அந்த உறவின் அடிப்படை யிலே பிரிட்டிஷாரைத் துரத்துவதற்காகப் பெரிய படை அணிவகுப்பை உருவாக்கி - 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட ஓர் அணிவகுப்பை உருவாக்கி வெளிநாட்டிலிருந்தே இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து பிரிப்பேன்-விடுவிப்பேன் என்று சூளுரைத்து, அதற்காக இறுதிவரையிலே போராடி தன் உயிரைத் தத்தம் செய்தவர். இன்றைக்கு அவர் உயிரோடு இல்லை.

இன்னும் சொல்லப்போனால் பசும்பொன் தேவர் திருமகன் முத்து ராமலிங்கனார் அவர்கள், நேதாஜி உயிரோடு இருக்கிறார் என்று சொன்ன அந்தக் காலக்கட்டத்திலேயே இந்திய அரசு அதற்கான ஆய்வினை நடத்தி, அவர் விமான விபத்தில் இறந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்தி உலகத்திற்கு அறிவித்தது. தேவர் திருமகன் சொன்னதிலே ஒரு உண்மை இருக்கிறது. நேதாஜி போன்றவர்களுக்குச் சாவே கிடையாது. அதனால்தான் அவர் உயிரோடு இருக்கிறார் என்று தேவர் திருமகன் சொன்னார் என்றே கருதுகிறேன்.

அண்ணா மறைந்துவிட்டார், பெரியார் மறைந்து விட்டார், உத்தமர் காந்தியடிகள் மறைந்துவிட்டார் என்று யாரும் சொல்ல முடியாது. ஏன் என்றால் அவர்களெல்லாம் நம்முடைய நெஞ்சத்திலே நிறைந்து விட்டவர்கள். அதைப் போல நேதாஜி அவர்கள் இன்னமும் உயிரோடு இருக்கிறார் - எப்போதும் உயிரோடு இருப்பார் இந்த உலகத்திலே இந்திய நாட்டின் விடுதலை சரித்திரம் இருக்கிற வரையில் நேதாஜி உயிரோடு நிச்சயமாக இருப்பார் என்ற அந்த அடிப் படையில்தான் அவர் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தியை பசும்பொன் தேவர் திருமகன் அவர்கள் சொன்னார் என்று நான் கருதுகின்றேன்.

### சமத்துவ சமுதாயம் காண விரும்பியவர் நேதாஜி

இங்கே நம்முடைய பெரியவர் செங்கல்வராயன் அவர்களும், அய்யணன் அம்பலம் அவர்களும், முல்லைவேந்தன் அவர்களும், நேதாஜி அவர்களுடைய சில கருத்துக்களை எடுத்துவைத்து, சாதி சமயமற்ற, மத பேதமற்ற ஒரு சமுதாயம் உருவாகவேண்டும். சமத்துவ சமுதாயம் உருவாகவேண்டும் என்பதற்காக எவ்வளவு அக்கறை கொண்டவராக அவர் இருந்தார் என்பதை எடுத்துக் காட்டினார்கள். சமத்துவ சமுதாயம் காண விரும்பிய நேதாஜி அதைப்பற்றிக் கூறியுள்ள சில கருத்துக்களை உங்களிடத்திலே எடுத்துவைக்க நான் விரும்புகின்றேன்.

''சுதந்திரத்தை நம் வாழ்வின் மூலமந்திரமாகக் கொண்டோமானால், நம் செயல், ஆற்றல் எதிலும் அதையே தூண்டும் சக்தியாகக் கருதுவோமானால் சமுகத்தின் சீர்திருத்தத் திட்டங்களைக் கூடச் சுதந்திரத்தின் அடித்தளத்தின் மீது

## உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, மாதந்தோறும் நிரந்தரப் பயணப்படி வழங்கப்படும்

- முதலமைச்சர் கலைஞர் ஆணை.

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஊராட்சித்தலைவர்களுக்கு ரூ.1000, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு ரூ.300, ஊராட்சி ஒன்றியத்தலைவர்களுக்கு ரூ.500. ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களுக்கு ரூ.200, ஊராட்சித்தலைவர்களுக்கு ரூ.300 வீதம் மாதந்தோறும் நிரந்தரப் பயணப்படி வழங்கப்படும். மேலும் இந்த மாதாந்திர நிரந்தரப் பயணப்படிகள் தவிர்த்து, மேலே காணும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அலுவல் நிமித்தம் வெளியிடங்களுக்குப் பயணம் செய்யும் பொழுது ஏற்கெனவேயுள்ளவாறு தினப்பயணப்படியும் வழங்கப்படும்; அதேபோன்று அமர்வுப்படியும் ஏற்கெனவேயுள்ளவாறு தொடர்ந்து வழங்கப்படும்.



நிறுவுவதே அவசியம். அந்த நோக்கிலிருந்து பார்த்தால் சுதந்திரத்தின் நீதிமுறை வேறொன்றுமில்லை; சமூகப் புரட்சியே.

எல்லாச் சமுதாயத்திற்கும் சுயேச்சை என்றால், பெண் ஆண் என்ற வேற்றுமை பாராட்டாமல் இருசாராருக்குமே சுதந்திரம் என்றுதான் அர்த்தம். இந்தச் சுதந்திரப் பங்கீட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடும் இருக்கக்கூடாது. ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும் இருக்கக்கூடாது. பணக்காரன்-ஏழை, இளைஞன் - முதியவன் எல்லா வகையினரும், பெரும் பான்மையினர் - சிறுபான்மையோர் வகுப்பு அனைத்தும், ஒவ்வொருவரும் விடுதலை அடைய வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரமே - சமத்துவமே - சகோதரத் துவமென்று தெற்றெனப் புரியும்.

சமூகத்தைத் தளைகளிலிருந்து மீட்க வேண்டுமானால் ஒவ்வொரு சமூக நிர்வாகத்திலும், சட்ட நிர்மாணத்திலும் ஆண்களுக்குச் சரிசமமாகப் பெண் பாலருக்கும் உரிமை வழங்கவேண்டும். ஒரு சமுதாயம் தன் கட்டுதிட்டங் களினால், பிறப்பிலோ வகுப்பிலோ இழிவானவரென்று ஒருவரையோ அல்லது ஒரு சாராரையோ சிறுமைப்படுத்துவதாக இருந்தால், சற்றும் கூசாமல் நெஞ்சு இளக்கமின்றி அந்த இடையூறுகளை நிர்மூலமாக்க வேண்டும். ஒவ்வொரு வருக்கும் கல்வியிலும் மனிதத் தன்மையிலும் மேலோங்குவதற்கு வாய்ப்பு அளித்தாக வேண்டும். இளைஞனை உடலிலோ, அறிவிலோ சிறியவனென்று அசட்டை செய்யக்கூடாது. சமூகத்தைச் சீர்படுத்தவும் நாடாளவும் இளைஞருக்கும் பங்கு தரவேண்டும். சமூகம், அரசியல், பொருளாதாரம், இந்த ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவருக்கும் சமமான அதிகாரமே தேவை. ஏற்றத் தாழ்வு இருந்தால் அவலமாகும். நாம் நிறுவும் புதிய சமுதாயத்தில் அனைவரும் சம உரிமை, சமமான சந்தர்ப்பம், உடைமையில் சம அதிகாரம், சம அந்தஸ்து, வேற்றுமையைத் தூண்டும் முறைகளை ஒழித்தல், நிறபேதமோ வகுப்புப் பேதமோ எதையும் விலக்குதல். வெளியாரின் ஆளுகையிலிருந்து விடுதலை பெறுவது யாவும் அதன் தலைமையான கொள்கையாக அமைய வேண்டும்.

நண்பர்களே! நீங்கள் ஒருவேளை இதெல்லாம் நான் குடிக்கும் மனப்பால் என்று எண்ணிக்கொள்ளலாம். உங்களில் சிலர் நினைக்கலாம். "இவன் கனவு உலகில் திரிகிறான். தற்போதைய உலகிற்கு ஒவ்வாத பிதற்றல் இவன் கூறுவது என்றெல்லாம், நீங்கள் கருதுவீராயின், நான் ஓர் உதவாக் கரையே. பிழைகளை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நான் கனவு காண்பவன்தான். ஆனால் இந்த கனவு எனக்குப் பிடித்திருக்கிறது. என் வரைக்கும் இந்தக் கனவு முழுதும் கடும் முயற்சியால் கைகூடும் என்றே தோன்றுகிறது. ஆகாயக்கோட்டை என்று சிலர் கருதும் இதுவே எனக்கு உணர்வூட்டி என் முயற்சிக்கு அரணாக நிற்கிறது. வாழ்வில் தெம்பை மூட்டுகிறது" என்று இந்திய சுதந்திரத் திற்காக அவர் போர்க்கொடி தூக்கிய நேரத்தில்-இறுதிப் போர்க்களத்தில் நின்ற நேரத்தில் கூட, நாம் காண்பது கனவாக இருக்கலாம் ஆனால் இது நிறைவேறக் கூடிய கனவு என்று நம்பிக்கையோடு தெரிவித்தார்.

### சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களை மறந்துவிட்டார்கள்

அப்படி தெரிவித்த இரண்டாண்டு காலத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களை மறந்துவிட்டார்கள் என்கின்ற ஆதங்கத்தை நம்முடைய பெரியவர் அய்யணன் அம்பலம் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். எந்த அளவிற்கு மறந்துவிட்டார்கள் என்றால், அவர்கள் வெளியிட்ட மலர் ஒன்றிலே கூட-காங்கிரஸ் கட்சி வெளியிட்ட மலர் ஒன்றிலேகூட காமராசர் படம் என்று எண்ணிக்கொண்டு பட்டாபி சீத்தாராமையா படத்தைப் போட்டு, கீழே காமராசர் என்று எழுதுகின்ற அளவிற்கு இந்திய நாட்டிலே நாட்டு விடுதலைக் காகப் பாடுப்பட்ட தலைவர்களை மறந்துவிட்டிருக்கின்றார்கள்.

அந்த அளவிற்குத் தலைவர்களை அடையாளம் கூட கண்டுகொள்ள முடியாத நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அன்றைக்கு விடுதலைத்தீ கொழுந்து விட்டு எரிந்தது. எனவே நம்முடைய விழிகள் அகலமாக விரிந்தன. இன்றைக்குப் பதவி என்னும் படுதா அந்த விழிகளை மறைக்கின்ற காலக்கட்டத்திலே வாழ்ந்து கொண் டிருக்கின்றோம். இருந்தாலும் அந்தப் பதவியிலே இருந்தாலும் கூட எங்களைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிற்குச் சுதந்திரத்தை வாங்கித் தந்தவர்கள் அதற்காகத் தாங்கொணாத வேதனை களை அனுபவித்தார்கள். சிறைக் கோட்டங்களிலே சிக்கிச் சீரழிந்தவர்கள், காராக்கிரகங்களையெல்லாம் கனக மணிக் கட்டில்களாகக் கருதிக்கொண்டு அங்கே தவம் செய்தவர்கள் அவர்களை யெல்லாம் போற்றுவதும் - பாராட்டுவதும் - புகழ்வதும் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவதும் எங்களுடைய கடமை என்றுகொண்டு இருக்கின்றோம். அதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நாமக்கல் கவிஞர். அந்த நாமக்கல் கவிஞரை இன்றைக்கு தமிழ்நாட்டில் எத்தனைப்பேருக்கு நினைவிருக்கும் - யாருக்காக அவர் பாடினாரோ-எந்த இயக்கத்தில் இருந்து பாடினாரோ அவர்களில் எத்தனைப் பேருக்கு நினைவிருக்கும்-ஆனால் எங்களுக்கு நினைவிருந்த காரணத்தால்தான் கோட்டைக்குப் பக்கத்தில் கட்டிய பத்து



மாடிக் கட்டடம் அவருடைய பெயராலேயே 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்ற பெயராலேயே இன்றைக்கு இயங்குகிறது என்றால் நாமக்கல் கவிஞர் இடத்திலே நாங்கள் கொண்டிருக்கின்ற-அவர்கொண்ட தேசப் பற்றின் மீது நாங்கள் கொண்டிருக்கின்ற அன்பும் ஆர்வமும்தான் அதற்குக் காரணமாகும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கும் நினைவு மண்டபங்களை அமைத்தது இந்த அரசுதான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு நகரத்தையும் நினைவு மண்டபத்தையும் 1969ஆம் ஆண்டு இந்த அரசுதான் அமைத்தது. பெருந்தலைவர் காமராஜர் மறைந்த பிறகு அவரது தொண்டரடிப் பொடியாழ்வாராக, அவர் இல்லத்தில் பணியாற்றி வந்த வைரவன் அவர்களுக்கு அரசின் சார்பில் காமராஜர் நினைவு இல்ல ஊழியராகப் பணியிலே அமர்த்தி அவர் வாழ வீடு ஒன்றையும் சென்னையிலே வழங்கியதும் இந்த அரசுதான்.

பெரியவர் பக்தவச்சலம் அவர்களுக்குப் பணிவிடை புரிந்த பாலு என்பவருக்கு அவருடைய வாழ்க்கைத் தரம் உயர வசதிகளை அளித்து, வீடு ஒன்றை வழங்கியதும் இந்த அரசுதான். வாரன் சாலையைப் பக்தவச்சலம் சாலை என்று பெயர் மாற்றியதோடு பெரியவர் பக்தவச்சலம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைத்திட முயற்சிகளை மேற்கொண்டிருப்பதும் இந்த அரசுதான்.

ருக்மணி லட்சுமிபதி அம்மையார் பெயரில் மார்ஷல் சாலையை மாற்றி அமைத்ததும், அதைத் திறந்து வைத்து அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்ததும் இந்த அரசுதான். ருக்மணி லட்சுமிபதி சிலை வைப்பதற்காக கடந்த ஐந்து அல்லது ஆறாண்டு காலமாக எவ்வளவு முயற்சிகள் எல்லாம் செய்யப்பட்டு, அந்தச் சிலைக்கு உரிய பீடம் கட்டப்பட்டு, சிலை செய்யப்பட்டு ஐந்தாண்டு காலம் கடந்த காலத்தில் அனுமதியே அளிக்கப்படாமல் அடியேன் மீண்டும் முதலமைச்சராக வந்த பிறகுதான் ருக்மணி லட்சுமிபதியின் சிலை அமைக்கப்பட்டது என்பதையும், அம்மையாருடைய பெயரால் ஒரு தபால்தலை வெளியிடப்பட்டது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

எட்டையபுரத்தில் பாரதி வாழ்ந்த வீட்டை அரசு நினைவகமாக 76-ஆம் ஆண்டுக்கு முன்பே ஆக்கியதும் கழக அரசுதான். இன்று திருவல்லிக் கேணியிலே பாரதியாருடைய இல்லம் பாங்குடன் திகழ ஏற்பாடு செய்ததும் இந்த அரசுதான்.

**சிதம்பரனார் இழுத்த செக்கைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தது இந்த அரசுதான்**

69-ஆம் ஆண்டு சிதம்பரனார் சிறையிலே இழுத்த செக்கை கண்டுபிடித்து இராஜாஜி மண்டபத் தருகில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்ததும் இந்த அரசுதான்.



1989-ஆம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு அன்னை சிவகாமி வளாகம் எனப் பெயர் சூட்டியதும் இந்த அரசுதான்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குக் குமாரசாமி ராஜா பெயரைச் சூட்டியதும் இந்த அரசுதான். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு89-ஆம் ஆண்டு தியாகி சுப்பிரமணிய சிவாவின் பெயரைச் சூட்டியதும் இந்த அரசுதான்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்திற்குப் பூலித்தேவன் மாளிகை என்றும்-அலுவலக வளாகத் திற்குச் சுந்தரலிங்கனார் வளாகம் என்றும் பெயர் சூட்டியதும் இந்த அரசுதான்.

விடுதலைப் போராட்டத் தியாகி வீரன் வாஞ்சிநாதன் மனைவிக்கு, எந்தக் காலத்திலும் வழங்கப்படாத ஒய்வூ தியத்தை வழங்கியதும் அண்ணா அவர்களுடைய ஆட்சியிலேதான். வாஞ்சிநாதனுடைய நண்பரும் பேரவை உறுப்பினராக இருந்தவருமான கோமதி சங்கர தீட்சிதர்-சீட்டுக்குலுக்கிப் போட்டார்கள், யார் ஆஷ் துரையைக் கொல்வது என்பதற்காக! சீட்டு போட்டு எடுக்கும்போது வாஞ்சிநாதனா? அல்லது கோமதி சங்கரனா? என்று பார்த்த போது எடுக்கப்பட்ட சீட்டில் வாஞ்சிநாதனின் பெயர் இருந்த காரணத்தால் அவர்அந்தப் பணிக்காக அனுப்பப்பட்டார். கோமதி தீட்சிதரின் பெயர் இருந்திருந்தால் அவர் அந்தப் பணியைச் செய்திருப்பார். அப்படிப்பட்ட கோமதி சங்கர தீட்சிதர் பேரவை உறுப்பினராக இருந்த காலத்தில் இந்தக் கழக அரசு-நான் அப்போது முதலமைச்சராக இருந்தபோது ராஜாஜி மண்டபத்திலே அவருக்குப் பிறந்தநாள் கொண்டாடி பாராட்டி மகிழ்ந்ததும் இந்த அரசுதான்.

இங்கே அமர்ந்திருக்கின்ற தியாகச் செம்மல் பெரியவர் செங்கல்வராயனின் பவள விழாவைக் கூட அப்போது அரசு இல்லாவிட்டாலும் தி.மு.கழகத்தின் சார்பில் கொண்டாடியவன் நான்தான் - ராஜேஸ்வரி மண்டபத்தில் என்பதை பெருமையோடு அல்ல-அவருக்கு விழாவினைக் கொண்டாடுகின்ற பேறு பெற்றேன் என்பதற்காக அதைக் குறிப்பிடுகிறேன்.

1972-ஆம் ஆண்டு வ.உ.சி. அவர்களுக்குத் தூத்துக்குடியிலே சிலை வைத்ததும் கழக அரசுதான். பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டியதும்-கோட்டை கட்டியதோடு மட்டுமல்ல-அவனுடைய வாரிசுகளுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தந்ததும் கழக அரசுதான்.

மதுரையிலே பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவருடைய சிலை எடுத்ததோடு, அவர்கள் பெயரில் உசிலம்பட்டி, மேல்நீலிதநல்லூர், கமுதி ஆகிய நகரங்களில் கல்லூரிகளை அமைக்க முயற்சி மேற்கொண்டதும் கழக ஆட்சிக் காலத்திலேதான்.

சிவகங்கை மாவட்டத்தில், திருப்பத் தூரில் மருது பாண்டியருக்கு நினைவகம் எழுப்பியதோடு, அவருடைய வாரிசு தாரர்களுக்கும், கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கும் ஒய்வூதியம் வழங்கிவருவதும் கழக அரசுதான்.

தியாகிகளின் விதவைகளுக்கும், அவர்களுடைய சட்டப்படியான

வாரிசுகளுக்கும் அரசுப் பேருந்துகளில் கடந்த ஆண்டு முதல் இலவசப் பயணம் செய்யலாம் என்ற அனுமதி அளித்திருப்பதும் இந்த அரசுதான்.

தியாகிகள் மறையும்போது அவர்களது ஈமச்சடங்குளை நிறைவேற்ற அவர்களுடைய குடும்பத்திற்கு உடனடியாக ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருப்பதும் இந்த அரசுதான்.

மரணம் அடையும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்குத் தாசில்தார் தகுதிக்குக் குறைபாத அரசு அதிகாரி ஒருவர் உடனடியாகச் சென்று அரசின் சார்பில் இறுதி வணக்கம் செலுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததும் இந்த அரசுதான்.

பரலி நெல்லையப்பன் அவர்களுக்கு மாதந்தோறும் ஒய்வூதியமாக நூறு ரூபாய் 70-ஆம் ஆண்டு முதல் வழங்கியதும் இந்த அரசுதான்.

1971-ஆம் ஆண்டில் அவர் மறைந்ததைத் தொடர்ந்து அவரது மகள் பூங்கோதை விடுத்த வேண்டுகோளையேற்று ஒரு சிறப்பு நேர்வாக அவருடைய குடும்பத்திற்கு 16.10.80 முதல் 500 ரூபாய் வழங்கிட ஆணையிட்டதும் கழக அரசுதான்.

அதுபோலவே வ.உ.சிதம்பரனாரின் பேத்தி திருமதி சேதுலட்சுமி விடுத்த வேண்டுகோளையேற்று 9.3.89 முதல் ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டதும் கழக அரசுதான். உப்புச் சத்தியாக்கிரகத் தியாகி-எழுத்தாளர் வ.ரா.அவர்களுடைய துணைவியாருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்க 1990இல் ஆணையிட்டதும் இந்த அரசுதான்.

பெருந்தலைவர் காமராசரின் தமக்கையார் திருமதி நாகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பணஉதவி செய்ததும் இந்த அரசுதான்.

கட்டபொம்மனின் தளபதியாக விளங்கிய வீரன் சுந்தரலிங்கத்தின் பெயரால் கவர்ணகிரியில் அறுபது இலட்சம் ரூபாய் செலவிலே அவனுடைய வாரிசுகளுக்கு ஒரு நவீனகிராமத்தைத் தற்போது அமைத்து வருவதும் இந்த அரசுதான். நெற்கட்டும்சேவல் என்ற இடத்தில் சிதைந்த நிலையில் இன்று காட்சி தரும் பூலித்தேவன் மாளிகையை நினைவுச் சின்னமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளதும் இந்த அரசுதான்.

தியாகச் செம்மல் கக்கனுக்கு 31.8.97 அன்று மதுரையில் சிலை அமைத்ததோடு, கக்கன் அவர்கள் 1973ஆம் ஆண்டு முதல் சென்னையில் வசித்து வந்த இல்லத்தில் அவருடைய பிள்ளைகள் வாடகை எதுவும் இல்லாமலே அவர்கள் ஆயுட்காலம் வரையிலே வாழலாம் என்று இப்போது ஆணையிட்டிருப்பதும் இந்த அரசுதான்.

### தியாகிகளின் வாரிசுகளுக்கும் கடமை உணர்வோடு உதவுகிறோம்!

விடுதலை வீரன் விஸ்வநாததாசின் வாரிசுகளான காசிநாதன், பிச்சம்மாள், தங்கத்தாய், முத்தையாதாஸ் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியதும் இந்த அரசுதான். மதுரையிலே விஸ்வநாத தாஸ் வாழ்ந்த திருமங்கலம் வீடு அண்மையிலே அரசாங்கத்தின் சார்பிலே நினைவுச் சின்னமாக ஆக்கப்பட்டுள்ளது.

அதுபோல பல தியாகிகளை மறவாமல் எண்ணற்ற நற்காரியங்களை, நினைவுச் சின்னங்களை அவர்களுக்கும், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் கடமை உணர்வோடு செய்து வருகின்ற இந்த அரசு, நேதாஜியின் சிலையை இங்கே திறந்து வைத்ததிலே எந்த ஆச்சரியமும் யாரும் படத்தேவையில்லை. எங்களுடைய கடமையைச் செய்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையிலே சுதந்திரப் போராட்டக் காலத்திலே நேரடியாக ஈடுபடுகிற வாய்ப்பற்றுப் போனவன் நான். எனவே நாங்கள் இன்றைக்கு அந்த வாய்ப்பை-இப்படிப் பயன்படுத்திக் கொண்டு அவர்களையெல்லாம் பாராட்டுகின்ற அந்தப் பாக்கியத்தைப் பெற்றோம் என்கின்ற பெருமையோடு உங்கள் முன்னால் இந்தச் சிலையினை - இந்த மாவீரனுடைய சிலையினைத் திறந்து வைத்திருக்கின்றேன். அவருடைய மன உறுதியும், நெஞ்சத்திண்மையும் அவருடைய போர்க்குணமும் இந்த நாட்டிலே உள்ள இளைய சமுதாயத்திற்கு ஏற்படவேண்டும். அந்தப் போர்க் குணம் சமுதாயத்திலே உள்ள மாசு மருக்களை அகற்றுவற்குப் போராடுகின்ற குணமாக இருந்திடவேண்டும்.

இங்கே அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக எனக்கு வாள் ஒன்று தரப்பட்டது. அந்த வாளை உறையிலிட்டபடியே கொடுங்கள் என்றேன். ஆனால் வல்லரசு அதனை உறையிலிருந்து உருவி என்னிடம் கொடுத்தார். வாள் உறையிலேயே இருக்கட்டும். மதவாத, சாதிபேத தகராறுகளில் இந்த வாள் நீளவேண்டாம் என்பதற்காக அதைச் சொன்னேன். அந்த உறுதிமொழியை இந்த நன்னாளிலே எடுத்துக்கொண்டு சமுதாயச் சீர்திருத்தத்திற்காக நேதாஜி அவர்கள் எடுத்துச் சொன்ன இந்தக் கருத்துக்களையெல்லாம் நெஞ்சின் ஆழத்திலே புதைத்துக் கொள்ள வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புப் பெற்றமைக்காக மேலும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து அனைவருக்கும் நன்றி கூறி-குறிப்பாக இந்த வயதிலும் எங்களுடைய அழைப்பினையேற்று இங்கே வருகை தந்த பெரியவர் செங்கல்வராயன் அவர்களுக்கும், அன்பிற்குரிய அய்யணன் அம்பலம் அவர்களுக்கும் நன்றி கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ★



### சரிகமபதநி

மயிலின் அகவலில் சட்ஜமும்
காளையின் ஹுங்காரத்தில் ரிஷபமும்
ஆட்டினது குரலில் காந்தாரமும்
கொக்கினது சப்தத்தில் மத்தியமும்
குயிலின் குரலில் பஞ்சமமும்
குதிரையின் கனைப்பில் தைவதமும்
யானையின் பிளிறலில் நிஷாதமும்
தோன்றியதுதான் ச ரி க ம ப த நி

- 'நாரதீய சிட்சா'

# நன்னீரில் இறால் வளர்ப்பு

நன்னீர் இறால்கள் புரதச் சத்து நிறைந்த சுவை மிகுந்த ஒரு சிறந்த மாமிச உணவாக இருப்பதால் அவற்றிற்கு உலகச் சந்தைகளில் அதிக வரவேற்புள்ளது.

நன்னீர் வாழ் இறால்களில் பலவகை இருப்பினும், குறுகிய காலத்தில் கூடுதலான வளர்ச்சியடையும், நீலக்கால் (மேக்ரோபிராக்கியம் ரோசன்பெர்கி) மற்றும் மோட்டு இறால் (மேக்ரோ பிரக்கியம் மால்கம் சோனி) ஆகிய இரு இனங்கள் மட்டுமே குறிப்பிடத்தகுந்தவையாகும். ஏனெனில் இவ்விருவகை இறால்களைத் தனியாகவோ அல்லது, கெண்டைமீன்களுடன் சேர்த்தே வளர்க்கலாம்.

## இடத்தேர்வு மற்றும் குளம் அமைப்பு

நீர்நிலைகளுக்கு அருகாமையில் உள்ள சமமான இடங்களைத் தெரிவு செய்யவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் ஏறக்குறைய ஒரு மீட்டர் ஆழத்திற்கு மணல், வண்டல் மற்றும் களிமண் கலவை (1.5 : 1 : 1.5) என்ற விகிதத்தில் ஒவ்வொரு குளமும் 0.1 முதல் 0.5 எக்டேர் பரப்பில் செவ்வக வடிவத்தில் அமைக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் உள்மடை, வெளிமடை அமைக்க வேண்டும். கலபமாக இறால் பிடிக்க வெளிமடைக்கு அருகே 2 மீட்டர் விட்டமும் 1 மீட்டர் ஆழமும் உள்ள இறால் பிடி குழி ஒன்று தயார் செய்ய வேண்டும். குளக்கரை சரிவு 1:1.5 என்ற விகிதத்தில் அமைக்க வேண்டும்.

## குளம் தயார் செய்தல்

நிலத்தை நன்கு காய வைத்து உழவேண்டும். 500 கிலோ நீர்த்த சுண்ணாம்பு இட வேண்டும். கார அமிலத் தன்மையை 7.5 முதல் 8.5 வரை உயர்த்த வேண்டும். உயிரியல் உரம் (மாட்டு சாணம்/கோழி கழிவு) இட்டுக் குளத்தின் நீர்மட்டம் 30 செ.மீ. அளவில் இருக்கச் செய்யவேண்டும். 100 கிலோ யூரியா 250 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை அடிஉரமாக முதல் தவணையாக இடவேண்டும். உரமிடுதல் மூலம் மிதக்கும் உயிரினங்களில் உற்பத்தி மற்றும் வளர்ச்சியை அதிகரிக்கலாம். 15 நாள் கழித்து நீரின் நிறம் பசுமை/தங்க நிறமாக மாறியதும் நீர்மட்டத்தை 1 மீட்டருக்கு உயர்த்தி அதை அறுவடைக் காலம் வரை பராமரிக்க வேண்டும்.

## இறால் குஞ்சு இருப்பு செய்தல்

தனியார் மற்றும் அரசு இறால் குஞ்சு பொறிப்பகங்களில் இருந்து நன்னீர் இறால் குஞ்சுகளைப் பெற்று எக்டேருக்கு 60,000 வரை இருப்பு செய்யலாம் - இருப்பு செய்வதற்கு முன்பு நாற்றங்கால் சூழ்நிலையில் வைத்து இருவாரங்களுக்கு உணவு கொடுத்துப் பின்னர் விட்டால் பிழைப்பு விகிதம் கூடும்.

## இருப்பு செய்தபின் பராமரிப்பு

இருப்புச் செய்த பின்னர் குளத்து நீரை பாதுகாப்பது மிகவும் முக்கியம். இறால்களின் வளர்ச்சி மற்றும் பிழைத்திருத்தல், குளத்து நீரின் வேதியல் இயற்பியல் தன்மையைச் சார்ந்திருப்பதால் நீரில் கரைந்துள்ள பிராணவாயு அமிலக்காரத்தன்மை மற்றும் மிதக்கும் உயிரினங்களின் உற்பத்தியைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். வெப்பம் 26' - 32' செல்சியஸ், பிராணவாயு 5 பிபிஎம், உவர்நீர்நிலை - 0.8 பிபிடி என்ற அளவில் தக்கவைத்துக் கண்காணிப்பதின் மூலம் இறால்கள் நன்கு வளரும். நீரில் பிராணவாயு அளவைச் சரியாகப் பராமரிக்க காற்றூட்டும் சாதனத்தை (Aerator) உபயோகிக்கலாம்.

## தீவனம்


ஈரமாகவோ அல்லது காய்ந்த நிலையிலோ உணவு கொடுக்கலாம். மீன் பொடி நிலக்கடலை, குருணை அரிசி கோதுமை, கடலைப் புண்ணாக்கு, மரவள்ளிக் கிழங்கு மாவு போன்றவைகள் உரிய அளவில் கலந்து இறால் உணவு தயாரிக்கப்படுகிறது. வர்த்தக நிறுவனங்கள், இறால் தீவனத்தை - முறுக்கு வற்றல் வடிவத்தில் தயாரித்து விற்பனை செய்கின்றன.

## அறுவடை மற்றும் விற்பனை

5 மாதங்களில், இறால் சராசரி 50 கிராம் எடை அளவிற்கு வளர்ந்துவிடும். நீளக்கால் இறால்கள் அதிகபட்சம் 250 கிராம் எடை வரை வளர்ச்சி அடையும். இறால்களைப் பிடிப்பதற்குத் தண்ணீரை வடித்த பின்னர் இழுப்புவலை அல்லது வீச்சுவலையை உபயோகிக்கலாம். நீரை முழுமையாக வெளியேற்றிய கையால் தடவியும் வளர்ந்த இறாக்களைப் பிடிக்கலாம்.



## திட்ட அறிக்கை (ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பு)




| | | |
|---|---|---|
| **அ. முதலீடு** | | **(ரூ. இலட்சத்தில்)** |
| 1. கட்டுமானம் (கரைகள்,உள்,வெளிமடை அமைக்க) | - | 1.75 |
| 2. கிணறு நீர் இறைக்கும் இயந்திரம் | - | 0.35 |
| 3. காற்றூட்டி, மின் இணைப்பு சாதனம் முதலியன | - | 0.22 |
| 4. தங்கும்/பண்டக அறை இதர சாதனம் | - | 0.33 |
| மொத்தம் | - | 2.65 |
| **ஆ. செயல்முறை செலவினம்** | | |
| 1. இறால் குஞ்சு விலை 60,000-க்கு (1000க்கு ரூ.850 வீதம்) | - | 0.51 |
| 2. தீவனம் - 3,000 கிலோ (கிலோ ரூ.25/- வீதம்) | - | 0.75 |
| 3. பராமரிப்பு, உரம், இதரச் செலவினம் | - | 0.34 |
| மொத்தம் | - | 1.60 |
| **இ. மொத்தத் திட்டச் செலவு (அ + ஆ )** | - | 4.25 |
| **ஈ. வருவாய்** | | |
| 1. 5 மாதங்களில் அறுவடை சராசரி வளர்ச்சி 50 கிராம் வீதம் | - | 1500 கிலோ |
| | | **(ரூ. இலட்சத்தில்)** |
| 2. விற்பனை வரவு (கிலோ ரூ.200 வீதம்) | - | 3.00 |
| 3. ஒரு அறுவடைக்கு நிகர இலாபம் (3.00 - 1.60) | - | 1.40 |
| 4. ஆண்டுக்கு நிகர இலாபம் (6.00 - 3.20) (இரு அறுவடைகளில்) | - | 2.80 |

*குறிப்பு: முதலீட்டுத் தொகையை இரு ஆண்டுகளில் திரும்பப் பெறலாம்.*

**உதவி இயக்குநர், தகவல் மற்றும் விரிவாக்கப் பிரிவு வெளியீடு, தமிழ்நாடு மீன்துறை, சென்னை-6 .**




## தெரிந்து கொள்வோம்




| படைப்பு | | படைப்பாளர் |
|---|---|---|
| சைக்கிள் | - | மாக்மிலன் |
| ரப்பர் | - | குட் இயர் |
| ரிவால்வர் | - | கோல்ட் |
| பாட்டரி | - | வோல்டா |
| இடிதாங்கி | - | பிராங்களின் |
| சிமெண்ட் | - | ஆஸ்பிடின் |
| குளோரஃபாம் | - | சிம்சன் |
| டைனமிட் | - | நோபல் |
| பேனா | - | வாட்டர்மென் |
| எக்ஸ்ரே | - | ரோன்ட்ஜன் |
| பைக் | - | டெய்மர் |
| டயர் | - | டன்லப் |









| படைப்பு | | படைப்பாளர் |
|---|---|---|
| ரேடியம் | - | மேடம் கியூரி |
| டெலிவிஷன் | - | பயார்டு |
| பெனிசிலின் | - | பிளமிங் |
| பிளாஸ்டிக் (1930) | - | காரொதெரஸ் |
| காந்தம் | - | ஸ்டார்ஜியான் |
| அச்சு | - | கூட்டன்பர்க் |
| ஆப்செட் | - | அலாய் செனிபீல்டு |
| ஸ்டெதாஸ்கோப் | - | லானென் பிரா |
| டைப்ரைட்டர் | - | ஹோல்ஸ் |
| துணிதுவைக்கும் தூள் | - | டென்னன்ட்இ |
| கப்பல் | - | புல்டன் |
| ஒலிபெருக்கி | - | பெரிவினார் |











நன்றி: *'கண்ணியம்'*













## மொழி என்ற சொல், பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் பயன்படுகின்ற சொல் தமிழில் மாத்திரம்தான் உண்டு; சங்க காலத்திலிருந்தே 'தமிழிசையை' நாம் ஏற்றுக்கொண்டுதானிருக்கிறோம். மனித சமுதாயத்தில் தமிழன் என்ற இனம் அடையாளம் காட்டப்பட்ட அந்தக் காலத்திலேயே தமிழ் இசையும் தோன்றியிருக்கிறது.

(தமிழ் இசைச் சங்கத்தின் 55வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு
முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை)



மூன்றாவது முறையாக தமிழ் இசைச் சங்கத்தினுடைய ஆண்டு விழா நிகழ்ச்சியில் தொடக்க உரை ஆற்றுகின்ற வாய்ப்பினை நான் பெற்று உங்களை யெல்லாம் சந்திக்கின்ற சூழ்நிலையில் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். இந்த தமிழ் இசைச் சங்கத்தின் 26-வது ஆண்டு விழாவிலும், 47-வது ஆண்டுவிழாவிலும், இன்று 55-வது ஆண்டு விழா நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு இசைப் பேரறிஞர் பட்டம் பெறுகின்ற ஆற்றலா ளர்களை வாழ்த்துகின்ற அந்த வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

### தமிழிசைக்குப் பெருமை சேர்க்க வேண்டும்

தமிழ் இசைக்கு ஒரு ஆர்வம் தமிழகத்திலே பிறக்க வேண்டும். தமிழ் இசையைப் பரப்ப வேண்டுமென்று 1943-ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழின்பால் தனி அக்கறையும், தமிழின் மேன்மையிலே மிகுந்த ஆர்வமும் கொண்ட பெரியவர்கள் முயற்சியை மேற்கொண்ட காலக் கட்டத்தில் இந்த இசையை வளர்ப்பதற்கு அன்றைக்கு கொடியேந்தி நின்றவர் மறைந்த அண்ணாமலை செட்டியார் அவர்கள் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

நான் கடந்த முறை இந்த அரங்கிலே பேசியபோது ஒன்றைக் குறிப்பிட்டேன். அதைத் திரும்ப இங்கே நினைவுபடுத்த நான் விரும்புகிறேன். என்ன குறிப் பிட்டேன் என்றால்-

''இனிமேல் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற இசை விழாக்களில் இசைவாணர்கள் கலந்து கொள்ள வேண்டும்; இசை மழை பொழிய வேண்டும் என்று மாத்திரம்தான் இருக்க வேண்டுமேயல்லாமல் தமிழ் இசை தேவை என்பதற்காக ஒரு விரிவுரை, விளக்கவுரை இன்னமும் தேவைப்படுமேயானால், அதற்கு உண்மையான பொருள் - தமிழன் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறான் என்பதுதான். எனவே அத்தகைய ஒரு நிலை ஏற்படாமல் இனியாவது இசை பற்றிய நுணுக்கங்களை, இசை எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும், எவ்வாறு பயில வேண்டும், இசைக்குத் தரவேண்டிய மதிப்பு என்ன, மரியாதை என்ன, இன்னமும் என்னென்ன வகையிலே தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக வளர்ந்து வருகின்ற இந்த இசைக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்கள் வெளிப் படவேண்டும். மாறாக ஏன் தமிழிசையை அனைவரும் போற்ற வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை அளித்துக் கொண்டி ருப்பது தேவையற்ற ஒன்றாக எதிர்காலத்திலாவது மாறினால்தான் நம்முடைய காலத்தில் நாம் தமிழை உயரத்தில் உட்கார வைத்தோம் என்ற பெருமைக்குரியவர்களாக ஆவோம்" என்று குறிப்பிட்டேன்.

ஆனால் இன்னமும் தமிழ் இசை ஏன் தேவை என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகத்தான்

நான் உணருகிறேன். அவ்வாறுதான் கருதுகிறேன்.

> "தென்னாட்டுக்கு எப்போது சென்றாலும் என் சொந்த இடத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றும், தென்னாப்பிரிக்காவில் நான் செய்த அந்த வேலையின் காரணமாகத் தமிழர்கள் மீதும் எனக்கு ஏதோ தனி உரிமை உண்டு என்று நான் எண்ணுவதுண்டு!"
>
> - காந்தியடிகள்

**தமிழிசை இயக்கத்திற்காகப் பாடுபட்ட பெரியவர்களை நினைவுகூர்வோம்**

இந்தத் தமிழ் இசை இயக்கத்தைத் தொடங்கியபோது அந்தக் காலத்திலே அந்த மாநாட்டிலே உரையாற்றிய பெரியவர்கள் - குறிப்பாக டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் ஆற்றிய சொற்பொழிவில் -

"ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும், சிதம்பரநாதன் முதலியார் அவர்களும், சம்மந்த முதலியார் அவர்களும் தமிழ் இசையின் சிறப்பைப் பற்றியும் தமிழில் பெரிய கீர்த்தனைகள் இருக்கின்றன; இசை இருக்கின்றது என்று சொன்னார்கள். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. தமிழில் என்ன இசை இருக்கின்றதோ அந்த இசை எனக்கு போதும், என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்ம திருப்தி உண்டாகிறதோ அந்தத் திருப்தி எனக்கு வேறு எந்த மொழியில் பாட்டுக் கேட்டாலும் உண்டாகாது. ஆகையினால் தமிழனாகப் பிறந்த எனக்கு தமிழ் இசைதான் வேண்டும்'', என்று குறிப்பிட்டார்.

**அதே நிகழ்ச்சியில் உரையாற்றிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தன்னுடைய சொற்பொழிவில் -**

''மனிதன் மொழிகளுடன் சேர்த்துச் சங்கீதத்தைக் கேட்கும்போது ஒரு தனி சந்தோஷம் உண்டாகிறது. மனிதனின் குரல் சேர்ந்தவுடன் என்ன சொல்கிறார் என்றும் கூடவே மனம் கேட்கிறது. சங்கீதம் மனத்தில் ஏறுவதோடு என்ன சொல்கிறார் என்பதும் கூடவே ஏறுகிறது. சங்கீதத்தை மனிதக் குரலில் கேட்கும்போது, அந்தக் குரலில் மொழிகள் வரும்போது, அந்த மொழிகள் அர்த்தம் இல்லாமல் வேறு ஏதோ சப்தமாய், தப்பட்டையில் சப்தமாய் இருப்பதற்குப் பதில், சங்கீதத்தின் ரசத்திற்கு இணைந்ததாக நமக்கு விளங்கும் மொழியாக இருந்தால், இசையாக இருந்தால், சந்தோஷமாக இருக்கும் என்பதுதான் நம் தமிழ் இசை இயக்கத்தின் நோக்கம். நம் தாய் மொழியில் பாடினால் தான் நம் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும். கடவுளுக்கும் காது கேட்கும்'' என்று குறிப்பிட்டார்.

அவரைப் பின்பற்றி அந்தக் காலக்கட்டத்திலேயே, பேராசிரியர் கல்கி போன்றவர்கள் இந்தத் தமிழ் இசை இயக்கத்திற்காக ஆற்றிய அரும் பணிகளை யாரும் மறந்திட முடியாது. தமிழ் இசை வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் அதுவும் என்னைப் போன்றவர்கள் சொல்கின்ற நேரத்தில் இந்தத் தமிழ் இசையிலே பக்திப் பாடல்கள் இருக்காதோ - ஆண்டவனைப் பற்றிய பாடல்கள் ஒலிக்காதோ - என்ற சந்தேகம் யாருக்கும் இருக்கத் தேவையில்லை.

**'சங்க காலம் தொட்டே தமிழிசை உண்டு'**

- தமிழ் இசை எனபது தமிழன் தோன்றிய காலத்திலேயே தோன்றிவிட்ட ஒன்றுதான். மனித சமுதாயத்தில் தமிழன் என்ற இனம் அடையாளம் காட்டப்பட்ட அந்தக் காலத்திலேயே தமிழ் இசையும் தோன்றியிருக்கின்றது. சங்க காலத்திலேயே இசை உண்டு. தமிழ் இசை உண்டு. ஞானசம்மந்தர், திருநாவுக்கரசர் இவர்களுக்கு முத்திய ஒரு பெண்மணி - தமிழ் இசையில் எத்தகைய பாடல்களையெல்லாம் அமைத்து ஆண்டவனைப் பற்றிப் பாடினார் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய பெயர் புனிதவதி - காரைக்கால் அம்மையார். அந்த அம்மையாருடைய பாடலில் -

***"பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி அறவா, நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க..."***

- என்கின்ற இந்தப் பாடல் காரைக்கால் அம்மையார் பாடியது.

இந்தப் பாடலைப் பாட வேண்டாமென்று தமிழ் இசையைப் பரப்புகின்ற நாங்கள் யாரும் சொல்வதில்லை. எந்தப் பாடலானாலும், அது பக்தியை வழங்குகின்ற பாடலானாலும், அந்தப் பாடல் தமிழிலே இருந்தால் என்ன தவறு என்பதுதான் நம்முடைய கேள்வியாகும்.

இன்றைக்கு சென்னை மாநகரத்திலே தமிழ் இசைக்காக ஒரு மன்றம் இந்த அண்ணாமலை மன்றம் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் இதே காலக் கட்டத்தில் சென்னை மநகரத்தில் பல 'சபாக்கள்' இருக்கின்றன. இது மன்றம். மற்றவைகள் எல்லாம் 'சபா' - இதிலிருந்தே தமிழ் இசைக்கு நாம் தருகின்ற - தமிழ் மக்கள் தருகின்ற மதிப்பு என்னவென்று வெகு நன்றாக உங்களுக்கெல்லாம் புரியும்.

**தமிழன் தமிழில்தான் பேச வேண்டும் - இசையும் தமிழில்தான் இருக்க வேண்டும்**

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலக் கட்டத்தில் "சங்கீத நாடக சங்கம்" என்றுதான் இருந்தது. அதற்குப் பிறகுதான் அதனை ''இயல் இசை நாடக மன்றம்" என்று மாற்றினோம். சங்கீத நாடக சங்கத்தை இயல், இசை, நாடக மன்றம் என்று மாற்றிய காரணத்தால் இசை நுணுக்கங்கள் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நாங்கள் மும்மூர்த்திகளையும் பாராட்டுகிறோம், போற்றுகிறோம். தியாகய்யர் ஆனாலும், முத்துசாமி தீட்சதர் ஆனாலும், சியாமா சாஸ்திரிகள் ஆனாலும் அவர்களுடைய இசைப் புலமையை அவர்கள் எடுத்தாண்ட சாகித்யங்களை - அதிலே கருத்து வேறுபாடு இருந்தாலும், அந்த நுணுக்கங்களை நாங்கள் என்றைக்கும் பாராட்டத் தவறியதில்லை.

அதே நேரத்தில், அருணாசலக் கவிராயரை மறந்துவிடாதீர்கள்; முத்துத் தாண்டவரை மறந்து விடாதீர்கள், மாரிமுத்தா பிள்ளையை மறந்துவிடாதீர்கள் என்று சொல்வது தவறு அல்ல. அது மும்மூர்த்திகளுக்கு விரோதமான கருத்தும் அல்ல. எனவேதான் தமிழன் தமிழில் பேச வேண்டும். தமிழ் மொழியில் அவனுடைய இசை இருக்க வேண்டும்.

ஒருமுறை நான் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது இசைக்கு மொழி கிடையாது என்று சொல்லிவிட்டேன். இதைச்சில பேர் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு பிரச்சாரம் செய்தார்கள். முதலமைச்சர் கருணாநிதியே சொல்லிவிட்டார்-அப்போது நான் வெறும் கருணாநிதி அல்ல-இப்போது போல

அன்றைக்கு முதலமைச்சராக இருந்து அதைச் சொல்லிவிட்டேன். முதலமைச்சர் சொல்லிவிட்டதால், அதனை வேதவாக்கு போல எடுத்துக்கொண்டு - "இசைக்கு மொழி கிடையாது" என்று கருணாநிதியே சொல்லிவிட்டார் என்று அன்றைக்கு பெரும் பிரச்சாரம் நடைபெற்றது. நான் எந்தப் பொருளில் - எந்த நோக்கத்தில் - எந்த நேரத்தில் மேலும் என்ன சொன்னேன் என்பதை மறைத்து விட்டு, முதலில் சொன்ன இந்த ஒரு வாசகத்தை மாத்திரம் தமிழ் இசைக்கு எதிராகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

"இசைக்கு மொழி கிடையாது என்றால் நம்முடைய திருவிழா ஜெயசங்கர் வாசிக்கின்ற நாதஸ்வர இசைக்கு மொழி கிடையாது; பிடிலுக்கு மொழி கிடையாது, மத்தளத்திற்கு மொழி கிடையாது, புல்லாங்குழலுக்கு மொழி கிடையாது. ஆனால் சாகித்தியத்திற்கு - பாடலுக்கு மொழி தேவை" என்று நான் முற்றாக முடித்த அந்த இறுதி வாக்கியத்தை மாத்திரம் விட்டு விட்டு-இசைக்கு மொழி கிடையாது என்று சொன்னதை மாத்திரம் எடுத்துக்கொண்டார்கள்.

### இசைக்கு மொழி இல்லை; ஆனால் மொழிக்கு இசை தேவை

இசைக்கு மொழி இல்லை. ஆனால் மொழிக்கு இசை தேவை என்பதுதான் நான் அழுத்தந் திருத்தமாக இங்கே வலியுறுத்துகின்ற கருத்தாகும்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல இந்த மாநகரத்திலே இருக்கின்ற பல்வேறு 'சபா'க்களில் 'சங்கீத' மழை பொழிகின்றது. அங்கெல்லாம் 'சங்கீத' விற்பன்னர்களுக்குப் பட்டங்கள், விருதுகள் வழங்கப்படுகின்றன. அங்கெல்லாம் 'சங்கீத கலாநிதி' என்றும், 'விஷ்வ கலாபாரதி' என்றும், 'நாதப்பிரம்மம்' என்றும், 'நிருத்ய கலா சிரோன்மணி' என்றும் வழங்கப்படுகின்றன. இந்த ஒரு மன்றத்திலே "இசைப் பேரறிஞர்" என்ற பட்டம் வழங்கப்படுகின்றது - தமிழில்.

இன்னொன்றையும் நினைவு படுத்துகிறேன். இவ்வாறு பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சற்றுக் குறைந்த அளவிலே ஆனால் தமிழகத்திலே தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற முத்தமிழ்ப் பேரவை - அதுவும் சென்னையிலே இயங்குகின்றது. அந்த முத்தமிழ்ப் பேரவையிலும் ஆண்டுதோறும் விழா நடத்தப்பட்டு-இசை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு அதிலும் இயல் செல்வம், இசைச்செல்வம் என்கின்ற விருதுகள் தனித் தமிழிலே வழங்கப்படுகின்றன.

### தமிழ் இசையைப் பரப்புகின்ற கொள்கை வெற்றி பெற்றாக வேண்டும்

இது தமிழ் இசைச் சங்கத்தோடு நின்றுவிடக்கூடாது. முத்தமிழ்ப் பேரவையோடு நின்றுவிடக்கூடாது. இன்னும் பல மன்றங்கள் தோன்ற வேண்டும். சென்னையிலே மாத்திரம் தோன்றினால் போதாது. தமிழகமெங்கும் இத்தகைய மன்றங்கள் - இத்தகைய சங்கங்கள் தோன்ற வேண்டும். அங்கெல்லாம் தரப்படுகின்ற விருதுகளும், பட்டங்களும் தனித் தமிழிலே தரப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்திலே இந்த இனிய நிகழ்ச்சியிலே நான் எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல ராஜாஜி அவர்களும், அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், ஆர்.கே.சண்முகம் செட்டியாரும், பேராசிரியர் கல்கியும், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் அவர்களைத் தொடர்ந்து இதுவரையிலே கடைப்பிடித்து வருகின்ற - இந்தத் தமிழ் இசையைப் பரப்புகின்ற கொள்கை வேகமாக இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறதா என்றால் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



### தமிழில் மாத்திரம்தான் அவன் மொழிந்தான் என்று அந்தப் பெயர்ச்சொல்லே வினைச்சொல்லாக வரமுடியும்

நம்முடைய மொழி என்று சொல்கின்ற நேரத்திலேயே எந்த மொழிக்கும் இல்லாத பெருமை நமக்கிருக்கின்றது.

மொழி என்றால் ஆங்கிலத்திலே "லாங்குவேஜ்" - வடமொழியிலே "பாஷை". மொழி என்ற இந்தச் சொல் பெயர்ச் சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் பயன்படுத்தப்படுவது நம்முடைய தமிழ் மொழி ஒன்றிலே தான். மொழி என்றால் அது பெயர்ச்சொல். தமிழ் மொழி "மொழி" என்று சொன்னால் - சொல் என்று ஒருவனைப் பார்த்து - நான் சொன்னதை திரும்ப மொழி என்று சொன்னால் அங்கே மொழி என்பது வினைச்சொல். இப்படிப் பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் பயன்படுகின்ற ஒரு சொல்தான் மொழி என்பது! ஆங்கிலத்தில் 'லாங்வேஜ்' என்கிறோம். அதை வினைச்சொல்லாகக் கூறுவதென்றால் - ஒருவன் பேசுகின்றான் என்று கூறுவதற்கு "HE LANGUAGE" என்று கூறமுடியாது. அதைப்போல, "அவன் பாஷைக்கிறான்" என்றும் சொல்ல முடியாது. **தமிழில் மாத்திரம்தான் அவன் மொழிந்தான் என்று அந்தப் பெயர்ச்சொல்லே, வினைச்சொல்லாக வர முடியும்.**

இசை என்பது கூட - பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் அடங்கிய ஒரு சொல்தான். இசை - சங்கீதம் என்று பெயர்ச்சொல்லாக வரும். "இதற்கு நீ இசை" எனும்போது "இதற்கு நீ இணங்கு" என்று பொருள் வரும்போது வினைச் சொல்லாக வரும். ஆனால் "மியூசிக்" என்பதில் அப்படி வராது. "சங்கீதம்" என்பதில் வராது. அந்தப் பெருமையும் தமிழுக்குத்தான் உண்டு. எல்லாப் பெருமையும் உண்டு. ஆனால் அதற்கு மக்கள் மன்றம்தான் கிடையாது. இதைப் பரப்புகின்ற அந்த ஆர்வம்தான் தமிழ்நாட்டிலே கிடையாது.

### சங்க காலத்திலிருந்து தமிழ் இசையை நாம் ஏற்றுக்கொண்டு தானிருக்கிறோம்.

நான் சொன்னேனே, காரைக்கால் அம்மையார் காலத்திலேயே தமிழ்ப் பாடல் பாட வில்லையா? அதை

யாரும் கேட்கவில்லையா? ஆண்டவனுக்கு அது புரியவில்லையா? புரிந்த காரணத்தினால் தானே ஆண்டவன் காரைக்கால் அம்மையாரை ஏற்றுக் கொண்டான் என்று புராணமே குறிப்பிடுகின்றது.

மாணிக்கவாசகருடைய தமிழை - தமிழ்ப் பாடலை ஆண்டவன் ஏற்றுக் கொள்ளவில்லையா? திருநாவுக்கரசருடைய தமிழ்ப் பாடலை ஆண்டவன் ஏற்றுக் கொள்ளவில்லையா? ஞான சம்பந்தருடைய தமிழ்ப்பாடலை ஆண்டவன் ஏற்றுக்கொள்ளவில்லையா? இப்பொழுது பாடினால் மாத்திரம் ஆண்டவன் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று கூறுவது என்ன நியாயம் என்பதைத் தயவுசெய்து நாமெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்த இசையைப் பற்றி சீவக சிந்தாமணியிலே ஒரு அழகான பாடல். சீவக சிந்தாமணியிலே காந்தருவதத்தை என்ற பெண்மணி வீணை வாசித்துக் கொண்டே பாடுகிறாள். அதை அரசனுடைய அவையிலே இருக்கின்ற அரசரும் மற்றவர்களும், புலவரும், பிரதானியரும் கேட்கிறார்கள். கேட்டுக் கொண்டிருந்து விட்டு என்ன சொல்கிறார்கள் என்று அந்தப் பாடல் குறிப்பிடுகிறது. தெரியுமா?

*"கருங்கொடிப் புருவம் ஏறா;*
*கயல்நெடுங் கண்ணும் ஆடா;*
*அருங்கடி மிடறும் விம்மாது*
*அணிமணி எயிறும் தோன்றா;*
*இருங்கடற் பவளச் செவ்வாய்*
*திறந்தவள் பாடினாளோ?*
*நரம்பொடு வீணை நாவால்*
*நவின்றதோ என்று நைந்தார்"*

அதாவது பாடும்போது அந்தப் பெண்மணியின் புருவம் ஏறவில்லை; கண்கள் ஆடவில்லை; மிடர் - தொண்டைக் குழி விம்மவில்லை. அணிமணி எயிறும் தோன்றா - அவள் அணிந்திருக்கின்ற அணிமணிகள் எதுவும் தோன்றவில்லை. அவளுடைய பற்களோ தெரியவில்லை. அவளுடைய பவளச் செவ்வாய் திறந்து பாடினாளோ? அல்லது அவள் கையிலேயிருந்த வீணை தான் நாவைப் பெற்று பாடியதோ? என்று அவையிலே இருந்தோர் அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டார்கள் என்று சீவக சிந்தாமணி ஒரு இசைக்காட்சியை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இப்படி அக்காலம் முதல் இக்காலம் வரையில் தமிழர்களால் போற்றப்பட்ட - தமிழ் புலவர்களால் போற்றப்பட்ட - தமிழ் மன்னர்களால் போற்றப்பட்ட இடைக் காலத்தில் - களப்பிரர் காலத்திலே தான் என்னவாயிற்று என்பது கேள்விக்குறியாக தமிழ் இசைக்கு ஒரு காலம் வாய்த்ததே அல்லாமல், பிற காலத்திலே எல்லாம் தமிழ் இசைக்கு நற்காலம் தான் இருந்தது. ஆனால் **நம் காலத்திலேதான் தமிழ் இசையைப் பற்றி இன்னமும் பேசி தெளிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை இன்றைக்கும் இருக்கின்றது.**

**இசைப் பேரறிஞர் பட்டம் பெறும் ஜெயசங்கரை வாழ்த்துகிறேன்.**

இந்த மன்றத்தில் இன்றைக்கு நம் அனைவருடைய இனிய வாழ்த்துக்களோடும், பாராட்டுக்களோடும் இசைப் பேரறிஞர் பட்டம் பெறவிருக்கின்ற ஜெயசங்கர் அவர்களை உங்களோடு சேர்ந்து நான் வாழ்த்துகிறேன். ஜெயசங்கர் அவர்கள் இந்த விழாவிலே பட்டம் பெறுகிறார் என்று கேள்விப்பட்டதும், நான் இதுவரையில் நினைத்திருந்த ஒரு தவறான கருத்து - தவறான கருத்தோ சரியான கருத்தோ - அதைத் திருத்திக் கொள்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஜெயசங்கர் ஒரு பிராமணர் என்று நான் கருதிக் கொண்டிருந்தேன். ஏன் கருதினேன் என்றால் பிராமணர்கள் பட்டம் பெறக்கூடாது என்பதற்காக அல்ல - நான் செம்மங்குடியை வாழ்த்தி யிருக்கிறேன்; பாராட்டியிருக்கிறேன். குன்னக்குடியை வாழ்த்தியிருக்கிறேன் பாராட்டியிருக்கிறேன்.

ஆனால், ஜெயசங்கரைப் பொறுத்த வரையிலே அவர் நாதஸ்வரவித்வானாக எப்படி இருக்க முடியும் என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஏனென்றால் ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் திருவாரூரில் மறைந்த இசைமேதை டி.வி.நமசிவாயத்தின் திருமணத்திற்காக 1948-ல் வந்திருந்தார். அங்கே அண்ணா பேசும் போது குறிப்பிட்டார். இந்த அவையிலே இருக்கின்ற யாரும் தவறாகக் கருதக்கூடாது. அண்ணா பேசியதைத் தான் கூறுகிறேன்.

"இசை வேளாளர் சமுதாயத்திலே உள்ளவர்கள் ஒரு காலத்திலே அவர்களுடைய கலைவளத்தின் காரணமாக சமுதாயத்தில் இழிவாகக் கருதப்பட்டது உண்டு. ஆனால் எதையெதை இழிவு என்று சொன்னார்களோ அதையெல்லாம் உயர்சாதிக்காரர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். பரதநாட்டியம் ஆடுவதை இழிவு என்று சொன்னார்கள். அதனால் இசைவேளாளர்களைப் பற்றிக்கேவலமாகப் பேசினார்கள். இன்றைக்கு உயர்சாதி மக்கள் அந்தப் பரதநாட்டியத்தை எடுத்துக் கொண்டுவிட்ட காரணத்தினால், பரதநாட்டியமும் உயர்ந்துவிட்டது. அதை எடுத்துக் கொண்டவர்களும் உயர்ந்து விட்டார்கள். இப்படி அநேகமாக இசைவேளாளர்களுடைய கலைச்செல்வம் அத்தனையையும் உயர்சாதிக்காரர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொள்ள முடியவில்லை. நாதஸ்வரம், தவில் - இதை மாத்திரம் எடுத்துக் கொள்ள முடியவில்லை. காரணம், அதற்கு நிறைய இறைச்சி சாப்பிடவேண்டும். அப்படி சாப்பிட்டால் தான் நாதஸ்வரம் ஊதுகின்ற அளவிற்கு "தில்" இருக்கும். அதனால்தான் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை'' என்று சொன்னார்கள். அதனால்தான் ஜெயசங்கர் என்று கேள்விப்பட்டதும், அண்ணா சொன்னதற்கு இது மாறுபாடாக இருக்கிறதே - இவரையும் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கேற்பட்டது. பிறகுதான் கேள்விப்பட்டேன், அவர் அப்படியல்ல, அவர் பணிக்கர் என்று நான் கேள்விப்பட்டேன்.

அவருடைய வரலாற்றுக் குறிப்புகளை மேடையிலே தந்தார்கள். அவருடைய தந்தை அவரை நாதஸ்வரம் வாசிக்கக் கூடாது என்று சொன்னார். பிடிவாதமாக 14-வது வயதில் தந்தையை மீறி நாதஸ்வரம் கற்றுக் கொண்டு இன்று நாட்டு மக்களுடைய வாழ்த்துக்களை யெல்லாம் பெற்றுக் கொண்டிருக்கின்றார். ஏற்கனவே ஜனாதிபதியின் பாராட்டை - விருதைப் பெற்றிருக்கின்றார். இன்றைக்கு இந்த மன்றத்தின் விருதையும் பெறுகிறார். பட்டத்தைப் பெறுகிறார். 14-வது வயது - அதே 14-வது வயதிலேதான் நான் என்னுடைய தந்தை சொல்லைக் கேட்கவில்லை. இவரும் கேட்கவில்லை. இவருடைய தந்தை சொன்னது -"நீ நாதஸ்வரம் வாசிக்கக் கூடாது'' என்று. இவர் வாசிப்பேன் என்றார். என் தந்தை சொன்னது - "நீ நாதஸ்வரம் வாசிக்க வேண்டும்" என்று. முடியாது என்றேன். இருவரும் ஒரே மேடையில் இன்று சந்திக்கிறோம். உங்கள் சார்பாக அவரை வாழ்த்தி விடை பெறுகிறேன். ★

# கார்ட்டூன் கலை வடிவங்கள்

## (புனையா ஓவியம்)

**கார்ட்டூனிஸ்ட் எஸ்.கே.ராமானுஜம் (ரானு)**

ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஓவியம் வரைவதும் ஒன்று. மொழி என்னும் சாதனம் தோன்றுவதற்கு முன்பே மனிதர்கள் சித்திரங்கள் மூலமாகத் தான் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்தனர்.

கலையின் வாயிலாக மனிதன் வெளிப்படுத்திக் கொள்வது தன் செய்திகளையோ, நோக்கங்களையோகூட அல்ல; **'மனிதன் கலையின் வழியாகத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறான்'** என இரவிந்தரநாத் தாகூர் மனம் திறந்து கூறுகிறார்.

ஓவியக் கலை சங்க காலத்தில் ஆங்காங்கு வெளிப்பட்டது. ஓவியம் போன்ற அமைப்பிலான அவர் தம் இல்லத்தை **"ஓவத்தன்ன இடனுடை வரைப்பு"** என நற்றிணை கூறுகிறது. அரண்மனைகளிலும், பெருங்கட்டடங்களிலும் ஓவியம் அழகுணர்வுடன் தீட்டப் பெற்றிருக்கும் செய்தியினை நெடுநல்வாடை, பட்டினப்பாலை, அகநானூறு முதலிய நூல்கள் தெளிவாக்குகின்றன. மேலும் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் உடல்களில் கூட ஓவியந்தீட்டி அழகினை வெளிப்படுத்தி மகிழ்ந்து வந்தனர் என்ற செய்தியையும் இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறாக ஓவியக் கலையில் மிகவும் நாட்டம் கொண்ட தமிழர்கள் கார்ட்டூன் கலையையும் வளர்த்துள்ளனர்.



கேலிச்சித்திரம், துணுக்குப்படம், கருத்துப்படம் என்று பலவாறு கூறப்பட்டு வரும் வடிவங்கள் உலகத்தில் பல்வேறு மொழி பேசும் மக்கள் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் 'கார்ட்டூன்' என்று (Cartoon) ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டு வருகின்றன. நம் நாட்டின் மிகப் பழமையான ஓவியக் கலை என்று கண்டறியப்பட்டுள்ள 'கார்ட்டூன்' சித்திரங்கள் மேல்நாட்டுக் கலை என்றே நம்மில் பெரும்பாலோர் கருதுகிறோம். ஆனால் அது உண்மையல்ல. நம் தமிழகத்தில் கற்காலம் தொட்டே இது பயன்படுத்தப்பட்டது என்ற செய்தி தமிழின நாகரிக வளர்ச்சியின் தொன்மையைப் பறைசாற்றுவதாகும்.

வண்ணம் இல்லாமல் கரித்துண்டுகளை உபயோகித்து உருவத்தை வரைந்த ஓவியம் "புனையா ஓவியம்" என்று அழைக்கப்பட்டது. இதனை மென்கோட்டு ஓவியம் என்பர், மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதை வரி 131ல் **"புனையா ஓவியம் போல நிற்றலும்"** - வீட்டில் மணிமேகலை நின்றது புனையா ஓவியம் போல இருந்தது என்றும் வருகிறது. இதற்கு உ.வே.சாமிநாதய்யர் **'வண்ணங்களைக் கொண்டு எழுதாத வரிக்கோட்டின் சித்திரம்'** என விளக்கமளிக்கிறார்.

***"புனையா ஓவியம் புறம் போந்தென' - மணிமேகலை***


பத்துப்பாட்டின் 7வது நூல் நெடுநல்வாடை வரி 148ல் "புனையா ஓவியம் கடுப்ப புனைவில்" என்று நக்கீரர் குறிப்பிடுகிறார். போர் சென்ற பாண்டியனைப் பிரிந்திருக்கும் கோப்பெருந்தேவி தாலி போன்ற அணிகலன்களைத் தவிர, மற்ற அணிகலன்களைப் பூணாது நிற்க அரசியை, புனையா ஓவியமாகக் காண்கிறோம்.



1992ல் ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் சந்திரபுரம் என்னும் ஊரில் அடிவாரத்தில் அரிய குகை ஓவியங்களைக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் குகையில் 5000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்றும் இங்குள்ள கலியாணக் குகையில் மனித உருவங்கள் செம்மை நிற வரிக்கோட்டில் வரையப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.இதனைத்தான் 'ஸ்டிக் டிராயிங்ஸ்' என்கிறோம். இதுவே கார்ட்டூன் கற்பதற்கான ஆரம்பநிலை) குதிரைகள், குதிரை வீரன், பலவித அடையாளங்கள் போன்றவைகளும் வரிக்கோட்டின் அமைப்பில் அமைந்திருப்பதை உற்று நோக்கும்போது (கார்ட்டூன்) வரிக்கோடு சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே, கற்காலத்திலேயே தோன்றியுள்ளது என்பதற்குச் சான்றாகும். மக்கள் வளர்ச்சியினூடே வளர்ந்த அழகுநுகர்பவர் ஓவியக் கலையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கிச் செழுமை செய்தனர். வண்ணக்கலவையில் ஓவியந்தீட்டி நிறைவு செய்வதற்கு முன்னரே கோடுகளாலும், வளைவுகளாலும், புள்ளிகளாலும் வடிவினைக் குறிப்பர். அத்தகைய குறிப்பு ஓவியத்தைத்தான் "புனையா ஓவியம்" என்பர் இதுவே கார்ட்டூன் கலையின் அடிப்படையாகும்.

## புனையா ஓவியம் (கார்ட்டூன் கலை)

புனையா ஓவியம் என்பதே கார்ட்டூன் கலைக்கு முதல் படியாகும். படிப்படியாக இந்தப் புனையா ஓவியம் என்பது பழங்காலக் கோவில்களிலும், கல்வெட்டுகளிலும் உருவாகத் தொடங்கியது. அப்படியே அது வளர்ச்சியடைந்து கோவில்களிலுள்ள கோபுரங்கள், மண்டபங்கள், தூண்கள், பாறைகள் போன்றவற்றில் புனையா ஓவியம் (கார்ட்டூன்) அக்காலச் சிற்பிகளால் உருவங்களாகச் செதுக்கப்பட்டது. இதேபோல் ஓவியர்களால் கோவில்களிலுள்ள மண்டபங்களின் அடித்தளங்களிலும் வரையப்பட்டன. நாளடைவில் புனையா ஓவியம் (கார்ட்டூன்) பொதுமக்களைக் கவரக்கூடிய ஒரு சிறந்த கலை என்பதை ஓவியர்களும், சிற்பிகளும் உணர்ந்தனர். அதன்படி ஓவியர்களும், சிற்பிகளும் கடவுளின் பலவித வாகனங்களை கார்ட்டூன் வடிவில் உருவாக்கித் தெய்வ வழிபாட்டில் கொண்டு வந்தனர். உதாரணமாக ரிஷபம் (காளைவடிவம்), குதிரை, மயில், யானை, சூரன், சிம்மம் போன்ற பலவித வாகனங்களை கார்ட்டூன் வடிவில் உருவாக்கி மக்களின் மனதைக் கவரும்படி செய்திருக்கிறார்கள். கார்ட்டூன் வடிவ பூதகணங்களைச் சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும், வாகனங்களாகவும், திருக்கோவில் ஸ்தலங்களில் உருவங்களில் உருவாக்கிப் பொதுமக்கள் கண்டுகளிக்கும்படி செய்து கார்ட்டூன் கலையை வளர்த்திருக்கிறார்கள்.



சிங்க உடலும் மனிதத் தலையும் இணைத்துச் சிற்பமாக்கி கார்ட்டூன் வடிவங்களைத் தந்துள்ளனர். மண்டபங்களில் கீழ்ப் பகுதி சுவர்களிலும் ஒரே விதமான பூதகணங்களின் கால், கை அசைவுகளை கார்ட்டூன் வடிவில் மிக அழகாகச் சிற்பிகள் செதுக்கியுள்ளனர். அவற்றினை நாம் சாதாரணச் சிற்பங்கள் என்ற வகையில்தான் கண்டு மகிழ்ந்து வருகிறோம். ஆனால், என் ஆராய்ச்சியின்படி அம்மாதிரி ஒரு சில சிற்பங்களை கார்ட்டூன் உருவங்கள் என்று ஏன் பிரித்துக்கூறக் கூடாது எனச் சித்தரிக்கத் தோன்றுகிறது. மேலும், மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹாலில் உள்ள தூண்களில் சிங்கமும், யானையும் ஒன்று சேர்ந்த ஒருவிதமான 'யாளி'யின் உருவங்களை இப்பொழுதும் காணலாம். அவை கற்பனையில் அக்காலச் சிற்பிகள் செதுக்கிய கார்ட்டூன் சிற்பங்கள்தான் என்று இப்பொழுது தெரியவருகிறது. அக்காலச் செப்புத் தகடுகளில் இடம் பெற்ற இம்மாதிரியான கார்ட்டூன் வடிவ யாளிகளின் உருவங்களை இன்றும், முன்னோர்கள் கடைப்பிடித்த முறையை அடிப்படையாகக்கொண்டு செய்து வருகிறார்கள்.


உதாரணமாக, சென்னையிலுள்ள திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயத்திலுள்ள அருள்மிகு சனி பகவான் சந்நிதானத்தின் முகப்பில் இரண்டு கார்ட்டூன் யாளிகள் (செப்புத் தகடுகளில்) உள்ளன. இப்படியாக, நம் நாட்டில் கார்ட்டூன் கலைச் சித்திரங்கள் மற்றும் சிற்பங்களின் வடிவங்களைப் பழம்பெரும் கோயில்களில் உருவாக்கித் தந்துள்ளனர் என்று அறியமுடிகிறது. நம் நாட்டுச் சித்திரக் கலையும், சிற்பக் கலையும் கோயில்கள், மண்டபங்கள் போன்றவைகளின் மூலமாகத்தான் நம் நாட்டுக் கலைஞர்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்துள்ளனர். பொதுவாக நமது பழம்பெரும் மன்னர்களின் மேற்பார்வையில்தான் இம்மாதிரியான கலைகள் நன்கு வளர்க்கப்பட்டு வந்துள்ளன என்று வரலாற்றுச் சான்றுகள் பகர்கின்றன. அக்காலச் சித்திர, சிற்ப சாஸ்திரங்களில் கூட கார்ட்டூன் வடிவங்களை அமைக்கும் முறை இருந்திருக்கின்றது என்பது நமக்கு உறுதியாகத் தெளிவாகின்றது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் கல்வெட்டுகளிலுள்ள மனிதனின் முழு உருவங்களை அப்படியே உள்ளபடி செதுக்காமல் சிறிது தலை பெரிதாகவும், உடல் சிறியதாகவும் செதுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குகை மனிதன் முதன் முதலில் கார்ட்டூன் வடிவத்தைத்தான் வரைந்தான் என்றும் **கார்ட்டூனிலிருந்துதான் ஓவியக் கலையே** உருவானது என்றும் கருதலாம்.


உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் கார்ட்டூன் உருவங்களில் மாறுபாடுகளைக் காணலாம். உதாரணமாக, மேல்நாட்டு கார்ட்டூன்களில் உருவங்கள் அணிந்திருக்கும் ஆடைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி கார்ட்டூனின் அமைப்பு வித்தியாசப்படும். அதே போன்று நம் நாட்டு சூழ்நிலை மற்றும் ஆடை அலங்காரங்களின் வித்தியாசங்களையும்

நாம் கார்ட்டூனில் காண முடிகிறது. நம் நாட்டின் சூழ்நிலையையும் ஆடையலங்காரங்களையும் மனதில் கொண்டு பலவித புதிய கார்ட்டூன் உருவங்களைக் கற்பனையில் உருவாக்கினால், மேல்நாட்டவரைப் போல் கல்வி, விளம்பரங்கள், பாடநூல்கள், கண்காட்சிகள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் மற்றும் விளையாட்டு சாதனங்களிலும் கார்ட்டூன் வடிவங்களைப் பயன்படுத்தலாம். கார்ட்டூன் வரையக் கற்றுக் கொள்வது மிகவும் சுலபம். ஆகையால் ஓவியர்களுக்கான பயிற்சி நிலையங்களில் கார்ட்டூன் பயிற்சியை மாணவர்களுக்குக் கொடுத்தால் பல கார்ட்டூன் ஓவியர்களை (கார்ட்டூனிஸ்ட்) உருவாக்க முடியும்.

**இன்றைய நடைமுறைகள்**



கார்ட்டூன் வரைவது மிக எளிது. எனவே அக்காலத்திலிருந்து இன்று வரையில் பெரும்பாலும் தமிழ்நாட்டில் கார்ட்டூன் உருவங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறோம். கண்ணேறு கழிப்பதற்காக (திருஷ்டி) வீட்டு வாசல்களில் பருத்த விழி, பெரிய மூக்கு, நாக்கு என மிகைப்படுத்திய ஓவியத்தை பூசணிக்காயில் வரைந்தும் புதிய வீடு கட்டிக் கொண்டிருக்கும் பொழுது கண் திருஷ்டிபடாமல் இருக்க கார்ட்டூன் அமைப்பில் மனித முழு உருவத்தையும், அதே போல் வீடுகளின் மேற்புறத்தில் பருந்த தொந்தி, பெரும் விழி அமைப்புடன் செட்டியார் பொம்மை அமைப்பையும் வைத்திருப்பர். இது பார்ப்பவர்கள் வீட்டினை நோக்காமல் அச்சிலையின் மீது கண்படும்படியாகப் பொருத்தியிருப்பர். மேலும் கிராமப்புறங்களில் வயல் வெளிகளில் ‘சோளக் கொள்ளை பொம்மை’, அய்யனார் சிலை, பிரம்மாண்ட குதிரை போன்றவைகளைக் காணும்போது தமிழ் நாட்டில் கார்ட்டூனை வளர்த்திருக்கிறார்கள் என்பதற்கு இவைகளே நிலைத்த சான்றுகளாகும் எனலாம், நம் வீடுகளில் வைக்கப்படுகிற கொலுவில் (நவராத்திரி விழா) அனைவரும் ஆர்வத்தோடு ரசிக்கும் செட்டியார் பொம்மை யாவரும் அறிந்ததே. இது கார்ட்டூன் வகையைச் சார்ந்ததுதான். இதே சாயலைக் கொண்ட ‘லாப்பிங் புத்தா’ (ஹேப்பி மேன்) என்று அழைக்கப்படும் பொம்மை தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் சிறிய அளவிலிருந்து பிரம்மாண்ட அளவு வரை வைத்திருப்பார்கள். இது மக்கள் கூடும் பொது இடங்கள், பூங்கா, கண்காட்சி போன்ற இடங்களில் வைத்திருப்பர். இப்பொம்மைகளில் குழந்தைகள் மிகவும் ஆர்வத்தோடு விளையாடுவதுண்டு. ஜப்பானியர்களும், சீனர்களும் இந்தப் பொம்மையை நீண்ட நேரம் ரசித்துப் பார்ப்பார்கள். இந்தப் பொம்மைகளை வீட்டு வரவேற்பறைகளில் வைத்தால் மகிழ்ச்சியும், செல்வமும் வற்றாது என்பது அவர்களின் நம்பிக்கை.



இப்பொழுதும் புனையா ஓவியத்தைப் பரம்பரை பரம்பரையாக நம் நாட்டு மக்கள் திருஷ்டி கழிக்கும் பூசணிக்காய்களிலும், சிறிய பானைகளிலும், சோளத்தட்டு பொம்மைகளிலும் பயன்படுத்தி வருவதைப் பார்க்கிறோம்.



ஆனால் இப்பொழுது கார்ட்டூன் கலை தனிப்பட்ட முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது. உதாரணமாக மிருகங்கள், பறவைகள், புழு, பூச்சிகள் மற்றும் மரம், செடி, கொடி, காய்கள், பழங்கள் போன்ற பலவித உருவங்களைக் கூட படைத்து அனிமேசன் திரைப்படங்களிலும் (Animation Picture) தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் புகுத்தி நாளுக்கு நாள் கார்ட்டூனின் பெருமையை பொதுமக்கள் புரியும்படி செய்து வருகிறார்கள். கார்ட்டூன் படங்களை முதன் முதலில் பத்திரிகை உலகுக்கு அறிமுகம் செய்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த **ஆஸ்பெர்ட் லஸ்காண்டர்**. இவரது படங்கள் **‘டெய்லி எக்ஸ்பிரஸ்’** என்ற செய்திப் பத்திரிகையில் இடம் பெற்றன. 1870களில்தான் **ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும்** அரசியல் **கார்ட்டூன்கள்** அமோக வரவேற்பு பெறத் தொடங்கின. கேலிச் சித்திரங்கள் என்றால் நகைச்சுவை என்ற கோணத்தை மாற்றி கார்ட்டூனை உணர்ச்சிபூர்வமாகவும் (சீரியஸ்) அளிக்க முடியும் என்று **ஜோஸப் கெட்விர், டென்னியல், ஜான் லீச்** போன்ற கார்ட்டூனிஸ்டுகள் நிரூபித்தனர்.

இரண்டாம் உலகப் போர்க்காலக் கட்டத்தில் **‘டேவிட் லோ’** கார்ட்டூன் ஓவியங்களைச் செய்திப் பத்திரிகையில் வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் என்ற பெருமை அடைகிறார்.

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் சுதந்திர தாகத்தை மக்கள் மனதில் பதிய வைக்க கார்ட்டூன் மூலம் செய்திகளைப் பவனி வரச் செய்த பெருமை **மகாகவி பாரதியாரையே** சாரும்.

1920ல் அமெரிக்க கார்ட்டூனிஸ்டும், சினிமாப்பட தயாரிப்பாளருமான **‘வால்ட் டிஸ்னி’** கார்ட்டூனில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி கார்ட்டூன் என்றால் கேலிச்சித்திரம், அரசியல் கார்ட்டூன் என்ற நோக்கையே முறியடித்தார். உலக மக்கள் யாவரும் வியக்கும் வண்ணமும் பேசும்படியின்ற ஆற்றலுக்கு இவரது படைப்புகளான **“மிக்கி மவுஸ்” (and) “டோனால்டு டக்”** இருந்தது. மேலும் “ஸ்னோ ஒயிட்”, செவன் ட்வார்ப் (Seven Dwarf) முழு நீள கார்ட்டூன் படங்களை





வெளிக் கொணர்ந்து ஒரு தனி இடத்தைப் பிடித்து கார்ட்டூனுக்கென ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கிய பெருமை டிஸ்னியைச் சாரும்.

இந்திய வரலாற்றில் கார்ட்டூனிஸ்டுகள் (கார்ட்டூன் கலைஞர்கள்) யாரும் வாரிசுகளை உருவாக்குவதில்லை. இது பழங்காலந்தொட்டு தொடர்ந்து வருகின்றது என்பதை ஆரம்பத்தில் விளக்கியிருக்கிறேன். இவ்வாறாக கார்ட்டூன் கலை ஒரு நபருடனே பொதிந்து, வேறு யாருக்கும் கற்றுத் தர முன்வராததால் இக்கலை இந்தியாவில் வளர்ச்சி பெற முடியவில்லை என்பதே என் வாதம். மேலும் இந்திய மக்களைக் கேட்கும்போது கார்ட்டூன் என்றால் அரசியல் தலைவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டோர் போன்ற முக்கியப் புள்ளிகளைக் கேலி செய்து பத்திரிகையில் வெளியிடுவதை மட்டும்தான் கார்ட்டூன் என்கிறார்கள். ஏன் பத்திரிகை நண்பர்களும் அப்படித்தான் அங்கீகரிக்கின்றனர். இந்தியாவில் தோன்றிய இந்தக் கலையை யாரும் வளர்க்க முன்வராததால் மேலை நாடுகளில் பெருமளவில் வளர்ச்சியுற்று எல்லாத் தரப்பிலும் கார்ட்டூன் உத்தியைக் கொணர்ந்து நன்முறையில் முன்னேற்றியிருப்பதை கண்கூடாகக் காண்கின்றோம்.

கார்ட்டூன் உத்தியை இந்தியாவில் பள்ளி மாணவர்கள், மனநிலை குன்றியவர்கள் ஆகியோருக்கு உதவும் வகையில் உருவாக்கி, தொழில்நுட்பத்தைச் சிறப்படையச் செய்யலாம். கார்ட்டூனால் பலருக்கு நல்ல வேலைவாய்ப்பைப் பெருக்கி உருவாக்க முடியும்.

இனி, பிற்காலத்தில் இந்த கார்ட்டூன் கலையின் நிலையைப் பற்றிச் சிந்திக்கும்போது, மனிதனுடைய அறிவும், ஆற்றலும் நவீனத்தை நோக்கி வேகமாக வளர்கிற போது இக்கலை காக்க இயலா ஒன்றாக அமைகிறது. உதாரணமாக கம்ப்யூட்டர் முறை முன்னோடியாக இப்பொழுது திகழ்கிறது. மனிதனின் கற்பனை சக்தியில் உருவான கம்ப்யூட்டரில் கூட இப்பொழுது பலவிதமான கார்ட்டூன் அனிமேஷன் படங்களைத் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகையால் பழங்கால கார்ட்டூன்களுக்கும் (புனையா ஓவியம்) இப்பொழுதுள்ள கார்ட்டூன்களுக்கும் நாம் உருவ அமைப்பில் பல புதுமைகளைக் காண முடிகிறது. இன்னும் பிற்காலத்தில் கார்ட்டூன் கலையின் வளர்ச்சி கம்ப்யூட்டர் மற்றும் தொலைக்காட்சியின் மூலம் பெருமளவுக்கு வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகமே இல்லை. கார்ட்டூன் கலையின் ஆராய்ச்சிக்கு முடிவேயில்லை. கற்பனை வளர, வளர கார்ட்டூனில் பல புதிய படைப்புகளும் உருவாகும் என்பதில் ஐயமில்லை.




## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.54 கோடி ஒதுக்கீடு - முதலமைச்சர் கலைஞர் ஆணை !

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வாங்கிட, தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களுக்கு 42 கோடியே 50 லட்சம் ரூபாய் அனுமதி அளித்து முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தார்.

பெருமழையினால் இதர மாவட்டங்களிலும் ஏராளமான குடிசைகளும், பயிர்களும் பாதிக்கப் பட்டுள்ளன. உயிரிழப்பும், கால்நடை உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளன. எனவே, சென்னை மாவட்டம் உட்பட, இதர மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிட 11 கோடியே 45 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் தண்ணீரால் சூழப்பட்டுள்ள கூரை வீடுகளுக்கு நிவாரணமாக 10 கோடி ரூபாய், முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு நிவாரணமாக 1 கோடி ரூபாய், மழையினால்



உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.15,000 வீதம் நிவாரணம் வழங்க 30 லட்ச ரூபாய், மழையினால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க 15 லட்சம் ரூபாய், ஆக மொத்தம் 11 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிவாரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிடக் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இதையும் சேர்த்து வெள்ள நிவாரணமாக மொத்தம் ரூ.54 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# “காவலர்கள் என்றென்றைக்கும் எங்கள் நண்பர்களே”

- முதலமைச்சர் கலைஞர்





சாஸ்திரி நகர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கின்ற இந்த இனிய வைபவத்தில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக் காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இங்கே தம்பி பாலு பேசும்போது, மதச் சார்பற்ற நிலையை நாடி இந்த நாடும், நாட்டில் இயங்குகிற பல்வேறு அரசியல் இயக்கங்களும், சமுதாய இயக்கங்களும், இயக்கங்களில் ஈடுபடாத ஆன்றோர்களும், சான்றோர்களும் இருக்கின்ற நிலையை எடுத்துக் கூறினார்.

இந்த மேடையிலேயே இஸ்லாமிய சமுதாயத்து நண்பர் ஒருவரும், இந்து மதத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவரும், கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பேராயர் ஒருவரும் எனக்கு வரிசையாக வந்து சால்வைகள் அணிவித்ததை அவர் உதாரணமாக எடுத்துச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார். அவர்கள் மேடைக்குத் தனித்தனியாக வந்தது மாத்திரமல்ல, நான் எதிரே பார்க்கிறேன்; வந்தவர்கள் மூவருமே ஒன்றாக ஒரே வரிசையிலே இந்தப் பந்தலிலே அமர்ந்திருக்கிறார்கள்.

பந்தலிலே மாத்திரமல்ல, பாரதத் திருநாடு முழுதும் இந்தக் காட்சியைக் காணத்தான் நான் விரும்புகிறேன். நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லாம் இந்தக் காட்சிக்காகத்தான் காத்துக் கிடக்கிறார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தினர், பெரும்பான்மைச் சமுதாயத்தை மதித்துச் செல்ல வேண்டும் என்பதையும், பெரும்பான்மைச் சமுதாயத்தினர் சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற ஒரு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவன் என்கின்ற முறையிலும், அந்த இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் அந்தப் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டியவன் என்ற முறையிலும் அரசே இந்தக் காரியங்களை எடுத்துச் செய்ய வேண்டும் என்றில்லாமல் சமுதாயத்துப் பெருமக்கள் அவர்களாகவே இந்த அமைதி வழியை விதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்; அதற்குக் காவல் துறை கண்டிப்பாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும்; அதைப் போல காவல்துறைக்கும் அவர்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்ற செய்தியை இந்தக் கட்டடத் திறப்பு விழாவின்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

## ஆறும் உடையவன் அரசருள் ஏறு!

காவல்துறை ஒரு நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானது என்பதைத் தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக் காட்டினார். வள்ளுவரின் குறளில் அரசன் தலைசிறந்தவனாக இருக்கிறான் என்றால், அவன் எந்த நிலையிலே இருந்தால் அரசர்களில் தலையான

முதலமைச்சர் கலைஞரின் ஆணையின் படி கிராமப்புற மாணவர்களுக்கு, பொறியியல் கல்லூரிகளில் இந்த ஆண்டு முதல் 15% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதைப்போன்றே வேளாண்மை உட்பட அனைத்துத்தொழில்பட்டப்படிப்புகளிலும் கிராமப்புற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு வழங்கப்படுமென முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மருத்துவம், பல் மருத்துவம் இவற்றோடு வேளாண்மைப் பட்டப்படிப்பிலும், கிராமப்புற மாணவர் களுக்கு அடுத்த கல்வியாண்டில் (1998-99) 15% இடஒதுக்கீடுகள் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

வனாக இருப்பான் என்பதைச் சொல்ல வரும்போது - வள்ளுவர் கூறுகிறார். "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையவன் அரசருள் ஏறு'' என்று குறிப்பிடுகிறார்.

படை, குடி - குடி என்றால் குடிமக்கள், வேறுபொருள் கொள்ளக் கூடாது என்று மாலை நேரத்தில் சில நண்பர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கூழ் - செல்வம் அல்லது உணவு, அமைச்சு, நட்பு, அரண் இந்த ஆறும் உடையவன்தான் அரசர்களிலேயே தலையாயவன் என்றார், வள்ளுவர்.

அன்று அரசர்கள் இருந்தார்கள், இப்போது அரசர்கள் இல்லை; அரசுகள் இருக்கின்றன. அரசுகளிலே தலையாய அரசு என்றால் - இந்த ஆறும் உடைய அரசாக இருக்க வேண்டும். இந்த ஆறில் வள்ளுவர் முதலிலே வைத்திருப்பது படையைத்தான். அந்தக் காலத்திலேயே-2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நாடு வலிமையாக இருக்க வேண்டுமானால், வலிமையாக இருந்தால்தான் பிறகு அங்கே உருவாகின்ற வளத்தைக் காப்பாற்ற முடியும்; அங்கேயிருக்கின்ற மக்களைக் காப்பாற்ற முடியும்; அமைச்சர்கள் உருவாக முடியும். பிறகு அந்த நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் நட்பு உருவாக முடியும்; அரண் காப்பாற்றப்பட முடியும் - இவைகளை எல்லாம் வைத்துத்தான் முதல் நிலையிலே வள்ளுவர் படையை முதலாவதாக வைத்து - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் இந்த ஆறும் உடையவன் அரசருள் ஏறு - என்று குறிப்பிட்டார். அந்தப் படை எப்படி இருக்க வேண்டும் என்பதனை இங்கே எனக்கு முன்னால் பேசிய உள்துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**நான் காவலர்களின் காவலன்:**

காவலர்களிடத்திலே எனக்கு இன்று நேற்றல்ல, நான் காவல்துறைக்கு இன்றைக்குப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் என்ற காரணத்தினால் மாத்திரமல்ல - இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் வராததற்கு முன்பே - காவல்துறை நண்பர்களுக்காக - எதிர்க்கட்சிக்காரனாக இருந்தபோதே வாதாடியவன்; அவர்களுக்காகப் போராடியவன். பொதுவாக எதிர்க்கட்சி என்றால், காவலர்களை எதிர்த்துப் போராடுவார்கள். காவலர்களைக் குறை சொல்வார்கள்; காவலர்கள் மீது பழி சுமத்துவார்கள், காவலர்களைக் குற்றஞ்சாட்டுவார்கள். இது வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்திய நாட்டில் காவலர்கள் என்றாலே ஒரு இழுக்கு, ஒரு இழிமொழி, ஒரு கேவலம், ஒரு ஏளனம், ஒரு எள்ளி நகையாடல் - இப்படித் தூற்றப்பட்ட ஒரு இலாகாவாக இந்த இலாகா இருந்தது உண்டு. இன்றைக்கும் அரசியல் கட்சிகள் பல கட்சிகள் எதற்கெடுத்தாலும் காவல்துறை மீது பழி சுமத்துவதை நாம் பார்த்திருக்கிறோம்.

நான் எதிர்க்கட்சியாக இருந்த அந்த காலத்திலேயே எதிர்க்கட்சி என்கின்ற தகுதியைப் பெறாமல் எதிர்க் கட்சிகளிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் இருந்த அந்தக் காலத்திலேயே - குறிப்பாக 1960களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இந்த இயக்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில், மக்களிடத்திலே சில கொள்கைகளைப் பரப்புவதற்காக எழுதி நடித்த நாடகங்களில் ஒரு நாடகம் உதயசூரியன் என்ற நாடகம். அந்த நாடகத்திலே பல காட்சிகளில் நான் காவல்துறை நண்பர்களுக்காக வாதாடியிருக்கிறேன். காவல்துறையில் இருக்கின்ற நண்பர்கள், காவலர்கள் - அதிகாரிகள் கூட அல்ல, சாதாரண நிலையிலே இருக்கின்ற கான்ஸ்டபிள் என்று அழைக்கப்படுகின்ற காவலர்கள் எந்த அளவிற்குத் தங்களுடைய வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருந்தது என்பதையெல்லாம் அந்த நாடகத்திலே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

அலுத்துச் சலித்து இரவு 11 மணிக்கோ 12 மணிக்கோ காவலர் இல்லத்திற்கு வருவார். வந்து சாப்பிட ஏதாவது இருக்கிறதா என்பார். என்ன இருக்கிறது என்று சொல்லிவிட்டு, - பழைய சாதம்தான் இருக்கிறது என்று - பழைய சாதத்தைப் பிழிந்து ஒரு தட்டிலே வைத்து - இதுதான் என்று துணைவியார் காட்டுவார். பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு, கணவன்-காவலர் தொட்டுக் கொள்ள ஒன்றும் இல்லையா என்பார். "நான்தான் இருக்கிறேன்- வேறு யாரும் இல்லை" என்று அந்த அம்மாள் வேடிக்கையாகச் சொல்வார். ஆனால், எவ்வளவு வேதனையான கருத்தை வேடிக்கையாக அந்த நாடகத்திலே நான் புகுத்தினேன் என்பது அதைத் தடை செய்த பிறகுதான் மற்றவர்களுக்கெல்லாம் தெரிந்தது.

அதிலே ஒரு பாடல்கூட எழுதியிருந்தேன். அப்போதெல்லாம் காவல்துறையிலே காவலர்களுக்கு 75 ரூபாய், 80 ரூபாய்தான் மாதச் சம்பளம். அதை வைத்து - காவலரின் துணைவியார் தன் குழந்தையைத் தாலாட்டுவதைப் போலவும் - அப்படித் தாலாட்டுகின்ற நேரத்தில் பாடுவதைப் போலவும் அந்தப் பாட்டை எழுதியிருந்தேன்.

நானே எழுதி, நானே நடித்த நாடகம் உதயசூரியன். அந்தப் பாட்டில் "போலீஸ் வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு உன்னைப் போல நாலு வந்து பிறந்து விட்டால் காவி உடை வேண்டுமடா, கமண்டலமும் தேவையடா, போலீஸ்காரனுக்குப் புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்"- என்று அவள் பாடுவாள். இப்படிப் பாடப்பட்ட - தாலாட்டு அடங்கிய அந்த நாடகம் அந்தக் காலத்து ஆட்சியிலே - எந்த ஆட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை. 1967க்கு முன்பிருந்த ஆட்சியிலே தடை செய்யப்பட்டது. உதயசூரியன் நாடகத்திற்குத் தடை! நாடகத்தை மேடையிலே நடிப்பதற்கு மாத்திரம் தடை இல்லை. உதய சூரியன் நாடகப் புத்தகத்திற்கே தடை போடப்பட்டது. 1962ஆம் ஆண்டு நான் தஞ்சைத் தொகுதியிலே வெற்றி பெற்று சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் துணைத் தலைவனாக அமர்ந்திருந்தபோது இதைச் சொல்லி, இந்த நாடகத்தை ஏன் தடை செய்ய வேண்டுமென்று அன்றைய முதலமைச்சரை நான் கேட்டேன். அவர் சொன்னார், "நீங்கள் போலீஸ்காரர்களைத் தூண்டிவிடுகிறீர்கள். அதனால்தான் அந்த நாடகத்தைத் தடை செய்தோம்" என்று சொன்னார். எது தூண்டுதல்

என்று கேட்டுவிட்டு நான் எழுதிய அதே தாலாட்டுப் பாடலைச் சட்டசபையில் ஒரு முறை பாடிக்காட்டி, இதில் தடை செய்வதற்கு என்ன இருக்கிறது என்று கேட்டு - தடை செய்யப்பட்ட அந்தப் பாட்டைச் சட்டமன்றப் பதிவேட்டிலே எப்படியோ அன்றைக்குப் பதிவு செய்தேன். இது ஒரு நிகழ்ச்சி. ஆனால், தடைசெய்யப்பட்ட நாடகம், பிறகு 1967இல் அண்ணா தலைமையிலே ஆட்சி அமைந்து, அதற்குப் பிறகுதான் தடை நீக்கப்பட்டது.



**காவலர்களுக்காக அவர்தம் குறை களைய முதன் முதல் போலீஸ் கமிஷன்:**

இதைச் சொல்வதற்குக் காரணம் பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, 69-இல் அண்ணா அவர்களின் மறைவிற்கு பிறகு நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதன்முதல் செய்த பணி-கோபாலசாமி அய்யங்கார் ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு காவல் துறைக்காக ஒரு தனி கமிஷன் நியமித்தது என்றால், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

இந்தியாவில் ஒரு மாநில அரசு போலீஸ் கமிஷன் நியமித்தது என்று அதுவரையில் சரித்திரமே கிடையாது. 1969க்கு பிறகுதான் போலீஸ் கமிஷன் அமைத்து, அதனுடைய பரிந்துரைகளைப் பெற்று நிறைவேற்றியதும் நான் பொறுப்பிலே இருந்தபோதுதான். அதற்கு முன்பு 75 ரூபாய், 80 ரூபாய் என்று மாதாந்திரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த காவலர்கள் அந்தக் கமிஷனின் பரிந்துரைக்குப் பிறகுதான், மாதம் 200 ரூபாய், 250 ரூபாய் என்கின்ற அளவிற்கு ஊதியம் பெறுகின்ற நிலையை எய்தினார்கள். இன்று அந்த ஊதியம் அதிக அளவிற்கு உயர்ந்து போயிருக்கின்றது.

அதற்குப் பிறகும் கூட 1989-90ஆம் ஆண்டுகளில் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகுதான் மீண்டும் ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றியதும் கழக ஆட்சிதான்.

**உங்கள் நண்பன்:**

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் காவல்துறை பற்றி ஏற்கெனவே ஒரு படம் "உங்கள் நண்பன்" என்று எடுக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். என்றைக்கும் காவல்துறை எங்கள் நண்பனாகத்தான் இருந்திருக்கின்றது; இருக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வோடுதான் நான் இதைச் சொல்கிறேன்.

**தேவைகளைத் தெரிந்து கொள்ள ஆய்வு:**

இப்போது கூட உள்துறைச் செயலாளர் குறிப்பிட்டதைப் போல - காவல்துறையின் தலைவர் பொறுப்பை திரு. சர்மா அவர்கள் ஏற்றுக் கொண்டதும், அவரை நான் அழைத்துப் பேசியபோது, அவருக்கு விடுத்த வேண்டுகோள் - அதை அவர் ஆணையாக எடுத்துக் கொள்ளலாம் - ஆணையிட்டு எனக்குப் பழக்கமில்லை - இருக்கின்ற பதவியின் காரணமாக நான் விடுக்கின்ற வேண்டுகோள், ஆணையாக மாறக்கூடும். நான் விடுத்த வேண்டுகோள் ஒவ்வொரு காவல்துறையின் குடியிருப்புகளுக்கும் சென்று ஒவ்வொரு நகரத்திலும் - எல்லா மாவட்டங்களிலும் உள்ள காவல்துறையினரின் குடியிருப்புகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எல்லா இடங்களுக்கும் நீங்கள் செல்ல முடியாவிட்டாலும், ஆங்காங்கு இருக்கின்ற மாவட்டக் காவல்துறை அதிகாரிகள் மூலமாக அந்த ஆய்வை நடத்தச்சொல்லி அவர்களுடைய தேவைகளையெல்லாம் உடனடியாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.


அவர்களுடைய கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாகத் தனியாக அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்ற அந்த ஏற்பாடு அவர்களுக்குத் தேவை என்று சொன்னபோது - மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களின் துணையோடு அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

**தாராளமான நிதி - ஏராளமான திட்டங்கள்:**

முழுமையாக அது இன்னும் நிறை வேற்றப்படவில்லை என்றாலும் கூட, நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவதெல்லாம் உள்துறைச் செயலாளரே சொன்னார். தாராளமாக நிதி வழங்கப்படுகிறது, ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, அதற்காக எங்களிடம் பணம் அதிகம் இருக்கிறது. ஆனால் பணிகளைத்தான் விரைவாகச் செய்ய முடியவில்லை என்பதைச் சூசகமாக அவர் இங்கே எடுத்துச் சொன்னார். பணிகளை நீங்கள் விரைவாக முடிக்க முடிக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும், நாட்டைக் காப்பாற்றுகின்ற - சமுதாயத்தைக் காப்பாற்று கின்ற - மக்களைக் காப்பாற்றுகின்ற - மக்களுடைய உயிர் உடைமைகளைக் காப்பாற்றுகின்ற - முதல் சேவகனாக இருக்கின்ற காவல்துறைக்கு எவ்வளவு செலவழிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கின்றது. அவர்களுடைய நன்மை களுக்காக எவ்வளவும் செலவழிக்க இந்த அரசினிடத்தில் எந்தத் திட்டங்களையும் தரலாம் என்பதை எடுத்துக்கூறி - இந்தக் காவல் நிலையத்தைத் திறந்து வைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியுற்று, நான் இந்த அளவில் விடைபெறுகிறேன். ★

**(சென்னை சாஸ்திரிநகர் காவல் நிலையப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து 14-12-97 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை)**

# வாசகர் இதயம்





மனித உரிமைக் கழகம் துவக்கவிழாவில் பல அரிய சரித்திரப் புதுமைகளை எடுத்துக்காட்டி, கலைஞர் ஆற்றிய உரையை வெளியிட்டிருந்தீர்கள்; அதைப்படிக்க மனதிற்கு இதமாக இருந்தது.

- தென்றல் டி.எஸ்.சேகர், தென்கடப்பந்தாங்கல்

கவிஞர் ஈரோடு தமிழன்பனின் 'சிந்தனைச் சிறகுகள்' கவிதை அற்புதம்; அருமை!

-செ.சரவணபாண்டியன், கொத்தாளி

சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பற்றிய கட்டுரைகளை, அவரவர் படத்துடன் வெளியிடுவது மிகவும் சிறப்பாக உள்ளது.

- மு.சிவகுமார், நெடுவயல்

கவிஞர் இளந்தேவன் எழுதிய 'அள்ளித்தந்த வெள்ளித் தாரகை' கவிதை சிறந்த புதுக்கருத்துகள் நிறைந்ததாக இருந்தது.

- பாவலர் இடிமுரசார், சென்னை-14

மனித உரிமை குறித்த முதல்வரின் முத்தான உரையை வெளியிட்ட 'தமிழரசு'க்கு நல்வாழ்த்து.

- கி.சுவாமிநாதன், ஈச்சங்கோட்டை

சுதந்திர இந்தியாவின் ஐம்பதாண்டு நினைவுக் காணிக்கையாக 'மக்கள் சாசனம்' வெளியிட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணை, இந்தியத் துணைக் கண்டத்திற்கே நல்லதோர் முன் மாதிரி.

-பி.ஏ.வதூத், மேட்டுப்பாளையம்


புயல் எப்படி உருவாகிறது என்பது போன்ற அரிய செய்திகளையெல்லாம் உள்ளடக்கிய 'புயல்' கட்டுரை அச்சிட்டமைக்குப் பாராட்டு.

- மு.வேதபுரி, கோட்டுப்பாக்கம்

# 2,400 ஆண்டுகட்கு முன்பே கடல்வணிகம் மேற்கொண்ட முகவை மாவட்ட முதுநகரம்

# அழகன்குளம்

மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட ஒரு தீபகற்பமாக விளங்கும் நம் இந்திய நாட்டின், கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளின் கடலோரங்களில் பண்டைக் காலந்தொட்டே பல துறைமுகப் பட்டினங்கள் அமைந்திருந்தன என்பதற்கான சான்று ஆதாரங்கள் நிறையக் கிடைத்து வருகின்றன. கடற்கரையையொட்டிய மாநிலமான நம் தமிழ்நாட்டில், வங்காள விரிகுடா கடற்பகுதியினையொட்டிப் பல துறைமுகங்கள் அமைந்துள்ளன. கிறித்து பிறப்பதற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டின் சில துறைமுகங்கள் மேற்றிசை மற்றும் கீழ்த்திசை நாடுகளோடும் கடல் வாணிகம் கொண்டிருந்தன என்பது மேல்நாட்டுப் பயணிகளின் குறிப்பிலிருந்தும், தமிழகம் மற்றும் எகிப்து, தாய்லாந்து, ஜாவா, சுமத்ரா, மியான்மர் போன்ற நாடுகளிலிருந்து கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகளிலிருந்தும் தெரியவருகின்றது.



## அழகன்குளத் துறைமுகம்

பண்டைத் தமிழகத்தில் மேற்குக் கடற்கரையில் முசிறி என்ற துறைமுகமும், கிழக்குக் கடற்கரையில் காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, கொற்கை போன்ற துறைமுகங்களும் சிறந்து விளங்கியிருக்கின்றன. இந்நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் இன்றைய புதுச்சேரி மாநிலத்தில் அரிக்கமேடு என்ற இடத்தில் நிலஅகழாய்வு மேற்கொண்டதன் மூலம் அரிக்கமேடு மிகச்சிறந்த வாணிகத்தலமாக விளங்கி இருந்திருக்கிறது என்பதும், அரிக்கமேட்டில் ரோமாபுரி நாட்டின் வணிகர்கள் தங்கி இருந்திருக்கிறார்கள் என்பதும் அங்கு கிடைத்துள்ள தொல்பொருட்கள் மூலம் தெரிய வந்துள்ளது. அதேபோன்று, காவிரிப்பூம்பட்டினத்தில் வெளிநாட்டினர் குடியிருப்பு இருந்ததுவும் உள்நாடு மற்றும் பல வெளிநாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியது என்பதுவும் தொல்பொருட்கள் மற்றும் சங்க கால இலக்கியங்களிலிருந்தும், கல்வெட்டுகள் மூலமும் தெரிய வருகிறது.

இராமநாதபுரத்திற்கருகில் வைகை ஆற்றுக்கழிமுகத்தில் அமைந்திருந்த பண்டைய அழகன்குளத்துறைமுகம் மேற்கண்ட இரண்டு துறைமுகங்களுக்கு எவ்வகையினும் குறைவுடையதன்று, என்பதனை அகழ்வாய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

## இலக்கியச் சான்றுகள்

சங்க காலத்தில், இப்பகுதியில் மருங்கூர்ப்பட்டினம் என்னும் துறைமுகம் இருந்திருக்கிறது. அவ்வூர் இருந்த இடத்தில்தான் இன்றைய அழகன்குளம் அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களான அகநானூறு, நற்றிணை, மதுரைக் காஞ்சி ஆகிய இலக்கியங்களின் வாயிலாக மருங்கூர்ப்பட்டினத்தைப் பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகிறது.

*விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்*
*இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து*
*எல்லுமிழ் ஆவணம் - நக்கீரர் : அகம் : 227*

*அகலங் காடி யசைநிழற் குவித்த*
*பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை*
*தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்*
*மருங்கூர்ப் பட்டினத்து - நக்கீரர் : நற்றிணை : 258*

என மருங்கூர்ப்பட்டினத்தையும், அதன் அமைப்பையும் சங்க நூல்கள் விவரிக்கின்றன. இம்மருங்கூரின் மேற்கே ஊணூர் என்னும் ஊர் இருந்தது. அவ்வூர் மதிலரண் உடையதாக இருந்தது.

*கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்*
*விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்*
*இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினம் -*
*அகம் : 227*

இவ் ஊணூரை நெல் வயல்கள் சூழ்ந்து இருந்தன.

*முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்*
*பழம்பல் நெல்லின் ஊணூர் - அகம் : 220*

வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட கால்நடை இழப்பு களுக்கு,மாடு ஒன்றுக்கு ரூ.5,000 வீதமும், கிடாரிக்கன்று ஒன்றுக்கு ரூ.3,000 வீதமும் மற்றும் ஆடு ஒன்றுக்கு ரூ.1,000 வீதமும், இத்தகு பாதிப்புக்குள்ளான 191 பேர்களுக்கு இதுவரையில் ரூ.74.30 இலட்சம் **கலைஞரின்** ஆணையின்படி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மருங்கூரும் ஊணூரும் சேர்ந்து நெல்லூர் அல்லது சாலியூர் என்று பெயர் பெற்றிருந்தது என்பதும், கப்பல்கள் இத்துறைமுகத்தில் தங்கியிருந்த காட்சி வெள்ளத்தை முற்றுகையிடும் மலைபோல் காட்சியளித்தது என்பதும் மதுரைக் காஞ்சியால் புலப்படும்.

*. . . . . பெருநாவாய்*
*மழைமுற்றிய மலைபுரையத்*
*துறைமுற்றிய துளங்கிருக்கைத்*
*தெண்கடற் குண்டகழித்*
*சீர்சான்ற உயர்நெல்லின்*
*ஊர்கொண்ட உயர்கொற்றவ - மதுரைக்காஞ்சி*
*(83-83)*

நெல் என்பது சாலி எனவும் வழங்கப்படுதலால் நெல்லூர் சாலியூர் என வழங்கி இருத்தல் கூடும். எனவே தாலமி என்னும் கிரேக்க அறிஞர் கூறியுள்ள சாலூர் (SALOUR) இந்தச் சாலியூரே எனக் கருத வாய்ப்புள்ளது.

பிற்காலத்தில் நெல்லூர் சிறப்பு மங்கி, பெரியபட்டினம் சிறப்புப் பெற்றது. சீனர்கள் பெரியபட்டினத்தைத் 'தா பட்டனம்' என்று அழைத்திருக்கிறார்கள். 'தா' என்றால் சீன மொழியில் 'பெரிய' என்று பொருள்.

**தகவல் கிடைத்த விதம்:**

1984-ஆம் ஆண்டு, அழகன்குளத்தைச் சார்ந்த கிராம அலுவலர் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு நேரில் வந்து, தம்மிடம் சில பண்டைய காசுகள் இருக்கிறது என்று தெரிவித்தார். அக்காசுகள் அனைத்தும் தாம் வாழும் ஊராகிய அழகன்குளத்தில் உள்ள கோட்டைமேடு என்ற இடத்திலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும் என்றும் குறிப்பிட்டார். அவருடைய கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இத்துறை அங்கு மேற்பரப்பு ஆய்வு செய்தபோது பல அரிய தொல்பொருட்கள் இருப்பது தெரிய வந்தது.

**முதற்கட்ட அகழாய்வு:**

1986-87ஆம் ஆண்டில் முதன்முதலில் இத்துறையினர் முறையான அகழாய்வை அங்கு மேற்கொண்டார்கள். ஏ.ஜி.எம்.1, ஏ.ஜி.எம்.2 ஆகிய குழிகள் அவ்வூரில் உள்ள கோட்டை மேட்டில் தோண்டப் பெற்றன. இக்கோட்டைமேடு இவ்வூரில் அமைந்துள்ள சாலையின் வடக்குப் பக்கத்தில் உள்ளது. அந்த அகழாய்வின் போது உட்பகுதியில் வட்டமாகப் புள்ளிகள் பொறிக்கப்பெற்றுக் காணப்பெறும் ரௌலெட்டெட் பானை ஓடு என்ற ஒருவகையான பானை ஓடுகள் மிகுந்த அளவில் இங்கு கிடைத்தன. மேலும் சங்க காலத்தையும் மற்றும் பெருங்கற்காலத்தையும் சார்ந்த கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் நிறையக் கிடைத்தன. இந்த அகழாய்வு மூலம் இந்தப் பகுதியில் இரண்டு கால கட்டங்களில் மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதும், முதல் காலகட்டம் கி.மு.400 முதல் கி.பி.100 வரையிலான காலகட்டத்தைச் சார்ந்தது என்றும், இரண்டாம் காலகட்டம் கி.பி.100 முதல் கி.பி.500 வரையிலான கால கட்டத்தினைச் சார்ந்தது எனவும் அறிய முடிகிறது. முதல் கால கட்டத்தில் பெருமளவில் கருப்பு சிவப்பு பானை ஓடுகள் கிடைத்தன. இரண்டாம் கால காட்டத்தில் உட்பகுதியில் வட்டமாகப் புள்ளி பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், ரோமானிய நாட்டு மதுக்குடுவைகளும், கோரைப்பாய் வேலைப்பாடு பெற்ற பானையோடுகளும், சிறிய கிண்ணங்களின் உட்பகுதியில் மீன், மயில், புறா போன்ற உருவங்கள் பதிக்கப்பெற்ற (Stamped) பானை ஓடுகளும், அரெட்டைன் என்று கூறப்படும் வெளிநாட்டுப் பானை வகை ஓடுகளும், வட இந்தியாவில் ஆட்சி செய்த மோரியரின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த கருப்பு வண்ண வழவழப்பான ஓடுகளும், மட்கலத்தின் அடிப்பகுதியில் உட்புறத்தில் நடுவில் குமிழ் காணப்படும் ஒரு வகை பானையோடுகளும் (Knobbed ware) மற்றும் கலத்தின் உட்பகுதியில் இரு வளைகோடுகளுக்கிடையில் இலை வடிவங்கள் காணப்பெறும் ஓடுகளும் பெருமளவில் கிடைத்துள்ளன. ஒரு பானை ஓட்டின் உட்பகுதியில் குதிரைவீரன் உருவம் செதுக்கப்பட்டிருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. இம்முதற்கட்ட ஆய்வில் ரோமானியக் காசு ஒன்று கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்காசு கி.பி.4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வாலன்டைன் மன்னனால் வெளியிடப் பெற்றதாகும். மேலும் எலும்பினால் செய்யப்பட்ட வேலைப்பாடமைந்த சீப்பின் பகுதியொன்றும், பானையோட்டால் உருவாக்கப்பெற்ற அறுகோண வடிவிலான மோதிரம் ஒன்றும் கிடைத்துள்ளன.


முதல் கட்ட அகழாய்வு மூலமாகக் கிடைத்த கரித்துண்டுகளைச் சேகரித்து ஆமதாபாத்தில் உள்ள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி கார்பன் சி14 என்ற முறையில் ஆய்வு செய்தபோது, இற்றைக்கு 2,360 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

**இரண்டாம் கட்ட அகழாய்வு:**

1990-91ஆம் ஆண்டு இத்துறையினால் இப்பகுதியில் இரண்டம் கட்ட அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழ்வின்போது நான்கு குழிகள் அகழப்பட்டன. இக்குழிகளில் மேலும் அரிய பல தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. குறிப்பாகப் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், அரப்பா நாகரிகத்தில் கிடைக்கின்ற களிமண் தகடுகளில் காணப்படும் உருவங்களில் ஒன்றினையொத்த வகையிலான உருவம் பொறிக்கப்பெற்ற பகடைக்காய் ஒன்று கிடைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இப்பகடைக்காய் ரௌலெட்டெட் பானை ஓட்டின் விளிம்பிலிருந்து செய்யப்பட்டதாகும். ஒரு பக்கம் குறியீடு ஏதுமின்றியும், மற்ற மூன்று பக்கங்களில் குறியீடுகள் கொண்டதாகவும்

காணப்படுகின்றது. இக்குறியீடு அச்சுக் குத்தப் பட்ட காசுகளிலும் காணப்படுகிறது.

இந்த அகழாய்வின்போது, சங்ககாலத்துப் பாண்டியர்களால் வெளியிடப்பட்ட யானை உருவம் பொறித்த செப்புக் காசு ஒன்றும் கிடைத்துள்ளது. இக்காசின் காலம் சற்றேறக்குறைய கி.மு.350 முதல் 320 ஆக இருக்குமென்று கருதப்படுகிறது. இக்காசின் ஒரு பக்கத்தின்கீழ் யானை உருவமும் மேற்பகுதியில் எண் மங்கலச்சின்னங்களும், மறுபக்கத்தில் மீன் உருவமும் காணப்படுகின்றன.



**மூன்றாம் கட்ட அகழாய்வு:**

1993-94ஆம் ஆண்டில் மூன்றாம் கட்ட அகழாய்வின்போது சில அரிய தொல் பொருட்கள், விலை உயர்ந்த கல்மணி வகைகள், சங்கு வளையல் துண்டுகள், பண்டைத்தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், குறிப்பாக அலங்கரிக்கப்பட்ட பண்டைத்தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஒன்றும் கிடைத்துள்ளன. மதுக் குடுவையின் கூம்பு வடிவில் உள்ள அடிப்பகுதி மற்றும் கைப்பகுதி ஆகியனவும் ரௌலெட்டெட் பானை ஓடுகளும் நிறையக் கிடைத்துள்ளன.

**நான்காம் கட்ட அகழாய்வு**

1995-96ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பெற்ற அகழாய்வு மூலம் சங்க காலப் பானை ஓடு என்று கருதப்படும் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும், காளை உருவம் பொறிக்கப்பெற்ற சங்ககாலப்பாண்டியர் காசும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு பானை ஓட்டில் அச்சு வார்க்கும் வகையில் குதிரை உருவம் குடைந்திருப்பது காணமுடிந்தது. குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் மிகுந்த அளவில் கிடைக்கப்பெற்றன. ஒரு பெண், குழந்தையை இடுப்பில் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள சுடுமண் உருவம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தின் கலையழகைக் காண்கையில் கிரேக்கக் கலைப்பாணியைச் சார்ந்ததாக இருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.

புறப்பகுதியில் கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட ஓடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உலக அளவில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இப்பானை ஓட்டின் மீது காணப்படும் கப்பல் உருவம், ரோமானிய நாட்டுக் கப்பல் உருவங்களையொத்ததாக உள்ளது என மேலைநாட்டு அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இதன் மூலம் மேல் நாட்டோடு அழகன்குளம் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு மறுக்க முடியாத உண்மையாகிறது.

**ஐந்தாம் கட்ட அகழாய்வு**

1997 ஆம் ஆண்டு அழகன் குளத்தில் ஆறு குழிகள் தோண்டப்பெற்றன. அவற்றிலிருந்தும் பல அரிய தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்றன. குறிப்பாக ஏ.ஜி.எம்.10 என்ற குழியிலிருந்து நந்த அரசர்கள் காலத்து அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிக்காசு ஒன்றும் (கி.மு.4 ஆம் நூற்றாண்டு) எண் 12ஆம் குழியிலிருந்து, சங்க காலப் பாண்டியர் காலச் சதுரக் காசு ஒன்றும் குழிகளின் எண்கள் 11, 12, 13, 14-லிருந்து ரோமானியக்காசுகளும் குறிப்பிட்ட அளவில் கிடைத்திருக்கின்றன. ரோமானியக் காசுகள் அனைத்தும் மிகவும் சிதைந்த நிலைகளில் காணப்படுகின்றன. அக்காசுகளில் ஏழு மட்டும் அடையாளம் காணமுடிந்தது. அவைபாவன:-

1. கிளோரியா ரோம நொரம் (கி.பி.392-395) நான்கு காசுகள்
2. கன்கார்டியா அகஸ் (கி.பி.395-405) ஒரு காசு
3. சால்வாஸ் ரிபப்ளிகா (கி.பி.402-408) ஒரு காசு
4. ஆர்கேடியஸ் (கி.பி.395-405) ஒரு காசு

குழி எண் 10-லிருந்து பண்டைக் காலத்தில் அழகன்குளத்தில் ஓடிய சிறு கால்வாய்ப்பகுதி ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குழி எண் 11-ல் வீட்டின் கூரையினைத் தாங்கு வதற்காகத் தூண்கள் நடுவதற்கு ஏற்ற வகையில் தோண்டப்பட்ட குழிகள் (போஸ்ட் ஹோல்ஸ்) சில கண்டறியப்பட்டன. மேலும் வீட்டின் தரைப்பகுதியும் காண முடிந்தது.

இவ்வாண்டு அகழாய்வின்போது சிவப்பு வண்ண பானையோட்டில் ஒரு ஓடத்தின் உருவம் வரையப் பட்டிருப்பது காணமுடிந்தது. இதுவும், அழகன்குளம் வெளிநாடுகளோடு கடல் வழியாகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதற்குத் துணைபுரிகிறது. மேலும் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், அச்சில் பதிக்கப் பெறுவதற்காகக் குடையப் பெற்ற காளையுருவத்தோடு கூடிய பானையோடு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கவையாகும். ஒரு பானை ஓட்டின் புறப் பகுதியில் யானை ஒன்று செடியைத் தும்பிக்கையால் வளைத்து உண்ண முயல்வது போன்று உருவம் பொறிக்கப்பெற்று இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு கைப்பிடியுடன் காணப்பெறும் இரும்பு வாள் ஒன்றும் கிடைத்துள்ளது. மேலும் இருபக்க முனைகள் தடித்தும் நடுப்பகுதி மெலிந்தும் காணப்பெறும் இரு செப்புக்கம்பிகள் கிடைத்துள்ளன. இவை நூற்கப்பட்ட நூலைச் சுற்றி

வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம். அவற்றில் ஒன்று 12.50 செ.மீட்டர் நீளத்திலும் மற்றொன்று 10.30 செ.மீட்டர் நீளத்திலும் காணப்படுகின்றன.

**புலனாகும் உண்மை**

மேற்காணும் ஐந்து கால கட்டங்களில் நடத்தப்பெற்ற அகழாய்வுகளிலிருந்து, அழகன்குளம் இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மிகச் சிறப்பான துறைமுகமாக விளங்கியுள்ளது என்பதும், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய பிற துறைமுகங்களோடு ஒப்பிடத்தக்க அளவிற்குச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்பதும், இங்கும் ரோமானியக் குடியிருப்பு இருந்திருக்கிறது என்பதும் தெரிய வந்திருக்கின்றது. மேலும் இங்கு கிடைத்திருக்கின்ற பண்டைத் தமிழ் எழுத்துக்களில் காணும் வாசகங்களைப் படித்துப் பார்க்கையில் ஈழத்தோடு தமிழகம் தொடர்பு கொண்டிருந்தது என்பதும், ஈழத்துத் துறைமுகங்களில் சிறந்து விளங்கிய மாந்தை என்ற துறைமுகமும், அழகன்குளத் துறைமுகமும் நெருக்கமான தொடர்பு கொண்டு திகழ்ந்திருக்கிறது என்பதும் புலனாகிறது. கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரையில் இத்துறைமுகம் செல்வச்செழிப்போடு மேற்றிசை மற்றும் கீழ்த்திசை நாடுகளோடு வணிக உறவும் பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிலங்கியிருக்கிறது என்பதும் தெளிவாகியுள்ளது. இவ்வகழாய்வினை, அழகன்குளத்தில் மேற்கொள்வதற்கு, முதலமைச்சர் **கலைஞர்** அவர்களும், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் **தமிழ்க்குடிமகன்** அவர்களும் உற்றுழி உதவி, நல்லோசனை வழங்கியமை குறிப்பிடத்தகுந்ததாகும்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# வனவிலங்குகள் பாதுகாப்பில் தமிழகம்

***வனவிலங்குகள்-சரணாலயங்கள்***


*தமிழக வனங்கள், வளம் மிகுந்த உயிரினப் பரவல்களை அதிகம் கொண்டுள்ளன. மாநில வனங்களின் மொத்தப் பரப்பளவில், 12.6 விழுக்காட்டில், 5 தேசியப் பூங்காக்கள், 6 வன உயிரினச் சரணாலயங்கள், 9 பறவைகள் சரணாலயங்கள், வன உயிரினப் பாதுகாப்புப் பகுதிகளாக அரசால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 1½ ஆண்டுகளில் மட்டும் இவ்வகைக்கென ரூ.289.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன.*

*இவ்வகையான, பாதுகாக்கப்பட்ட பகுதிகளை 25 விழுக்காடாக உயர்த்த அரசினால் முடிவெடுக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுதுள்ளவற்றில், களக்காடு-சிங்கவால் குரங்கு, முண்டந்துறை-புலிகள் சரணாலயம், வேடந்தாங்கல், மூன்றடைப்பு போன்ற அரிய பறவைகளின் சரணாலயங்கள், முதுமலை யானை, மான்கள் பாதுகாப்பு அமைப்பு போன்றவை குறிப்பிடத்தகுந்தவையாகும்.*

***அண்ணா உயிரியல் பூங்கா***

*சென்னையின் புறநகர்ப் பகுதியான வண்டலூரில் சிறுகுன்றைப் பின்னணியாகக் கொண்டு மரங்களடர்ந்த சோலையினூடே இயற்கைச் சூழலில், 510 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதுதான் 'அண்ணா உயிரியல் பூங்கா'வாகும். ஆசியாவிலேயே மிகப்பெரிய அளிவலான 'மிருகக் காட்சி சாலை'யாக விளங்கும், இவ்வுயிரியல் பூங்கா, அன்றாடம் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது என்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இங்குள்ள அரிய உயிர்ப்பிராணிகள், பறவைகள் ஆகியவைகளுக்கென்று தனித்தனி இடங்கள் இருப்பினும், அவைகள் ஏனைய மிருகக்காட்சி சாலைகளைப் போன்று குறுகிய இடங்களில் அடைத்து வைக்கப்படாமல், தாராளமான குறிப்பிட்ட எல்லைச் சுற்றளவுக்குள் செடி, கொடி, மரங்களிடையே சுதந்திரமாக உலவி வருவதைக் காணும் பொழுது, வனங்களில் சுதந்திரமாக உலவும் மிருகங்களைக் கண்ணுறுவது போன்ற உணர்வினைப் பார்ப்பவர்கள் நெஞ்சங்களில் பதியவைப்பதாக உள்ளது.*

*(வனப் பகுதியில், பூனையைப் போல் சாதுவாக உலாவரும் புலியை வண்டலூர் 'அண்ணா உயிரியல் பூங்காவின் ஒரு சுதந்திரப் பிரஜையாக' கடைசி அட்டையில் காண்கிறோம்.)*



## "மனிதனுக்கு மனிதன், உயர்வு - தாழ்வு கூடாது வேறுபாடு கூடாது - பகைமை கூடாது".

### - மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் உரை

தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் அனைவரிடத்திலேயும் சென்று சேர்ந்தாகவேண்டிய மிக முக்கியமான உணர்வை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலேயும் உருவாக்குவதற்காக - அனைவருமாகச் சேர்ந்து அப்படிப்பட்ட உணர்வை நாட்டு மக்களுக்குப் புலப்படுத்துவதற்காக இப்படிப்பட்ட மத நல்லிணக்க நாளினை ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஏற்பாடு செய்யுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிறப்பான நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்துள்ளார். மத நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகின்ற இன்றைய தினம் - மனிதநேயம் போற்றப்படுகிற மனித உரிமை நாளாக உலகமெல்லாம் கொண்டாடப்படுகிறது.

அது நமக்கொரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. மத நல்லிணக்கம் என்பது மனிதநேய அடிப்படையில் தரப்பட வேண்டியது. மனிதநேயம் தழைப்பதற்கு மதம் எந்தவொரு காரணத்தினாலேயும் இடையூறாக இருக்கக்கூடாது, இடையூறாக ஆக்கப்படக்கூடாது என்ற அந்த நோக்கத்திலேதான் அனைத்து சமயத் தலைவர்கள், அனைத்து சார்புத் தலைவர்கள் அனைவரும் இங்கே கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள்.

### ஆண்டவன் யார்?

உண்மையாகவே, தமிழ்நாடு மதநல்லிணக்கத்திற்கு ஒரு நல்ல சூழ்நிலையைப் பெற்றுள்ள நாடு. தமிழ்மொழி அந்தப் பரந்த பண்பாட்டை நீண்ட காலமாக வளர்த்த ஒரு மொழி. சமயம், மதம் என்பதெல்லாம் அக உணர்வே தவிர புறத்தோற்றத்தில் அவைகளைக் கருதி, மாறுபாடு கொள்ள இடமில்லை என்று உணர்ந்தவர்கள் தமிழ் ஞானிகள், தமிழறிஞர்கள், திருவள்ளுவரைப் போன்றவர்கள். இன்னும் சொல்லப்போனால் புறக்கோலத்தாலேயே பெரிய மாறுபாட்டை வளர்க்கிற அந்த மனப்பான்மை நியாயமல்ல என்பதைத்தான் நம்முடைய மதுரை ஆதீனம் அவர்கள் கடைசியாகப் பாடியிருந்த பாட்டில், ஆண்டவன் எந்த மதம் என்ற கேள்வி கேட்டு மனிதன் எவன் நல்லவனாக இருக்கிறானோ, நல்ல உணர்வு இருக்கிறதோ, அதனைச் சார்ந்திருக்கிறவன்தான் ஆண்டவன் என்ற கருத்தைப் பாடிக்காட்டி உணர்வூட்டினார்கள்.

மதம் தனி மனிதனுடைய அக உணர்வை வெளிப்படுவதற்காகத்தான் நீண்டகாலமாக உலகம் முழுவதும் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. ஆதி மனிதனின் வாழ்நாளிலேகூட நாலு பேர் சேர்ந்து வாழ்வதற்காகத்தான் மதம் தோன்றியிருக்கிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவதற்குத்தான் ஒரு மதம் தோன்றியது. மதங்கள் பரவலாகத் தோன்றி ஒன்றுக்கொன்று போட்டிகள் உருவான காலத்திலேதான் பல்வேறு நிலைகளில், பல்வேறு நாடுகளில் மதப் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆக இன்றைக்கு இருபதாவது நூற்றாண்டிலே மதம் என்பது எண்ணம். அந்த எண்ணம் நல்லெண்ணமாக

*மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்களும், மாண்புமிகு மத்திய தொழிலமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும், மாண்புமிகு மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. டி.ஆர்.பாலு அவர்களும், மாண்புமிகு மின்சாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களும், பவள விழாக்காணும் மாண்புமிகு கல்வி அமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் அவரது துணைவியார் திருமதி. சாந்தகுமாரி அன்பழகன் அவர்களுக்கும் மாலையணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.*



இருக்குமேயானால் அதைவிட உயர்ந்தது வேறொன்றும் கிடையாது.

எனவே, அந்த அக உணர்வு நல்லுணர்வாக இருக்கவேண்டிய நிலையில் சாதாரண மக்களுக்கு இடையில், எளிய மக்களுடைக்கிடையில் பழக்கவழக்கக் காரணமாக அவரவர்கள் தங்களுடைய சார்பு எவ்வளவு வலிவானது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக வேறுசில வாழ்க்கைப் போட்டிகள் காரணமாக - அல்லது எதிர்பாராத வகையில் தனிப்பட்ட நபருக்கு, இன்னொரு தனிப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நபருக்கு ஏற்பட்ட வேறுபாடு காரணமாக, மோதுதல் காரணமாக, மதவாரியாக, சாதிக் கலவரமாக, இன்னும் கடுமையான முறையில் மனிதநேயத்தை அழித்தொழிக்கிற காரியமாக ஆக்குவதைத் தடுப்பதற்காகத்தான், அவைகள் முறையல்ல என்ற உணர்வு அனைவர்மனதிலும் ஏற்படுவதற்காகத்தான். மனிதன் மனிதனை அழிக்க உரிமை பெற்றவன் அல்ல என்று எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஏற்றுக்கொண்ட முடிவு**

அந்த முறையில் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட அனைவரும் அவரவர் கண்ணோட்டத்திலேயிருந்து கருத்துக்களை விளக்குகிற முறையில் வேறுபட்டு இருந்தாலும்கூட, மொத்தமாக இந்த முடிவை மனதார ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதிலே மாறுபட்டவர்களே இல்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய பேராயர் அவர்கள் சொன்னார் - மற்றவர்கள் என்னிடத்திலே உரையாடுகிற போது சொன்னார்கள். இந்தப் பொது நோக்கத்திற்கு உடன்படாதவர்கள் வெளியே வரமாட்டார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சியிலே கூட கலந்துகொள்ளமாட்டார்கள் என்று சொன்னார்கள். வெளிப்படையாக அவர்கள் அறிவிக்க மாட்டார்கள். அறிவித்து இருந்தாலும் தாங்கள் யார் என்று உலகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்ப மாட்டார்கள். மறைந்திருந்துதான் தீதான காரியத்திலே ஈடுபடுவார்கள் என்பதை என்னிடத்திலே சொன்னார்கள். அந்தத் தீமையை அகற்றுவதுகூட அரசு சில உடனடி நடவடிக்கை எடுத்து, உரிய கவனம் செலுத்தி, திறமையான நடவடிக்கைகளின் மூலம் கண்டு பிடிக்க முயற்சிக்கலாம் என்றாலும்கூட மறைவாக நடைபெறுகிற அக்கிரமங்களைத்தடுத்து நிறுத்துகின்ற ஆற்றல் சமுதாயத்திற்குத்தான் உண்டே தவிர, ஒரு அரசாங் கத்திற்கு அவ்வளவு எளிதாகக் கிடைக்காது.

ஒரு கூட்டம் வன்முறையில் ஈடுபட்டால் காவல்துறை தாங்களும் அதற்கு ஈடுகொடுத்து, தாங்களும் திரும்ப அவர்களைத் தாக்கி, தேவையானால் துப்பாக்கி சூடு நடத்தி, அந்த இடத்திலே அதனைத் தடுத்துவிட முடியும். ஆனால் வன்முறை தேவை என்று கருதுகிற மனப்பான்மையோ, நாம் மறைமுகமாக வன்முறையைச் செய்து விடலாம் என்று நம்புகிற எண்ணமோ, நாம் இந்த வன்முறையில் ஈடுபடுகிற காரணத்தால் நம்முடைய மதம் பாதுகாக்கப்படுகிறது, நம்முடைய சாதியினுடைய உரிமை பாதுகாக்கப்படுகிறது என்று கருதுகிற ஒரு தவறான கண்ணோட்டமோ இருக்குமானால் அந்த எண்ணத்தை யெல்லாம் மெல்ல அழித்தாகவேண்டும்.

**நாட்டு நிலைமை**

குறிப்பாகச் சொன்னால் - ஏசுநாதர் அவரைச் சிலுவையிலே அறைகிறபோது கூட, அந்தச் சிலுவையிலே அறைந்து தான் அந்த துயரத்திற்கு, துன்பத்திற்கு ஆளானாலும் கூட, பார்ப்பவர்கள் எல்லாம் கண்ணீர் மல்கினாலும்கூட, "இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் - ஆண்டவனே அவர்களை மன்னித்துவிடு'' என்று கேட்பதுபோன்ற பெரிய மனம் நமக்கு இல்லாவிட்டாலும் கூட, அந்த அறியாமையைப் புலப்படுத்துகிற கடமை நமக்கு இருக்கிறது.

நபிகள் நாயகம் அவர்கள்-இஸ்லாம் என்ற அந்தச் சமயநெறியை மக்களிடத்திலே எடுத்துவைக்கிறபோதுகூட, இறுதியாக, போராட்டத்தைத் தவிர, வேறு வழியே இல்லையென்றதால் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு, தன்னுடைய நியாயத்தை நிலைநாட்டினார். வன்முறை இருபக்கமும் தீட்டப்பட்ட ஒரு கூரிய வாள். அறிவைத் தீட்டுவதற்கு மாறாகக் கத்தியைத் தீட்டுவது மதியீனம். இன்னும் ஒரு வகையிலே சொல்லப்போனால் ஓட்டு முறையிலே அடையக்கூடிய நன்மையைவிட வேட்டு முறையிலே நன்மைகளை அடையவே முடியாது.

மதுரையிலே கூட வைத்தியநாத அய்யர் அவர்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் தங்களுடைய வீட்டிலே படிக்கவே வைத்திருந்தார் என்ற செய்தி எனக்குத் தெரியவந்தாலும் கூட அதற்காக அக்ரஹாரத்திலே



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

> வறுமையில் உழல்பவனின் அவலக் குரலைக் கேட்டுச் செவிகளைப் பொத்திக் கொள்ளாதீர்கள்; உங்கள் குரலே உங்களுக்குக் கேட்காமல் போய்விடும்!
> - இயேசுநாதர்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யெல்லாம் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வேலை செய்வார்கள் என்று நானும் எதிர்பார்க்கமுடியாது. நாட்டு நிலைமை அது அல்ல. நல்ல எண்ணங்களுக்கு அவை களெல்லாம் எடுத்துக்காட்டு. அந்த நல்லெண்ணங்களைச் சமூகத்தில் ஒரு ஆர்வத்தோடு வளர்த்தால் தவிர சமூகத்தில் இந்த எண்ணங்களை வெற்றிபெறச் செய்யமுடியாது.

**பின்தங்கிய மக்களுக்கான உரிமைகள் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை**

இங்கே பலர் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். பள்ளிக்கூடத்திலே மாணவர்கள் தங்களுடைய சாதியினைக் குறிப்பிட்டு, தங்களோடு பெயரோடு சாதியைக் குறிப்பிடவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதை நீக்கவேண்டும் என்று சொன்னார்கள். உள்ளபடியே சாதியிலே கலைஞருக்கோ அல்லது எனக்கோ நம்பிக்கை கிடையாது. நாங்கள் செய்யச் சொல்வது எங்களுக்கு மிக எளிது. ஆனால் சிலசமூகத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு கிடைக்கவேண்டிய நியாயமானஉரிமைகளுக்குப் பள்ளிக்கூடத்திலே பதிவு செய்யாவிட்டால், அந்த உரிமையை இழந்துவிடுவோமோ என்று அஞ்சுவார்கள்.

ஏனென்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிற உரிமை இன்னும் கூட முழுவதும் அவர்கள் பெற்றபாடில்லை. மிகமிகப் பின்தங்கிய மக்களுக்காக இருக்கக்கூடிய சலுகைகளைச் முழு அளவுக்குப் பெற்று, அவர்கள் வளர்ந்துவிடவில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு சமூகத்திலே கடைசிக் கட்டத்திலே இருக்கிறார் களென்றால், உரிமை கோருவதற்கு இந்த அடையாளச் சீட்டு தேவைப்படுகிறது. அவர்களே வேண்டாம் என்று சொன்னால் அரசுக்கு எந்த மாறுபாடும் கிடையாது.

**மிகச் சிறந்த அறநெறி**

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கூடாது, வேறுபாடு கூடாது, பகைமை கூடாது. மனிதன், மனிதனாக பற்றுடையவனாக வாழ்வதுதான் மிகச்சிறந்த அறநெறி என்பதை, திருக்குறளை உணர்ந்தவர்கள் எல்லாம் அறிவார்கள். மனிதனை மனிதனாக வாழ்விப்பதற்குப் பிறந்ததுதான் வள்ளுவம். எந்த வேறுபாட்டிற்கும் இடம் தராமல் உயர்ந்த நெறியை மட்டும் உணர்ந்தவர் திருவள்ளுவர். மிக ஆழ்ந்த சைவ சிந்தனையில் உள்ள வடலூர் வள்ளலார் கூட, சைவத்தோடு சேர்ந்து நேரிடையாகச் சீர்த்திருத்தத்தைச் சொல்லாமல் சமரச சுத்த சன்மார்க்கம் என்று சொல்லிச்சீர்த்திருத்தத்தை எடுத்து வைத்தார். ஆழ்ந்த சைவ உணர்வு அவருக்கு இருந்தாலும்,அனைத்துச்சமயத்தாரையும் ஈர்க்கவேண்டும் என்பதற்காக, ஒன்றுபடுத்தவேண்டும் என்பதற்காகச் சமரச சுத்த சன்மார்க்கம் என்று 'அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை' என்று அந்த வழியைக் காட்டி சாதிவேற்றுமை கிடையாது, மதவேற்றுமை கூடாது. சாதியிலே, மதங்களிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அனுமானித்திருக்கிற உலகில் இது அழகல்ல, என்று இறை வழிபாட்டில் நிறைதனைக் கண்ட வடலூர் வள்ளலார் உணர்த்தினார்.

எனவே, இதிலே அதிகக் கருத்து வேறுபாடில்லை. செயல்பாட்டில் எந்தெந்த நல்ல வாய்ப்புகள் அமைகிறதோ அதைப் பொறுத்துச் செயல்படுவோம். தமிழக அரசு இந்த உணர்வை வளர்ப்பதற்கு நிச்சயமாக உரிய கடமைகள் எல்லாம் நிறைவேற்றும். இந்த எண்ணங்களை ஒவ்வொரு பட்டிதொட்டிக்கும் கொண்டுசெல்கிற பொறுப்பை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், ஒவ்வொரு பட்டிதொட்டியிலேயும்ஒரு வட்டத் தலைநகரத்திலே இவ்வளவு தலைவர்கள், இவ்வளவு பெரிய அரங்குகள் இவைகளை வைத்து நடத்தமுடியாது. எனவே இந்த மேடையிலே வீற்றிருக்கிற பெருமக்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்வேன். நீங்கள் ஒவ்வொருவரும் இந்த மேடையிலே இருக்கிற அனைவருக்கும் பிரதிநிதியாக நீங்கள் செல்கிற ஒவ்வொரு இடத்திலேயும் இந்தக் கருத்தரங்கு நடைபெற்ற செய்தியைச் சொல்வது மூலமாகவே இவ்வளவு பேர் ஒன்றாக சொன்னோம். பேராயர் சொன்னார், ஆதீனம் சொன்னார், அய்யணன் அம்பலம் சொன்னார், இன்னும் மற்றவர்கள் பெயர்களெல்லாம் சொல்வது மூலமாகவே பலபேர் வராவிட்டாலும் கூட ஒருவர் சொல்கிற செய்தியில் ஒரு கருத்தரங்கை உருவாக்கிவிட முடியும். அந்த வகையில் இந்தச் செய்திக்கு ஆதரவு தாருங்கள். இதைப் பரவச் செய்யுங்கள். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற உணர்வை வளர்ப்போம்.




# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தாலுக்கா, வீரராகவபுரம் எங்கள் ஊராகும். எங்கள் ஊரில் பகுதி நேர நூலகம் ஒன்று கடந்த மூன்றாண்டு களாக இருந்து வருகிறது. மேற்படி நூலகத்தில் பணிபுரியும் நபர் சரியாகப் பணிக்கு வராமல், நூலகம் யாருக்கும் பயனின்றி பூட்டியே கிடக்கிறது. எனவே நூலகம் சரிவர நடைபெற தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

- க. இரவிச்சந்திரன், வீரராகவபுரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.




தீர்வு :

தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆய்வாளரின் அறிக்கையின்படியும், பொதுமக்களின் புகார் அடிப்படையிலும் வீரராகவபுரம் பகுதிநேர நூலகத்தில் தற்போது பணிபுரிந்து வரும் பகுதிநேர நூலகர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வீரராகவபுரம் பகுதிநேர நூலகத்திற்கு, புதிய பகுதிநேர நூலகரை நியமனம் செய்வதற்குத் தஞ்சாவூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் வழியாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிநேர நூலகத்திற்குப் புதிய பகுதி நேர நூலகர் நியமனம் செய்யப்பட்டவுடன், இப்பகுதி நேர நூலகம் முறையாகச் செயல்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இரா. கண்ணன், எம்.ஏ., பி.எட்.,
பொது நூலக இயக்குநர், சென்னை - 2

பிரச்சினை :

எங்கள் ஊர் விழுப்புரம், செஞ்சி வட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள திருவம்பட்டு என்ற கிராமம் ஆகும். எங்கள் ஊரில் தோராயமாக 4,000 மக்கள் வசிக்கின்றனர். அதில் 1,000 பேர் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள். ஏனைய மக்கள் பிற வகுப்பினர். எங்கள் ஊரில் குடிநீர் வசதிக்காக இரு நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் குழாய் நீர் வசதியானது பெரும்பான்மையினரான, மேல்வகுப்பு மக்களுக்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மக்களுக்குப் பெயரளவில் ஒரு மூலையில் சாலை ஓரத்தில் ஒரே ஒரு குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது, இக்குழாயிலும் நீர்வரத்து பல நேரங்களில் துண்டிக்கப்படுகிறது. எனவே குடிநீர் வசதிக்காகப் பல ஆண்டுகாலமாக நாங்கள் போராடி வருகிறோம். எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும், இங்கு வானொலி அறை உண்டு; ஆனால் பயன்படுத்தப்படுவதில்லை. தொலைக்காட்சி அறை இல்லவே இல்லை. ஒரே ஒரு ஆர்.சி. ஆரம்பப்பள்ளி (கூரை) இடியும் நிலையில் மட்டுமே உள்ளது. எனவே இப்பிரச்சினைகளை எல்லாம் தாங்கள் தீர்த்து வைக்க, தக்க நடவடிக்கை எடுத்து, பயன்கள் எங்களை வந்தடையுமாறு செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

-ஆதிதிராவிட மக்கள், திருவம்பட்டு,
விழுப்புரம் மாவட்டம்

தீர்வு :

1. திருவம்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து காலனிக்குப் பைப் லைன் அமைத்து, இதன்மூலம் குடிநீர் வசதி செய்து தர ஊராட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார்.

2. ஊராட்சி மன்றக் கட்டடம் மின் ஒயரிங் வேலை நடைபெறுகின்றது. மின் ஒயரிங் வேலை முடிவடைநதவுடன் தொலைக்காட்சி ஊராட்சி மன்றக் கட்டடத்தில் வைத்து இயக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

3. ஆர்.சி. ஆரம்பப்பாடசாலையை தனியார் நடத்துவதால் அதன் நிர்வாகியைப் பாடசாலை இடிந்து விழும் நிலையில் உள்ளதை, சரி செய்யக் கோரப்பட்டுள்ளது.

திருவரும்பட்டு ஆதிதிராவிடர் காலனி பொதுமக்களின் குறைகளை ஊராட்சி விரிவாக்க அலுவலர் மூலம் ஊராட்சித் தலைவரை அணுகி குறைகளை நிவர்த்தி செய்ய, தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- வி.வ. அய்யம்பெருமாள்,
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
வல்லம், விழுப்புரம் மாவட்டம்

**பிரச்சினை:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொல்லங்கிணறு கிராமம் எங்கள் ஊராகும். இங்கு இரண்டு அரசு பேருந்து மட்டும் இயங்குகின்றது. இந்த இரண்டு பேருந்தும் ஒரே நேரத்தில் திருநெல்வேலி சென்று விடுகிறது. காலை நேரத்தில் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி செல்வதற்குப் பேருந்து வசதி இல்லை. ஆகவே இரண்டு அரசுப் பேருந்துகளை அதிகமாக இயங்கச் செய்து எங்கள் ஊர் மக்களின் கஷ்டத்தைப் போக்குமாறு தமிழரசை மிகமிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- எம். வீரப்பன், ஊராட்சி மன்றத் தலைவர்,
கொல்லங்கிணறு ஊராட்சி மன்றம்,
தூத்துக்குடி மாவட்டம்.

**தீர்வு :**

கொல்லங்கிணறு கிராமத்திற்கு அரசுப் பேருந்துகள் மூலம் 10 சுற்றுக்களும், தனியார் பேருந்துகள் மூலம் 8 சுற்றுக்களும் இருப்பதுடன் 24.09.97 முதல் கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி செல்வதற்காகக் கூடுதலாக ஒரு பேருந்து மூலம் 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

பொது மேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை கோட்டம் 2)
திருநெல்வேலி.



**பிரச்சினை:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு 57 ஊராட்சிகள் உள்ளடக்கியதாக பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் உள்ளது. அதற்கடுத்தபடியான பெரிய ஊராட்சி கொழப்பலூர் ஆகும். பெரிய கொழப்பலூரில் இருந்து, பெரணமல்லூருக்கு நேரடியான பேருந்து வசதி கிடையாது. இங்குள்ள மக்களும், இதைச் சுற்றியுள்ள ஊராட்சிகளில் வசிக்கும் மக்களும், பெரணமல்லூர் செல்ல, சேத்துப்பட்டு வழியாகத்தான் வரவேண்டியுள்ளது. இதனால் இரட்டிப்புக் கட்டணம் ஆகிறது. மேலும் நேரமும் வீணாகிறது. எனவே, பெரணமல்லூர் சேத்துப் பட்டிற்கு இஞ்சிமேடு, அல்லியந்தல், நாராயண மங்கலம், பெரிய கொழப்பலூர், செம்மாம்பாடி வழியாக பேருந்து வசதி செய்து எங்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- எஸ். பாரி, சந்திரம்பாடி,
திருவண்ணாமலை மாவட்டம்

**தீர்வு :**

திரு. எஸ். பாரி சந்திரம்பாடி கிராமம் அவர்கள் கோரிய கோரிக்கையை ஆய்வு செய்ததில் பெரணமல்லூர் - சேத்துப்பட்டு (வழி) இஞ்சிமேடு, அல்லியந்தல், நாராயணமங்கலம், பெரியகொழப்பலூர், செம்மாம்பாடி வழித் தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். மேலும் இவ்வழித்தடத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளது. மற்றும் பெரிய கொழப்பலூர் கிராமம் பெரண மல்லூருடன் ஏ15 வழித்தடத்தின் மூலம் நேரடியாக தினசரி 4 நடைகள் எனப் பேருந்து வசதி பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தற்போது 1,000 மக்கட்தொகைக்கு மேல் பேருந்து வசதி இல்லாத சாலை வசதியுள்ள கிராமத்திற்கு முன்னுரிமை கொடுத்து, பேருந்து இயக்கப்பட வேண்டியுள்ளதால் கோரிக்கையின்படி தற்போது பேருந்து இயக்கச் சாத்தியமில்லை.

- பொது மேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(விழுப்புரம் கோட்டம் 2)
வேலூர்.

**பிரச்சினை :**


திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் வட்டம் செய்யார் ஊராட்சி ஒன்றியம் கீழ்விண்ணமங்கலம் ஊராட்சியில் உள்ள மேல் மட்ட விண்ணமங்கலம் கிராமம் எங்கள் ஊராகும். இங்கு ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கு அடிப்படை வசதிகளே கிடையாது. இங்குள்ள மக்கள் ஆரணி, செய்யார் சென்று தங்கள் தேவைகளைப்

பூர்த்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குப் போக்குவரத்து வசதியும் இல்லை, எனவே மக்கள் மிகவும் சிரமத்திற்கிடையே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தங்களின் திருக்கரங்களால் டி24 என்ற அரசு பேருந்து ஒன்றைத் தொடங்கி வைத்தார். ஆனால் அது ஓராண்டு காலம் வரை தான் ஓடியது. பிறகு நிறுத்தப்பட்டது. இதைக் குறித்து அதிகாரிகளுக்குப் பல மனுக்கள் அனுப்பியும் எந்தவொரு பலனுமில்லை. எனவே எங்களுக்கு போக்குவரத்து வசதி நகரத்திற்குச் சென்று வரச் செய்து தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

- கிராம மக்கள், மேலமட்டைவண்ண மங்கலம்,
திருவண்ணாமலை மாவட்டம்

**தீர்வு :**

**த**ற்பொழுது மேல்மட்டை விண்ணமங்கலம் கிராமத்திற்கு, செய்யார் சட்டமன்ற உறுப்பினருக்



கான இருவழித்தடப் பேருந்துகளில் ஒரு வழித்தடமான செய்யார்-ஆவணியாபுரம் (வழி) கொர்க்கை, மேல்மட்டை விண்ணமங்கலம், நாவல்பாக்கம், வாழைப்பந்தல் கூட்டுச்சாலை என தினசரி 4 நடைகள் 9.9.97 முதல் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஆரணியிலிருந்து இயக்கப் பட்ட ஏ24 ஆரணி-மேல்மட்டை விண்ணமங்கலம் (வழி) அன்மருதை, ஆவணியாபுரம் கூட்டுச்சாலை என இயங்கிய பேருந்து போதிய பயணிகள் உபயோகமின்றி இயக்கப்பட்டதால், அதனை மாற்றி அன்மருதையிலிருந்து கோனையூர் வரை நீட்டித்து இயக்கப்படுகின்றது. இதனைத் தற்போது மாற்றி இயக்கினால் கோனையூர் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே இதனை மாற்றி இயக்க சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பொதுமேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(விழுப்புரம் கோட்டம் 2)
வேலூர்.

**பிரச்சினை :**

**சி**தம்பரத்திலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் புகழ்பெற்ற தலமான **''திருக்கடையூர்''** உள்ளது. இங்கு **''சஷ்டியப்த பூர்த்தி''** (அறுபதாம் திருமணம்) அதிக அளவில் நடைபெறுவதால் யாத்ரீகர்கள் வருகை அதிகரித்துள்ளது. மேலும் அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் தலமும், முருகப்பெருமான் உவிய ஞானபூமி (திருவிடைச்சுழி) தலமும் அருகருகே அமைந்துள்ளன. நாகப்பட்டினம், காரைக்கால் பகுதியிலிருந்து வரும் அரசு பேருந்துகள் கூட்ட நெரிசலுடன் வருவதால் திருக்கடையூரில் நிற்பதில்லை. இரவுநேரம் கேட்கவே வேண்டாம், திருக்கடையூரிலிருந்து - திருவிடைச்சுழி கோயிலுக்குச் செல்ல வேண்டுமெனில், இரண்டு பஸ்கள் மாற வேண்டும். சிதம்பரம், சீர்காழி பகுதிகளிலிருந்து திருவிடைகழி செல்வது என்பது சாதாரண விஷயமல்ல. அனந்தமங்கலம் தலத்தில் சனிக்கிழமை சிறப்புநாள் என்பதால் நாகை பேருந்துகளிலும் ஏறவே முடியவில்லை. யாத்ரீகர்களின் அவல நிலையைப் போக்க, சீர்காழி - தரங்கம்பாடி இடையே கூடுதலாக இரண்டு நகரப் பேருந்துகள் இயக்க வேண்டும். மேலும் சீர்காழியிலிருந்து திருவிடைக்கழிக்கும் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்க வேண்டும். மயிலாடுதுறையிலிருந்தும் திருவிடைக்கழிக்கு நகரப் பேருந்துகள் இயக்க வேண்டும். சிதம்பரம்-நாகப்பட்டினம் இடையில் ஓடும் பேருந்துகளை தில்லையாடி வழியே செல்லுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வெ. சீனிவாசன, பின்னத்தூர்
சிதம்பரம் வட்டம்.

**தீர்வு :**

**சீ**ர்காழி - பொறையார் தடத்தில் நகரத்தடம் எண். 19 ன் மூலம் 1.1.97 முதல் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. நாகப்பட்டினம் - சிதம்பரம் வழி சீர்காழி பொறையார் தடத்தில் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. சிதம்பரம் - காரைக்கால் (வழி) சீர்காழி - பொறையார் தடத்தில் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

மயிலாடுதுறை திருவிடைக்கழி தடத்தில் நகரத்தடம் எண்.31 மூலம் 8 நடைகளும், நகரத்தடம் எண்.25ன் மூலம் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு ஏற்ப 5.9.97 முதல் மயிலாடுதுறை - பொறையார் (வழி) திருவிடைக்கழி தடத்தில் நகரத்தடம் எண். 23ஏ மூலம் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

தில்லையாடி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமம் ஆகும். தில்லையாடி கிராமம் வழியாக பொறையார் நகரத்தடம் எண்.27/பி இயங்கி வருகின்றது. இப்பேருந்தில் நடைகளில்

திருக்கடையூர் சென்று அங்கிருந்து நாகப்பட்டினம் மற்றும் சீர்காழி, சிதம்பரம் செல்லப் போதிய அளவு பேருந்துகள் இயங்குகின்றன. நேரடிப் பயணிகள் தில்லையாடி வழியாகச் செல்வதை விரும்பமாட்டார்கள் எனவே, கோரியுள்ளவாறு தடம் மாற்றி இயக்க இயலாதநிலை உள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பொது மோலாளர் (இயக்கம்),
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கும்பகோணம் - கோட்டம்1) லிமிடெட்

பிரச்சினை :

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நகராட்சிக்கு உட்பட்ட நான்காம் பகுதி (வார்டு) ஆன டாக்டர் கலைஞர் கருணாநிதி நகரில் சுமார் (கோயில் பதாகை உட்பட) 5000 மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு ஏரிப்பகுதியாக உள்ள இடமாகையால் ஒவ்வொரு வீட்டிலும் கிணறுகள் 40 அடி ஆழம் தோண்டி குடி தண்ணீர் பருகி வருகின்றனர். இருப்பினும் ஏப்ரல் மாதம்முதல்அனைத்துக் கிணறுகளும் வறண்டு விடுகின்றன. மழையை எதிர்பார்த்து அனைத்து மக்களும் தவிக்கின்றனர். ஆதலின் ஏரியின் நடுப்பகுதியில் போர்வெல் கிணறு தோண்டி, கிராமங்களில் உள்ளவாறு பெரிய குடிநீர் தொட்டி அமைத்து, எல்லா மக்களுக்கும் குழாய் மூலம் தண்ணீர் சப்ளை செய்து தந்தால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இவ்வூர் பொதுமக்கள் நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பார்கள் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றை அரசு பணிவுடன் கவனிக்குமா?

சி. சுப்ரமணியம், கோயில் பதாகை
ஆவடி

தீர்வு :

கோவில்பதாகை கலைஞர் நகரில் ஏற்கெனவே உள்ள பொதுக் கிணற்றினை சீர்படுத்தி தூர் வாரி மேற்கொண்டு உறைகிணறு அமைக்கப்பட்டு பொது மக்கள் குடிநீருக்கு பயன்படுத்தும் வண்ணம் ராட்டினம் பொருத்தப்பட்டு தற்போது மக்கள் இதனை பயன்படுத்தி வருகின்றனர்.

இப்போது கிணற்றின் அருகில் உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட யு.பி.எஸ்.பி திட்டத்தின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணி விரைவில் துவக்கப்படவுள்ளது. அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் தெருவிற்கு ஒரு பொதுக் குழாய் அமைக்கப்படவுள்ளது.

ஆவடி நகராட்சிப் பகுதிக்கு விரைவில் கிருஷ்ணா நீர் கொடுக்கப்படவுள்ளது. அச்சமயம் கோவில் பதாகைக் கலைஞர் நகருக்கும் குடிநீர் வழங்கும் நோக்கில் பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பகுதியில் 8 கைப் பம்புகள் உள்ளன. இந்நீரை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

- வ. சக்ரபாணி பி.ஏ.,
ஆணையாளர், ஆவடி நகராட்சி,
ஆவடி, சென்னை - 600 054.

பிரச்சினை :

வேலூர் மாவட்டத்தில் உள்ள பேர்ணாம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த மிட்டாளம் ஊராட்சிக்குட்பட்ட வன்னியநாதபுரம் கிராமத்தில் சுமார் 1500 மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் பல ஆண்டுகளாகக் குடிநீர் வசதி கோரிப் பல மனுக்கள் அனுப்பியும் எவ்வித பலனுமில்லை. எனவே இந்தக் கிராமத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறும், மேலும், இதே ஊராட்சியைச் சேர்ந்த கீழ் மிட்டாளம் காலனி புதுமனை, பழையமனை ஆகிய இரண்டு கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்த்து வைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

- கே.பி. மகேந்திரன், 3வது வார்டு உறுப்பினர்,
குட்டகந்தூர் கிராமம், மிட்டாளம் ஊராட்சி.



தீர்வு :

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மிட்டாளம் ஊராட்சியில் வன்னியநாதபுரம் கிராமத்தில் மூன்று ஆழ்துளைக் கைப்பம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இம்மூன்றில் ஒன்று விசைப்பம்பாக மாற்றும் நோக்கத்தோடு பம்பு அறை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது. விரைவில் பம்பு மோட்டார் மற்றும் பைப்புகள் அமைக்கப்படும்.

கீழ்மிட்டாளம் காலனியில் ஓர் ஆழ்துளைக் கைபம்பு உள்ளது. இது நல்லமுறையில் இயங்கி வருகிறது, மேலும் புதுமனைக் காலனியில் இரண்டு ஆழ்துளைக் கைபம்புகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. பழைய மனைக்குப் பத்தேரி பல்லியில் உள்ள விசை பம்பிலிருந்து பைப்லைன் மூலமாகக் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. இந்த பைப்லைன் புதுமனை வரையிலும் நீட்டிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்எனத் தெரிவிக்கப்படுகிறது.


- திரு. கு. ரங்கசாமி,
வளர்ச்சி அலுவலர், (ஊ), வேலூர் - 9.

# புகையில் களையெடுக்கப் புதிய உத்திகள்

சுற்றுச் சூழல் மாசுத்தன்மையினை அடைந்து வருவதன் காரணியமாக மனிதனின் உடல் நலத்திற்குப் பல்வேறு கேடுகள் விளைவிக்கப்படுகின்றன; உலகளாவிய இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில், வாகனங்கள் வெளியேற்றும் புகை அதிலும் முக்கியமாக டீசல் இயந்திரங்களிலிருந்து வெளியாகும் துகள்களோடு, வெளியாகும் புகை, சுற்றுச் சூழலை அதிகம் மாசு படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. டீசல் இயந்திரப் புகையோடு வெளிவரும் துகள்கள் மாசுத்தன்மையை அதிகம் கொண்டிருக்கின்றன என்பதனாலேயே, இத்துகள்களைக் கட்டுப்படுத்தும் வகையில், கடுமையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், அரசுகளால், கொணரப்பட்டுள்ளன. இத்தகைத்தான மாசுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இவ்வகையில் வெளியேற்றப்படும் புகையிலுள்ள துகள்களைக் களைந்திடும் வண்ணம், எரிபொருளின் தர முன்னேற்றம், அதோடு இயந்திரப் பொறியின் வடிவமைப்புகளை மேம்படுத்துதல் என்ற அடிப்படை நோக்கில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இயந்திரப் பொறியின் சீரான இயக்கத்தை மேன்மைப்படுத்தி, இத்தகு துகள்களின் வெளியேற்றத்தைத் தடுக்க முயற்சிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன; எனினும், எரிபொருள் தர மேன்மை, இயந்திரத் தேய்மானம், அதன் சிதைவு ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், இயந்திரப் பொறியின் சீரான இயக்க நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது அவ்வளவு சாத்தியமானதாக இல்லை. எனவே, வெளியாகும் புகையிலுள்ள துகள்களைக் கட்டுப்படுத்திட, பிறிதொரு முயற்சியாக 'அத்தகு கரித்துகள்களை வெளியேறவிடாமல் அகப்படுத்திடுதலே' இச்சிக்கலுக்கு தீர்வு தரக்கூடிய ஒரு திறன்மிகு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, அகப்படுத்துதல் என்ற இம்முறையினை, செயல்முறையில் பயன்படுத்திட ஏதுவாக உள்ளமைப்புக்குள்ளேயே வடிகட்டும் அமைப்புகளை ஏற்படுத்தி உருவாக்கிடும் வகையில் பல்வேறு சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், நடைமுறையில் அனுகூலமான ஒரு வடிகட்டும் ஊடகத்தைப் பரிந்துரை செய்திடும் வகையில், அவற்றின் அகப்படுத்தும் திறன்கள் பல்வேறு நிலைகளில் சோதனைக்குட்படுத்தப்பட்டு, ஒப்பு நோக்கப்பட்டன. 3.7 கிலோவாட் திறனளிக்கும் நிலையான ஒற்றை உருளை இயந்திரப் பொறியில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆழ்ந்த பரிசோதனை ஆய்விற்குப்பின் துருப்பிடிக்காத எஃகினாலான பல சோதனைக் கருவிகளைச் செருகிடத்தக்க துளை வழிகள் கொண்ட 'பிரிப்பான்' எனும் பாகத்தை உள்ளடக்கிய பரிசோதனை அமைப்பு தயாரிக்கப்பட்டது; எந்திரப் பொறியின் எரிந்த வாயுக்கள் வரும் பாதையுடன் இது இணைக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வடிகட்டிகள் தற்போதைய எந்திரப்பொறியில் எந்தவோர் மாற்றமும் இல்லாமலேயே பயன்படுத்தக்கூடிய வகையில் உறுதிப்பாட்டுடன் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டன. இவ்வகையில், வீரியம் குறைக்கப்பட்ட துகள்களற்ற



புகையினை வெளியேற்ற இயலும் என்றாலும் பொருட் செலவு அதிகமென்பதால் இவ்வகை முறை ஏற்க இயலா நிலையில் ஒதுக்கப்பட்டது.

செராமிக், கண்ணாடிக்கம்பளி, பின்னப்பட்ட வலை ஊடகம், இணைக்கப்பட்ட நுண்திரை வடிகட்டி ஆகிய நான்கு வகையான வடிகட்டிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வெவ்வேறு பளு நிலைகளில், ஒவ்வொரு வடிகட்டியின் வடிகட்டும் திறத்தின் விழுக்காடு மற்றும் வடிகட்டியினால் உண்டாகும் தடையழுத்தம் ஆகியன நுண்ணியமாக ஆராயப்பட்டன. இரட்டை உறைச் செயற்கை இழைப் பைகளின் உதவியினால் வடிகட்டப்படாத கரித்துகள்களின் வெளியீடு முறை கண்டறியப்பட்டது. இத்துகள்களின் மறுஉற்பத்தி மற்றும் திரவமாய்ச் சுருக்கும்முறை ஆகியவற்றை ஆராய, புகை வெளியேறும் குழாயை வெப்பங்கடத்தாததாக மாற்றியும், மாற்றாமலும் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது.



டாக்டர் கே. பாலகுருநாதன்

பளுவற்ற நிலை, 30%, 60% மற்றும் 100% பளு நிலைகளிலும் இயந்திரப் பொறியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நகரக் கூட்டங்களில் நின்று நின்று மெதுவாய் ஊரும் ஊர்திகளில் வடிகட்டிகளின் திறமையைப் பரிசோதிக்கவே பளுவற்ற நிலையில் இயந்திரப் பொறியின் ஆய்வு, தேர்வு செய்யப்பட்டது.

மற்ற வடிகட்டிகளுடன் ஒப்பிடுகையில், இணைக்கப்பட்ட உருளை வடிவ வடிகட்டியே, புகை போகும் குழாய் வெப்பங்கடத்தும் நிலையில், 87% அகப்படுத்தும் அனுகூலமான திறமையைத் தரவல்லது என்பதனைச் சோதனை வெளிப்படுத்தியது. இயந்திரத் தயாரிப்பாளர்களின் குறிப்பீடுகளினடிப்படையில் நோக்கும்பொழுது அதிகப்படியான தடையழுத்தமானது அனுமதிக்கப்படும் அளவிற்குள் இருந்ததோடு இயந்திரப்பொறியின் செயற்பாடு மிகவும் பாதகமாக இருப்பது தெரியவந்தது.

துகள்களை அகப்படுத்துதலுக்கெனச் சோதிக்கப்பட்ட வடிகட்டிகளில், தகுந்தபடியாக இணைக்கப்பட்ட உருளை வடிவ வடிகட்டியே மிகச்சிறந்த திறன் வாய்ந்ததாகவும், குறைந்த பொருட் செலவுடையதாகவும் இருக்குமென்பதனைச் சோதனை ஆய்வுகள் வெளிப்படுத்தின.

தொழில்நுட்பத்தில் எளிமையான மற்றும் மிகுந்த பொருட் செலவில்லாத அதீதத் திறமை வாய்ந்த அகப்படுத்துவான்களை உருவாக்க முடியும் என்பதனைச் சோதனை ஆய்வுகள் வலியுறுத்தின. இவ்வமைப்பானது எந்தவிதக் கட்டுப்பாடு மிக்க வரையறைகளையும் எதிர்கொள்ளத் தகுந்தவாறு செம்மைப் படுத்தப்பட்ட வசதியினை உடையதாகவும் உள்ளது. எதிர்காலத் தேவையையும் நிறைவு செய்யும் நிலையை அடைவதே இப்பணியின் முக்கிய குறிக்கோளாகும். ★

# தமிழ்நாடு மாநில அறிவியல், தொழில்நுட்பக் கவுன்சில் சென்னை - தமிழ்நாடு அறிவியல் பட்டமளிப்பு - 1996-97

தமிழ்நாடு மாநில அறிவியல், தொழில்நுட்பக் கவுன்சிலின், 1996-97ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அறிவியல் பட்டமளிப்பு விழா, அண்மையில், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. **அன்பழகன்** அவர்களால், பல்வேறுதுறைகளில், சிறந்த ஆய்வுகளை மேற்கொண்ட 10 அறிவியலாளர்களுக்கு அறிவியல் பட்டங்கள் வழங்கப்பட்டன.

**விவசாய அறிவியல் - டாக்டர் பி.பிள்ளையார்:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் 1942ல் பிறந்த டாக்டர் பி.பிள்ளையார், பி.எஸ்சி, எம்.எஸ்சி. ஆகிய வேளாண் பட்டங்களை சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இரசாயனப் பொறியியலில் டாக்டர் பட்டமும் பெற்றார். மேலும், உணவு தானியங்களை சேமித்துப் பாதுகாப்பது குறித்து, பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகம், மத்திய அரசின், ஹப்பூர் உணவு மற்றும் வேளாண் ஆய்வு மையம் ஆகியவற்றிலும் சிறப்புப் படிப்புகளை மேற்கொண்டுள்ளார்.

1965ல் இந்திய உணவுக் கழக அலுவலராகப் பொறுப்பேற்ற திரு.பிள்ளையார், உணவு தானியங்களைக் கொள்முதல் செய்தல், சேமித்தல், பதனிடுதல், காயவைத்தல் ஆகியவற்றின் தொழில்நுட்ப கூறுகள் பற்றிய பொறுப்புகளையேற்றுப் பணியாற்றினார். மாடர்ன் ரைஸ் மில், தொழில்நுட்ப முறையில் நிர்மாணித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளில் ஒருங்கிணைந்து பணியாற்றியிருக்கிறார். நெல் அறுவடைக்கு முன், அறுவடைக்குப் பின் போன்ற பல்நிலைகளிலான தொழில் நுட்பஆய்வுகள் ஆகியவற்றினால் திரு.பிள்ளையார், நெல் ஆராய்ச்சியில் தலைசிறந்த வல்லுநராகத் திகழ்ந்தார். நெல் வேகவைத்தல், நெல் தவிட்டின் பயன்பாடு ஆகியவற்றின் மீதான திரு.பிள்ளையாரின் ஆய்வுகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டன. நெல் அறுவடைக்கு முன், அறுவடைக்குப் பின் ஆகியவற்றின் தொழில்நுட்பவியல் பற்றி 5 புத்தகங்கள் எழுதியுள்ளார். திரு.பிள்ளையாரின், 'அறுவடைக்குப்பின் நெல்' என்ற நூல், இவ்வகையில் 'ஒரு சாஸனமாகவும், குறிப்பேடாகவும் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற, பயிற்சி வகுப்புகளில், கருத்தாளராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர்.

நெல் ஆராய்ச்சி மற்றும் அதனைச் சார்ந்த நவீனத் தொழில்நுட்பவியல் ஆய்வுகளில் டாக்டர் பிள்ளையார் அவர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கவுன்சிலின் 1996-97க்கான தமிழ்நாடு வேளாண் அறிவியல் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

**உயிரியல் - டாக்டர் டி.சுப்பிரமணியம்:**

டாக்டர் டி.சுப்பிரமணியம், கன்னியாகுமரி மாவட்டம், இடையன்விளை சக்தி கிராமத்தில் 1941, மார்ச் 3-ம் தேதி பிறந்தார். மதுரை தியாகராசர் கல்லூரியில் விலங்கியலில் எம்.எஸ்சி. பட்டம் பெற்று, சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1970ல் பிஎச்.டி. பட்டம் பெற்றார். 1986ல் சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு டிஎஸ்சி. பட்டம் வழங்கியது. பட்டம் பெற்ற காலத்தில் இருந்தே சென்னைப் பல்கலைக் கழகத்தின் விலங்கியல் துறையில் பணியாற்றி வரும் டாக்டர் டி. சுப்ரமணியம், அத்துறையில் பேராசிரியராக விளங்கி வருகிறார். புதிதாகத் தொடங்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பத் துறையில் ஒருங்கிணைப்பாளராகவும், ஆராய்ச்சித் திட்டங்களின் முதல்வராகவும் கூடுதல் பணியாற்றி வருகிறார்.



பூச்சி இனப்பெருக்கம் மற்றும் கிரஸ்டேசியன் இனப்பெருக்க உயிரியல் ஆகியவற்றில் ஆய்வு நிகழ்த்தி உள்ளார். உயர்வகை முதுகெலும்புப் பிராணிகளில் இதுவரை பயன்படுத்தப் பட்ட நவீன ஆய்வுக் கருவிகளையும் இனப்பெருக்க ஆய்வு முறைகளையும் கிரஸ்டேசியன் ஆய்வு முறைகளுக்குப் பயன்படுத்துவது பேராசிரியர் சுப்ரமணியம் அவர்களின் தனிச்சிறப்புப் பணியாகும்.

130 ஆய்வுக் கட்டுரைகளை டாக்டர் சுப்ரமணியம் வழங்கியிருக்கிறார். மேலும், முதுகெலும்பில்லாத பிராணிகளின் இனப்பெருக்கம் பற்றி 2 நூல்களைப் பதிப்பித்துள்ளார். 30 பி.எச்.டி. ஆய்வாளர் களுக்கும், 40 எம்.பில். ஆய்வாளர்

களுக்கும் ஆய்வின் வழிகாட்டியாய் இருந்துள்ளார். பல்வேறு இந்திய அமைப்புகளும் சர்வதேச அமைப்புகளும் இவரின் ஆய்வுகளுக்கு நிதியளித்துள்ளன. பல்வேறு ஆராய்ச்சிக் குழுக்களிலும் பணியாற்றியுள்ளார். ஸ்வீடனில் உள்ள சர்வதேச அறிவியல் நிறுவனத்தின் ஆலோசகராகவும் உள்ளார்.


முதுகெலும்பில்லாத பிராணிகளின் இனப்பெருக்கம் பற்றி ஆராயும் சர்வதேச அமைப்பின் இந்தியப் பிரிவு நிறுவப்படுவதற்குப் பெரிதும் காரணமாய் இருந்தவர் டாக்டர் சுப்ரமணியம்.

இனப்பெருக்க உயிரியல் துறைக்கு டாக்டர் சுப்ரமணியம் அளித்திருக்கிற குறிப்பிடத்தக்க சேவைக்காக தமிழ்நாடு தொழில்நுட்பக் கவுன்சிலின் 1996-97ம் ஆண்டின் உயிரியல் அறிவியல் துறைக்கான விருது வழங்கப்பட்டது.

**மருத்துவ அறிவியல் - டாக்டர் கே.எம்.செரியன்:**

டாக்டர் கே.எம்.செரியன், 8.3.1942ல், கேரள மாநிலம் காயம் குளத்தில் பிறந்தார். மணிப்பாலிலுள்ள கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., ஆகிய மருத்துவப் பட்டங்களை முறையே 1964 மற்றும் 1968ல் முடித்தார்.

1969ல் டாக்டர் செரியன், வேலூரிலுள்ள கிறிஸ்டியன் மருத்துவக் கல்லூரியில், அறுவை சிகிச்சைப் பாட விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1970-71ல் சிட்னியிலுள்ள செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனை, 1973-74ல் சிட்னியிலுள்ள பிறிதொரு மருத்துவமனையான செயின்ட் வின்சென்ட் ஆகியவற்றில் இதயம், இரத்தக் குழாய் அறுவை சிகிச்சைப் பிரிவில் முதுநிலைப் பதிவாளராகப் பணியாற்றினார். இதே போன்று 1973-74ல் ஆக்லேண்ட் கிரீன்லே, 1974-75ல் நியூஜிலேண்ட் ஆகிய மருத்துவ மனைகளிலும் அறுவைச் சிகிச்சைப் பிரிவில் பணியாற்றியுள்ளார். 1973ல், சிறப்பிற்குரிய இதய அறுவைச் சிகிச்சைக்காக, 'தி ராயல் ஆஸ்ட்ரேலியன் அறுவை சிகிச்சைக் கல்லூரியில்' பெல்லோஷிப் பட்டம் பெற்றார்.




1975ல் சென்னை - பெரம்பூரிலுள்ள தென்னக ரயில்வே மருத்துவமனையில், மருத்துவக் கண்காணிப்பாளராகவும், இதய, இரத்தக்குழாய் அறுவை சிகிச்சைப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றினார். இத்தருணத்தில், இதய அறுவை சிகிச்சையில், நம் நாட்டின் இத்துறையின் தலைசிறந்த அனேக தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தினார். 12 ஆண்டுக்கால இப்பணியில் டாக்டர் செரியன் 3,000க்கு மேற்பட்ட இதய அறுவை சிகிச்சைகளைச் செய்துள்ளார்.

டாக்டர் செரியனின் பேரவாவின் விளைவாக, உலகத் தரத்திற்கேற்ற வசதிகளைக் கொண்ட, முழுமையான, இதயக்காப்பிற்கான மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மற்றும் இதய ரத்தக்குழாய் அறுவை சிகிச்சைப் பிரிவினை 1987ல் சென்னையில் தொடங்கினார். பத்தாண்டுகளுக்குள் இந்நிறுவனத்தில் 10,000க்கு மேற்பட்ட இதய-இரத்தக் குழாய் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் செரியன் 5 இதய மாற்று அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார். மேலும், இவர் இந்திய மற்றும் சர்வதேச இதழ்களில் 25க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் பாடங்களுக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். டாக்டர் செரியன் அநேகக் கௌரவப்பட்டங்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார். 1991ல் இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' பட்டத்தையும் பெற்றுள்ளார். 1990-93 வரை இந்தியக் குடியரசுத் தலைவரின் கௌரவ அறுவைச் சிகிச்சை நிபுணராகப் பணியாற்றியுள்ளார். சர்வதேச இதய அறுவைச் சிகிச்சைச் சங்கத்தின் உறுப்பினராகவும், மாற்று இதய, நுரையீரல் அறுவைச் சிகிச்சைச் சங்கத்தின் உறுப்பினராகவும் டாக்டர் செரியன் உள்ளார். அமெரிக்காவின் மருத்துவவியல் கல்லூரி, லண்டனிலுள்ள மருந்தியலுக்கான ராயல் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராகவும் விளங்குகிறார்.

டாக்டர் செரியனின் இத்தகு பெருமைகளுக்குரிய இதய அறுவைச் சிகிச்சைத் துறைக் கொடைகளை அங்கீகரிக்கும் வண்ணம், 1996-97க்கான, தமிழ்நாடு அறிவியல் விருது டாக்டர் செரியனுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுப்புறச் சூழல் அறிவியல் - டாக்டர் எஸ்.எம்.இராமசாமி:**

டாக்டர் எஸ்.எம்.இராமசாமி 10.9.1948ல் சிவகெங்கை மாவட்டம் ஆவரங்குடியில் பிறந்தார். பி.எஸ்சி (புவியியல்) பட்டத்தை 1969ல் காரைக்குடி அழகப்பாக் கல்லூரியிலும், எம்.எஸ்சி (புவியியல்) பட்டத்தை 1971ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். 1985ல் ஆந்திரப் பல்கலைக்கழகம் வால்டேரில் பிஎச்.டி (டாக்டர்) பட்டத்தைப் பெற்றார்.

டாக்டர் இராமசாமி அவர்கள் சுற்றுச்சூழல் அறிவியலில் அதிலும் குறிப்பாக, செயற்கைக்கோள் புள்ளிவிவர அடிப்படையில், பூமியில் புதைந்துள்ள உலோகங்கள், தாதுக்கள் பற்றிக் கண்டறியும் முறைகளை மேன்மைப் படுத்தியுள்ளார்; இவரது முயற்சி மற்றும் ஆய்வின் பயனாக இந்தியாவின் மேற்குப் பகுதிகளில், உலோகத் தாதுக்களைக் கண்டறியும் பணிகளுக்குப் புதுவடிவம் தரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிலத்தடி நீரோட்டம் பற்றிய இவரது புதிய நுட்பவியல் பயன் புதுமெருகினைப் பெற்றுள்ளது. நிலத்தடி நீர்க் குறியீட்டிலும், நீர்த் தேக்கங்களின் தூர்ப்பெருக்கக் குறைப்பிற்கான, நீர்ப்பிடிப்புச் சுத்திகரிப்பு முறை, புதிய நீர்-நில மேலாண்மை முறைமை ஆகியவற்றின் இவரது ஆய்வுகளும், செயலாக்கங்களும், நிலைத்த பெருமைக்குரியவையாகும்.

இவரது 80 ஆய்வுக் குறிப்புகளும், 60 அறிவியல் கட்டுரைகளும், இந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இதழ்களில் இடம்பெற்றுள்ளன. 2 நடைமுறைத் தொகுப்புகள், ஒரு புத்தகம் ஆகியவற்றிற்கான இதழ்த் தொகுப்புப் பணிகளையும் இவர் மேற்கொண்டுள்ளார். 40க்கும் மேற்பட்ட ஆய்வுத் திட்டங்களை இவர் செயல்முறைப் படுத்தியுள்ளார்.

டாக்டர் ராமசாமி, 1992ல் டேராடூனிலுள்ள 'ரிமோட் சென்ஸிங்' அமைப்பின் தேசிய ரிமோட் சென்ஸிங் பரிசினை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றவராவார். இலங்கை, தாய்லாந்து, ஈரான், சிங்கப்பூர், மலேசியா, போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு, பல்வேறு மாநாடுகள் மற்றும் கருத்தரங்க அமர்வுகளில் பங்கேற்றுள்ளார்.

கடலோர விசித்திரங்கள் குறித்த யுனெஸ்கோ அமைப்பின் சார்பில் உருவாக்கப்படவுள்ள துணை மையம், தெற்காசியாவின் சுற்றுச்சூழல்-புவியியல் குறித்த புதிய தொழில் நுணுக்கவியல், இந்தியாவில் புவியியல் குறித்த அறிவியலமைப்புகளிலும், தலைவர் மற்றும் உறுப்பினர் அடிப்படையில் அங்கம் வகித்து வருகிறார்.

> **செ**ன்னை மாகாணத்தில் பிரிமியர், பிரதமர் என்றழைக்கப்பட்ட சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஏ.எல்.முதலியாரைப் பற்றிச் சொன்னதை நினைவூட்ட விரும்புகிறேன் - ''அவர் ஒரு டார்ச் லைட்'' என்று சொன்னார். அதற்கு விளக்கமும் ராஜாஜி சொன்னார்: ''டார்ச் லைட் என்றால் இன்னொருவரைப் பார்ப்பதற்கு மாத்திரம் பயன்படுத்துவதல்ல; நம்மையே நம்மீது வெளிச்சத்தை அடித்துப் பார்த்துக் கொள்வதற்குப் பயன்படக் கூடியது. எனவே ஏ.எல்.முதலியார் ஒரு 'டார்ச் லைட்'டைப் போன்றவர் என்று மூதறிஞர் ராஜாஜி அவரைப் பாராட்டியிருக்கிறார்.
>
> - ஏ.எல்.முதலியார் சிலை திறப்புவிழாவில் கலைஞர்.

அப்ளைடு ரிமோட் சென்ஸிங் நுட்பவியலின் தீவிரப் பங்களிப்பு, சுற்றுப்புறச் சூழல் மற்றும் புவியியல் அறிவியல் ஆகியவற்றின் பால் அவர்காட்டிய அறிவியல் ஆர்வத்தையும், புதிய கண்டுபிடிப்புக் கொடைகளையும் கௌரவிக்கும் பொருட்டு 1996-97ஆம் ஆண்டுக்குரிய, தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பக் கவுன்சிலின் தமிழ்நாடு அறிவியல் பரிசு டாக்டர் இராமசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பொறியியல் தொழில்நுட்பம் - டாக்டர் கே.ஆர்.பழனிச்சாமி:**

டாக்டர் கே.ஆர். பழனிச்சாமி, 12.6.1945ல் ஈரோடு மாவட்டம் கே.ஜி.வலசு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் தனது பி.எஸ்சி., பி.ஈ.,(மின் பொறியியல்) எம்.எஸ்சி (மின்னணுப்பயன்பாடு), பல்முறை இயந்திரவியல் ஆகிய பட்டங்களைச் சென்னைப் பல்கலை கழகத்தில் பெற்றுள்ளார். 1980 கரக்பூரில் உள்ள, இந்தியத் தொழில் நுட்பப் பயிலகத்தில், கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றி (Control System) ஆய்வு செய்து, பிஎச்.டி (டாக்டர்) பட்டம் பெற்றார்.

கட்டுப்பாடு முறைமைகள் பற்றிய ஆராய்ச்சிகளே இவரால் பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. 70க்கு மேற்பட்ட இவருடைய ஆய்வுக்கட்டுரைகள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பிஎச்.டி. கருத்துரை போன்ற மேற்படிப்புக்கான புத்தகங்களில் இவருடைய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மின்னணு, கணிப்பொறி, தகவல் தொடர்பு குறித்த இவருடைய 100க்கு மேற்பட்ட கட்டுரைகள் தமிழில் வெளிவந்துள்ளன. 60க்கும் மேற்பட்ட பொறியியற் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும், பிஎச்.டி. படிப்பு மேற்கொண்ட 5 கல்வியாளர்களுக்கும் 'கருத்தாளராக' வழிகாட்டிப் பயிற்றுவித்துள்ளார். 1972, 1975, 1976, 1985 ஆகிய ஆண்டுகளில் டிஜிட்டல் (பி) மீட்டர், டிஜிட்டல் ஸ்டாப் வாட்ச், எஸ்.டி.டி. பேரிங் எக்யூப்மெண்ட், தானியங்கி ரயில்வே கேட், 1991 இமேஜ் சாப்ட்வேர் போன்றவை மாநில அளவிலான பரிசுகளை வென்றுள்ளன. 'கணிப்பொறி அறிவியல் கல்வி' எனும் ஆங்கில நூலும், 'கணிப்பொறி அமைப்பும் - இயக்கமும், பயன்பாடுகளும்' என்ற தமிழ்ப்புத்தகமும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

டாக்டர் பழனிச்சாமி தற்பொழுது, நெல்லை பொறியியற் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகிறார். ஆப்டிமல் கண்ட்ரோல் சிஸ்டம் என்ற இவரது ஆய்வுக் கட்டுரைகளுக்காக காரக்பூர் இந்தியத் தொழில்நுட்பப் பயிலகத்தின் வெள்ளிவிழா ஆய்வுப் பரிசினையும் சிங்கிள் டேர்ம் வால்ஸ் சிஸ்டம் என்ற ஆய்வுக் கட்டுரைக்கான, சிறந்த ஆய்வுக் கட்டுரைப் பரிசினையும் இவர் வென்றுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மின் மற்றும் மின்னணுப் பொறியாளர்கள் போன்ற கற்றறிவு மட்டும் தொழில் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றுள்ள இவர், இந்தியத் தொழில் நுட்பக் கல்விசார் அமைப்பின் உறுப்பினராக உள்ள பெருமையையும் பெற்றவராவார்.

டாக்டர் பழனிச்சாமி அவர்களின் 'கட்டுப்பாடு முறைமை' குறித்த சீர்மிகு ஆய்வுக்கொடைகளைக் கௌரவிக்கும் வகையில் 1996-97க்கான பொறியியல்- தொழில்நுட்பவியல் துறை சார்ந்த தமிழ்நாடு அறிவியல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

**மருத்துவ அறிவியல் - டாக்டர் பிலிப் அலோசியஸ் தாமஸ்:**

10.7.1955 அன்று டாக்டர் பிலிப் அலோசியஸ் தாமஸ், திருவனந்தபுரத்தில் பிறந்தார். 1981ல் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயின்று எம்.பி.பி.எஸ். பட்டமும், 1984ல், மருத்துவ நுண்ணுயிரியல் பாடத்தில் எம்.டி.பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். 1988ல் உயிரியல் தொழில் நுட்பத்தின் தேசிய அமைப்பால் தேர்வு செய்யப்பட்டு, 1991ல், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பத்தில் பிஎச்.டி. பட்டம் பெற்றார்.

டாக்டர் தாமஸ் 1990-92ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இராஜாமுத்தையா மருத்துவக் கல்லூரியில் உயிரியல் தொழில் நுட்பப் பேராசிரியராகவும், 1992லிருந்து திருச்சி ஜோசப் கண் மருத்துவமனையில், கண் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராகவும் பணியாற்றினார்.

ஒரு குறிப்பிட்ட பருவத்தில் பொதுவாகப் பரவும் கண் தொற்று நோய் குறித்தும், அவைகளை முன் கூட்டியே கட்டுப் படுத்தும் முறைகள் பற்றியும் முறையான ஆய்வுகள் டாக்டர் தாமஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கண்புரை தொற்றுநோய் குறித்த இவரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கனவாகும். கண் பார்வை சம்மந்தமான தொற்று நோய்களின் சிகிச்சை குறித்த இவரது ஆய்வுகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றன. பேக்டீரியா, பங்கல் மூலம் தொற்றும் கண் நோய்கள் குறித்த இவரது ஆய்வுகள் குறிப்பிடத்தகுந்தன. இவைகளைப் பற்றி அமெரிக்க, பிரிட்டனின் விஞ்ஞானிகளுடன் டாக்டர் தாமஸ் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். பெல்ஜியம், பிரான்ஸ், இஸ்ரேல், காத்மாண்டு, நேபாளம் ஆகிய நாடுகளின் அழைப்பின் பேரில் இத்தகு ஆய்வுகள் குறித்த கருத்துரைகள் டாக்டர் தாமஸ் அவர்களால் நிகழ்த்தப்பட்டன. அமெரிக்க

“எதிர்த்தரப்பிலே அமர்ந்திருக்கின்ற காரணத்தால் எதிர்த்துத்தான் பேசவேண்டும். எதிர்த்துப் பேசினால்தான் எதிர்த்தரப்பு என்றில்லாமல் எதிர்த்தரப்பிலே அமர்ந்தும் ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக - உதாரணமாக திகழ்ந்தவர் **ஏ.எல்.முதலியார்**’’ என்று முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஏ.எல். முதலியார் சிலை திறப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், பிரான்ஸ், சிங்கப்பூர், சவுதி அரேபியா, இஸ்லேல், நேபாளம் ஆகிய நாடுகளில் நடைபெற்ற கண்நோய் பற்றிய மாநாடுகளில் டாக்டர் தாமஸ் ஆய்வறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார். தேசிய மருத்துவ அறிவியல் நிறுவனம், இந்திய உயிரியல் மருந்துவ விஞ்ஞான அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினராகவும் டாக்டர் தாமஸ் அங்கம் வகிக்கிறார். டாக்டர் தாமஸ் 8 புத்தகங்களை எழுதியுள்ளார்; 50 ஆய்வுக் கட்டுரைகளின் இணை ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்; அனேக சர்வதேச இதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார். எம்.எஸ். (கண்ணியல்) மாணவர்கள், பிஎச்.டி. பயிலுவோர்க்குக் கருத்தாளராகவும், வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார். கண்விழி ரணசிகிச்சையில் டாக்டர் தாமஸ் அவர்களின் குறிப்பிடத்தகுந்த கொடைகளைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மாநில அறிவியல் - தொழில்நுட்பக் கவுன்சிலின் 1996-97ஆம் ஆண்டிற்கான மருத்துவ அறிவியலுக்குரிய தமிழ்நாடு அறிவியல் விருது வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

***இயற்பியல் அறிவியல் - டாக்டர் வி.இராஜேந்திரன்:***

டாக்டர் வி.இராஜேந்திரன், 2.11.1962ல் நாமக்கல் மாவட்டம் இடையபட்டியில் பிறந்தார். 1984ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. (இயற்பியல்) பட்டம் பெற்றார். 1986ல் எம்.எஸ்சி. (இயற்பியல்) 1988ல் எம்.ஃபில்.,1992ல் பிஎச்.டி. பட்டங்களை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

டாக்டர் இராஜேந்திரன், சிவகாசி மெப்கோ ஸ்லங் பொறியியற் கல்லூரியில், உதவிப் பேராசிரியராகவும், இயற்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். டாக்டர் இராஜேந்திரன் ‘அல்ட்ராசோனிக்’ குறித்து ஆய்வு செய்து, இக்கல்லூரியில் உள்நாட்டு அல்ட்ராப் பாகங்களைக் கொண்டு சோனிக் ஆய்வு சோதனைக் கூடம் ஒன்றினை நிறுவினார்.

துவக்கத்தில் அல்ட்ரா சோனிக் அளவீடுகளின் அடிப்படையில், மாலிக்குலர் இன்டராக்ஷன் பற்றி ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்பொருள் அறிவியல், இயற்பியலின் நிலைத்த தன்மை குறித்த ஆய்வுகளுக்கு மாறினார். தற்பொழுது, இடைக்கடத்திகள், அதிவெப்பமிகு கடத்திகளான கண்ணாடி, கண்ணாடி ஜெராமிக்ஸ், குறைந்த-உயர்ந்தபட்சக் கண்ணாடி வெப்பக்கடத்திகளை அல்ட்ர சோனிக் முறையைப் பயன்படுத்தி செய்பொருள் இயல்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

டாக்டர் இராஜேந்திரன் அவர்களின் 36 ஆய்வுக் குறிப்புகள், தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இயற்பியல் பயன் குறித்து 2 புத்தகங்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. ஒரு தேசிய கருத்தரங்கத்திற்கென நடவடிக்கைகளின் விவாதப் பொருள் பற்றிய குறிப்புகளைத் தயாரித்துள்ளார். கல்பாக்கம் அணுமின்நிலையம், தேசிய மற்றும் சர்வதேச சோதனைக் கூடங்களில் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளார். டாக்டர் இராஜேந்திரன், தற்பொழுது, ‘குறைந்த-உயரளவு சீதோஷ்ண பெர்ரோ எலக்டிரிக் முறை குறித்து அல்ட்ராசானிக் அடிப்படையிலான கண்டுபிடிப்புகளை மேற்கொண்டுள்ளார்.

இவர், டெல்லியிலுள்ள சி.எஸ்.ஐ.ஆர்.இதழ்களின் விமர்சகராகவும் திகழ்கிறார்; இந்திய ‘அல்ட்ரா சோனிக்ஸ்’ நிறுவனத்தின், செயற்குழு உறுப்பினராகவும், கல்கத்தாவிலுள்ள ‘அறிவியல் வளர்ப்புக்கழகம்’ என்ற அமைப்பிற்கு அடிக்கடி சென்று வரும் வாய்ப்பினையும் பெற்றவராவார். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கவுன்சிலின், சென்றுவரும் அறிவியல் அறிஞர் பெல்லோசிப்-டெல்லியிலுள்ள தேசிய அறிவியல் அகாடமி, ஒலி சம்மந்தமான, இந்திய மற்றும் அமெரிக்க அமைப்புகளின் ஆயுட்கால உறுப்பினராகவும் திகழ்கிறார்.

டாக்டர் இராஜேந்திரன் இவர்களின் இத்தகு ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகளுக்களை அங்கீகரிக்கும் வகையில், அமெரிக்க நாட்டின், மார்கியூஸ் எனும், ‘யார்? எவர்?’ என்ற புத்தகத்தின் 1996ஆம் ஆண்டு, 14வது பதிப்பிலும், அமெரிக்காவின் 20ஆம் நூற்றாண்டின் போற்றுதலுக்குரிய ‘யார்? எவர்?’ 1997 பதிப்பிலும், 1995ஆம் ஆண்டில் இந்திய-அரேபியர் ‘யார்? எவர்?’ பதிப்பிலும் இவருடைய பெயர் இடம்பெற்றுள்ளது.

டாக்டர் இராஜேந்திரன் அவர்களின், அல்ட்ராசோனிக்ஸ் தலைப்பில் அவரது ஆராய்ச்சிகளையும் பாராட்டுதற்குரிய பணிகளையும் அங்கீகரிக்கும் வகையில், 1996-97க்கான இயற்பியல் அறிவியலுக்கான, தமிழ்நாடு அறிவியலறிஞர் விருது தமிழ்நாடு அறிவியல்-தொழில்நுட்ப கவுன்சிலின் சார்பாக வழங்கப்பட்டது.

***சமூக அறிவியல் - டாக்டர் வி.கருப்பையன்:***

டாக்டர் வி.கருப்பையன், 17.6.1941ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம், பூதலூரில் பிறந்தார். 1974ல் இராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.(சமூகவியல்) 1996ல், எம்.பில்., பிஎச்.டி., ஆகிய பட்டங்களையும், 1987ல் இலங்கை நாட்டின் ‘மெடிசினல் ஆல்டர்நேடிவா’வின் டி.எஸ்சி. பட்டத்தையும் பெற்றவராவார்.

டாக்டர் கருப்பையன், 28 ஆண்டுக்கால, சமூகவியலில் மேல்நிலைப் பட்டங்களுக்குக் கற்பிப்பவராகவும், இத்துறையில் அனுபவமிக்கவராகவும் விளங்குகிறார். மருத்துவ-சமூக விரிவாக்கப் பணி அலுவலராக, சென்னை பொது மருத்துவமனை, காஞ்சிபுரம் பொது மருத்துவமனை ஆகியவைகளில் பணியாற்றியுள்ளார். காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையத்தில், சமூகவியல் அறிவியல் அறிஞராகவும் பணியாற்றியிருக்கிறார். தற்பொழுது, சென்னைப் பல்கலைக் கழகத்தில், மானுடவியல்-சமூகவியலில், பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றிவருகிறார். 15 பிஎச்.டி., 10 எம்.பில். மாணவர்களின் வழிகாட்டியாகவும் தேர்வாளராகவும் பணியாற்றியுள்ளார். இத்தாலி, மலேசியா, டென்மார்க், இங்கிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு பாடவியல் தொடர்பான பயணங்களை மேற்கொண்டுள்ளார். 40க்கு மேற்பட்ட, இந்திய-சர்வதேசக் கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார்.

'உறவியல்-நாகரிகம்' என்ற புத்தகமும், 25க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் டாக்டர் கருப்பையன் அவர்களால் எழுதப்பட்டுள்ளன.

தமிழகக் கிராமங்களின், சாதி-வர்க்க நிலை, பொருளாதார-அரசியல் நிலை குறித்த இவருடைய ஆய்வுகள் இந்திய-சர்வதேசக் கல்வியாளர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

இவருடைய அண்மை ஆய்வான பெண் சிசுவதை-வழிவழியாகச் சமுதாயத்தில் ஊடுருவியிருக்கின்ற இம்முறை பற்றிய கருத்துக்கள், இத்தாலியில் பெரண்டோ நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் விவாதப் பொருளாக ஏற்கப்பட்டது குறிப்பிடத்தகுந்தது. சமூகப் பழக்க வழக்கங்கள், சாதி, மலை சாதிப் பண்பாடு போன்றவைகள் இவரின் சமூகவியல் ஆய்வுப் பணிகளாகும். சமூகவியல் தொடர்பான புத்தகங்களின் விமர்சகராகவும் இவர் விளங்குகிறார். தென்னிந்திய மலைவாழ் மக்களின் மருந்தியல் குறித்து இவர் மிகுந்த ஈடுபாடு காட்டிவருகிறார்.

இந்தியா - ஆந்த்ரோபோலோலாஜிக்கல் அமைப்பு, இந்திய அரசியலறிவியல் அசோஸியேசன், தியோசாபிக்கல் சொசைட்டி, இந்தியப் பொதுநிர்வாக அமைப்பு ஆகியவற்றில் உறுப்பினராகவும் இவர்பணியாற்றுகிறார்.

சமூகவியலில், இத்தகு குறிப்பிடத்தகுந்த கொடையினை வழங்கிய டாக்டர் கருப்பையன் அவர்களுக்கு, 1996-97ன், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கவுன்சிலின், சமூக அறிவியலுக்கான 'அறிவியலறிஞர்' விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

### கால்நடை அறிவியல் - டாக்டர் வி.புருஷோத்தமன்:

4.8.1954ல், டாக்டர் வி.புருஷோத்தமன், சென்னையில் பிறந்தார். சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயின்ற இவர், 1975ல் பி.வி.எஸ்சி. பட்டமும், 1980ல் எம்.வி.எஸ்சி. பட்டமும், 1990ல் பிஎச்.டி. பட்டமும் பெற்றுள்ளார். பெங்களூரிலுள்ள, இந்திய அறிவியல் நிறுவனத்திலும், டோக்கியோவிலுள்ள உயிரியல்-அறிவியல் நிறுவனத்திலும் மார்பில்லி கிருமிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உயிரியல் நுண்ணியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். மனித இனம், கால்நடை, கோழியினங்களைத் தாக்கும் 'கிருமிநோய்' பற்றிய ஆய்வினை முதலில் மேற்கொண்டார். டைபாய்டு நோயைப் பரப்பும் கிருமிகள் பற்றிய இவரது ஆய்வு, இந்தியாவில் இத்துறையில் முதன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பர்சல் எனும் கோழியினைத் தொற்றும் நோய் குறித்து, நாமக்கல் பகுதியில் இவர் மேற்கொண்ட ஆய்வு குறிப்பிடத்தகுந்ததாகும்.

ராணிக்கெய்ட் என்னும் நோயினைக் கண்டறிய, இரத்தத்தை வடிகட்டிப் பேப்பரில் சேகரித்து அறியும் இவரது ஆய்வுமுறை முன்னோடியானதாகும். டி.என்.ஏ. சோதனை மூலம் ஈகோலை, சால்மோனேல்லா என்பனவற்றைக் கண்டுபிடிக்கும் சிரமமான பரிசோதனையும் இவரால் முறைப்படுத்தப்பட்டது.

பெங்களூரிலுள்ள, இந்திய அறிவியல் நிறுவனத்தின் அறிவியலறிஞர்களின் ஒத்துழைப்போடு, வெள்ளாடுகளுக்குக் காலரா எவ்வாறு உண்டாகிப் பரவுகிறது? அதை எவ்விதம் தடுப்பது? என்பது பற்றி டாக்டர் புருஷோத்தமன் ஆய்வுகள் மேற்கொண்டார். ரிண்டர் பெஸ்ட் என்ற செம்மறி, வெள்ளாடுகளைத் தாக்கும் இந்நோயைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு அரசு இவரது ஆய்வினடிப்படையில், இந்நோய்த்தடுப்பு முறையினைத் தீவிரப்படுத்தியது என்பது இவரது இத்தகைய ஆய்வின் சிறப்பை விளக்குவதாகும். இது, இந்திய ஊரகப்பொருளாதார நிலையில், ஒரு மாபெரும் மாறுதலுக்கு வித்திட்டது என்றே குறிப்பிடலாம். இப்பிரிவில், இவரது ஆய்வுகள், ஆங்கிலேயக் கால்நடைப் பதிவுக் குறிப்புகளிலும் இடம் பெற்றன.

டாக்டர் புருஷோத்தமன் அவர்களின் இவை குறித்த ஆய்வுக் குறிப்புகள் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற 'விலங்கின நோய்கள்' பற்றிய கருத்தரங்குகளிலும் இடம்பெற்றன; பல்வேறு கருத்தரங்க அமர்வுகளிலும் இவர் பங்கேற்றார். இவைகுறித்து நடைபெற்ற பட்டறைகள், பயிற்சி முகாம்களில், டாக்டர் புருஷோத்தமன் கருத்தாளராகப் பணியாற்றியுள்ளார். இந்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் பொருளுதவியில், 'வைரஸ் கிருமிகளின் பின்னடைவு', 'நீல நாக்கு வைரஸ்' ஆகிய இவ்விரு பொருட்கள் குறித்த ஆய்வுகளை டாக்டர் புருஷோத்தமன் முடித்துள்ளார்.

டாக்டர் புருஷோத்தமன் அவர்களின், கால்நடை, கோழியின நுண்ணுயிர் நோய்கள் குறித்த, உன்னதமான இவரது ஆய்வுக் கொடைகளை, அங்கீகரித்துச் சிறப்பிக்கும் வகையில், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் கவுன்சிலின் 1996-97ஆம் ஆண்டுக்குரிய, 'கால்நடை அறிவியல்' விருது இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு: **இரா.பரதன், எம்.ஏ.,**

**முதலாம் அட்டைப்பட (மேற்பகுதி) விளக்கம்:**

## நாடு காக்க மரணமடைந்த இராணுவ வீரர்களுக்கு நினைவு அஞ்சலி!

முதல் உலகப்போரில், இங்கிருந்து சென்று, பல நாடுகளில் போர் செய்து வீரமரணம் அடைந்தோரின் நினைவாக 1936ல் சென்னை அரசு தலைமைச் செயலகத்திற்குத் தெற்கே கட்டப்பட்டதுதான் போர் நினைவுச் சின்னமாகும்.

ஆண்டுதோறும் - டிசம்பர் திங்கள் 16 ஆம நாள், போர் நினைவுச்சின்னத்தில் மலர் வளையம் வைத்து, மறைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து வருவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டு 16.12.97 அன்று நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், போர்க்களங்களில் இன்னுயிர் ஈந்து, வீரமரணமடைந்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் **மேதகு ஆளுநர் செல்வி. எம். பாத்திமாபீவி** அவர்களும், மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு என். வீராசாமி அவர்களும், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி திரு. சுந்தர்ராம், ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி திரு.பி.பி. சிவமணி, ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி திரு. ஆர்.எஸ்.நாயுடு, சென்னை மாநகரக் காவல் துறை இணை ஆணையாளர் திரு. கேப்டன் ராதாகிருஷ்ண ராஜா, பிரிகேடியர் கே.வி. நாயர், ஏர்கமோடர் பி.என். டேவி, கமோடர் கே.வி. சுப்பிரமணியம், மேஜர் ஜெனரல் ஆர்.எஸ். நாக்ரா ஆகியோரும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். இராணுவத்தினர் அணிவகுத்து, முறைப்படியான பேண்டு வாத்திய இசையுடன் அஞ்சலி செலுத்தினர்.

# மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வலுவான - பேருந்துப் போக்குவரத்துப் பொதுத்துறை அமைப்பைத் தமிழ்நாடு பெற்றுள்ளது - முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்!



**15**வது தென்மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள், செயலர்கள், ஆணையாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் **12-12-97** அன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இம்மாநாட்டில் கேரள மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பி.ஆர்.குருப், கர்நாடக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் பி.சி.ஆர்.சிந்தியா, பாண்டிச்சேரி மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் ஏ.எம்.எச்.நாஜீம் ஆகியோரும் மகாராஷ்டிரா, கோவா உள்பட தென்மாநிலங்களின் போக்குவரத்துத் துறைச் செயலர்களும், ஆணையாளர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டிற்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.க. பொன்முடி அவர்கள் தலைமையேற்று உரை நிகழ்த்தினார்.

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்:

என் மனதில் உள்ள அதி முக்கியமான கவலை, சாலைப் பாதுகாப்பாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்திய சாலைகளில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறக்கின்றனர். உலகின் மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் இந்தியா ஒரு சதவிகிதத்தை மட்டுமே பெற்றிருந்த போதிலும், சாலை விபத்துக்களால் ஏற்படும் மரணங்களில் 6 சதவிகிதம் இங்கு நிகழ்கிறது. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நிலைமை மேலும் மோசமடையலாம்.

சாலை விபத்துக்களைத் தடுக்க நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சாலைகளைத் தரமுயர்த்துதல், ஓட்டுநர்களுக்குப் பயிற்சியளித்தல், சாலைப் பாதுகாப்பு பற்றி பொதுமக்களுக்குக் கற்பித்தல் ஆகியவை அவற்றில் சில நடவடிக்கைகளாகும். இது தொடர்பாகத் தமிழக அரசு ஏற்கனவே சில நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது.

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவது பற்றிய பல்வேறு அம்சங்களையும் ஒரு மையக்குழு பரிசீலித்து வருகிறது. சாலைகளை அகலப்படுத்துவதற்கு பெருமளவிலான முதலீடு ஒன்றைச் செய்வது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அடிக்கடி விபத்து நிகழக்கூடிய இடங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்குத் தேவையான நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்திய அரசும் சிலவகைக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்று நான் அறிகிறேன். சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்த மாநாடு விவாதிக்கும் என்று நான் நம்புகிறேன்.

## மோட்டார் வாகனங்களால் உண்டாகும் மாசு களையப்படவேண்டும்

கவலையளிக்கும் மற்றொரு பெரிய பிரச்சினை மோட்டார் வாகனங்களால் ஏற்படுத்தப்படும் மாசு ஆகும். மோட்டார் வாகனங்கள் நகர்ப்புறங்களில் பெருமளவில் மாசு ஏற்படுத்து பவையாக ஆகிவிட்டன.

சென்னை மாநகரத்திலும், காஞ்சிபுரம், திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் வாகனங்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியச் சான்றிதழ்கள் பெற வேண்டும் என்று தமிழக அரசு ஏற்கனவே உத்தரவுகள்

பிறப்பித்துள்ளது. இத்தகைய முயற்சிகளுக்கு வாகன உரிமையாளர்களின் முழு ஒத்துழைப்பும் அவசியமாகும். இது நகர்ப்புறச் சுற்றுப்புறச் சூழலை நிச்சயமாக மேம்படுத்தும்.

தற்போது சாலை வரிகளை வசூலிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டு வரும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் இந்தப் பிரச்சினைகளை கவனிக்க வேண்டும். அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலும் இத்தகைய முக்கிய இலக்குகளை எட்டுவதற்கான மறு பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். தகுதிவாய்ந்த பொறியாளர்கள், சுற்றுப்புறச் சூழல் வல்லுநர்கள், போக்குவரத்துத் திட்டமிடும் வல்லுநர்களைக் கொண்டு இத்துறையை வலுப்படுத்திட வேண்டிய அவசர அவசியத்தையும் கருத்திற் கொண்டாக வேண்டும்.

**பொதுமக்களுக்குப் போக்குவரத்தில் சிறப்பான சேவையினை ஆற்றிட**

பெருமளவிலான மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வலுவான பேருந்துப் போக்குவரத்து பொதுத்துறைப் அமைப்பை தமிழ்நாடு பெற்றுள்ளது. போக்குவரத்துக் கழகங்களின் செயற்பாடுகள் மாநில அரசால் தொடர்ந்து மறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பல போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்து குறைந்த எண்ணிக்கை கொண்ட மிகவும் இணைப்பான அமைப்புகளாக நாங்கள் மாற்றியிருக்கிறோம். இது நிர்வாகத் திறமையை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு சிறப்பான சேவை புரிய வழிவகுக்கும்.

**வரி விதிப்பு முறை ஆராயப்பட வேண்டும்**

பொதுத்துறை, போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய கவலைகளில் ஒன்று உயர்ந்து வரும் விலைவாசிக்கு ஏற்ப கட்டண வசூல் இல்லை என்பதாகும். எனவே, விலைவாசி உயர்வுக்கு ஏற்றபடி உரிய வகையில் கட்டணங்களைச் சீரமைப்பதற்கான பொருத்தமான முறை ஒன்று வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். போக்குவரத்துக் கழகங்களால் செய்யப்படும் செலவுகள், அதன் அமைப்பிற்குள் இருக்கும் திறமையின்மை காரணமாக அதிகரிக்கவில்லை என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இந்தக் கழகங்கள் சிறப்பான நிதி நிலைமையை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

போக்குவரத்துத் துறையில் தற்போது இருந்து வரும் வரிவிதிப்பு அமைப்பு ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். அதை எளிமைப்படுத்துவதற்கு, கணிசமான அளவுக்கு வாய்ப்பு இருப்பதாக நான் உணர்கிறேன். இது மாநிலங்களுக்கிடையே தேவையற்ற கடிதப் போக்குவரத்துகளை தவிர்க்கும். வரி அமைப்பை மாற்றி அமைப்பதற்கான வாய்ப்புப் பற்றியும் இம் மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும் என விழைகிறேன்.

**பேருந்துக் கட்டமைப்புகளில் மேம்பாடு**

தொழில் நுட்பப் பிரச்சினை குறித்தும் உங்கள் கவனத்தை ஈர்க்க நான் விரும்புகிறேன். நமது நாட்டில் கட்டப்படும் பேருந்துகள் 'பயணியர் - பேருந்துகளாக'க் கட்டப்படவில்லை. லாரிகளுக்கான அடிப்படை அமைப்புகளின் மீது உருவாக்கப்பட்டு, பேருந்துகளாகப் பயன்படுத்தப் படுபவையே அவைகள். எனவே பயணிகளுக்கான பெருமளவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முழுமையான பேருந்துகளாக இவற்றை உருவாக்கிடுவது அவசியம்.

சிறிய மோட்டார் வாகனங்களைப் பொறுத்த வரை நாடு தொழில்நுட்ப வெற்றியைச் சாதித்துள்ளது. ஆனால் கனரக வாகனங்களைப் பொறுத்தவரை அத்தகைய வெற்றி இன்னமும் வரவேண்டியுள்ளது. அதி நவீனத் தொழில் நுட்பங்களின் பலன்கள் இந்தக் கனரக வாகனங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது பயணிகளுக்குச் சிறப்பான வசதிகளும் பாதுகாப்பும் அளிப்பதற்கு வழி வகுக்கும்.

**நவீனமயமாக்குதலில் தமிழகம் முன்னணி**

இந்த மாநாட்டின் விவாதங்களை மிகவும் ஆர்வத்துடன் நான் கவனித்துக் கொண்டிருப்பேன். போக்குவரத்துத்துறை முழுவதையுமே நவீனப் படுத்துவதில் தமிழக அரசு முன்னணியில் இருக்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

★ ★ ★

## 1998 ஜூன் மாதத்தில் 1½ கோடி குடும்ப அட்டைகள் தமிழகம் முழுவதும் ஒட்டு மொத்தமாக வழங்கப்படும் -

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் பகுதி பகுதியாகவும், படிப்படியாகவும் புதிய குடும்ப அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக சுமார் 1½ கோடி புதிய குடும்ப அட்டைகளும் 1998 ஜூன் மாதத்தில், மாநிலம் தழுவிய வகையில், ஒட்டு மொத்தமாக வழங்கிட, ஏதுவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் வரை, தற்பொழுது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளையே, பொதுமக்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அரசு அறிவித்துள்ளது.

# நூல் நயம்

## கேள்விக் குறிகள்

ஆசிரியர் : உதயை மு. வீரையன்

வெளியிட்டோர் :

மக்கள் பதிப்பகம்

31, வேங்கடேசன் தெரு, சேப்பாக்கம்,
சென்னை-600 015

பக்கம்: 128 விலை : ரூ.28

வலியவர் - வறியவர்; நடுத்தரவர்க்கத்தார்களின் எதார்த்த முறையிலான நாம் அன்றாடம் காணும் காட்சிகளே, கதாபாத்திரங்களாக உலாவருகின்றன. இத்தகைய 13 சிறுகதைகளின் தொகுப்பே இது.

***

## காத்தவராய நாடகம்

பதிப்பாசிரியர்: கு. இராஜேஸ்ரி

பக்கம்: 139 விலை: ரூ.30

மக்கள் மனதில் இருந்து, சுவடியில் ஏறியுள்ள நாட்டுப்புற நாடகம் இது. காத்தவராயனின் வீரம் மட்டுமல்ல; காதலும் இதில் சுவைபடச் சொல்லப் பட்டுள்ளது.

***

## சடூத்தலம் (வீரசைவ தத்துவம்)

பதிப்பாசியிர்: மு. கருணாநிதி

பக்கம்: 175 விலை:ரூ.40

பல பக்தி இலக்கியங்களைக் கொண்ட தமிழ் மொழியில் சைவம் சார்ந்த நூல்கள் பல; அவற்றுள் வீர சைவம் சார்ந்த இந்நூல் சமய ஆய்வுகளுக்குத் துணை புரிவதாக அமைந்துள்ளது.

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை-600 113.

## அழுதால் அரும்பு உதிரும்

ஆசிரியர்: எஸ். மதுரகவி

பக்கம்: 103 விலை:ரூ.20

வாழ்வின் ஏற்றத் தாழ்வுகள், அன்றாடச் சம்பவங்களின் படப்பிடிப்புகளைக் கருவாகக் கொண்ட 22 சிறுகதைகளின் தொகுப்பு நூல் இது.

***

## நிலவில்லாத வானம்

பக்கம்:67 விலை:ரூ.13

எளிய தமிழ்ப் பாடல்கள் 30 அடங்கியிருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் சில கவிதைகள் அதற்கான காட்சிகளோடு பாடப்பட்டிருக்கின்றன.

***

## சிப்பிக்குள்ளே சின்னத் தீ

ஆசிரியர்: மகிழ்நன்

பக்கம்: 120 விலை:ரூ.23

இந்நூலில் 20 சிறுகதைகள் உள்ளன. பெரிதும் இக்காலச் சம்பவங்களை விளக்கிச் சொல்லுவனவாகவும் - சாதாரண நடையிலும் எழுதப்பட்ட கதைகள்.

இம்மூன்று நூல்களையும் வெளியிட்டோர்:

மணிமேகலைப் பிரசுரம்
அஞ்சல் பெட்டி எண் 1447
4, தணிகாசலம் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை-600 017

***

## உயிர்ப்பிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்

ஆசிரியர்: பி.எல்.ராஜேந்திரன்

வெளியிட்டோர்:

சங்கீதா பதிப்பகம்,
14/2, பீட்டர்ஸ் காலனி, இராயப்பேட்டை,
சென்னை-600 014

பக்கம்: 191 விலை:35

கிராம ஊராட்சி பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி - தேர்தல்கள் அமைப்பு பதவி வகிப்போர் பற்றிய முழு விவரங்கள் கொண்ட புத்தகம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906

# அச்சாக அப்பாவைப் போல்...



உங்கள் மகனாக அவன் பிறந்தபோது, உறவினர் "அச்சாக அப்பாவைப்போல்" என்றார்கள். உங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவன் தவழ்ந்த போது, தளர் நடை பயின்றபோது, மழலை பேசியபோது நீங்களும் உங்கள் மனைவியும் உலகையே மறந்தீர்கள். உங்கள் உலகமாக அவனை நினைத்தீர்கள்.

உங்கள் மகனைப் பற்றிய கனவுகளால் மனதை நிறைத்துக் கொண்டீர்கள்.

ஆனாலும்.... உங்கள் வாழ்வின் உயிர்த்துடிப்பான உங்கள் மகனை மறந்து, சில நிமிடத் தடுமாற்றங்களால் தகாத உறவுகளைத் தேடிப்போவது நியாயம்தானா? எய்ட்ஸ் என்னும் கொடிய நோயை விலை கொடுத்து வாங்குவது தேவைதானா?

**எங்கோ சுகம் தேடுமுன்**
**ஒரு நொடி சிந்தியுங்கள்**

SASI-163-97

ஆணுறை - குடும்ப நலம் காக்கும்.
எய்ட்ஸ் பயம் போக்கும்.

**தமிழ்நாடு எய்ட்ஸ்**
**கட்டுப்பாட்டு அமைப்பு**

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
தொலைபேசி: 825 5467/825 5261/825 4917.
24 மணி நேர ஹாட்லைன்: 825 6882/825 6864


தமிழரசு
பதிவு எண். M. 867
Licence No. TN/MS(C)/P
